

# சந்நிதி

பல்சமய காலாண்டிதழ்

பொங்கல் மலர்







சிவகாமி அம்மாள்
பப்ளிகேஷன்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி - மார்ச் 1998



எண்ணு மெண்ணங்கள் யாவினும் வெற்றி
எங்கும் வெற்றி யெதனிலும் வெற்றி
கண்ணு மாருயி ரும்மென நின்றாள்
காளித் தாயிங் கெனக்கருள் செய்தாள்
மண்ணுங் காற்றும் புனலு மனலும்
வானும் வந்து வணங்கிநில் லாவோ?
விண்ணு ளோர்பணிந் தேவல்செய் யாரோ
வெல்க காளி பதங்களென் பார்க்கே.

- மகாகவி பாரதியார்


*Sponsored by:*

**GRANDMET (CEYLON) LTD.**
**GRANDMET TRAVELS & TOURS (PVT) LIMITED.**

**4, Mile Post Avenue, Colombo 3, Sri Lanka.**

Tel : **565391 - 4** Fax : **565390, 575649**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Shrine
சந்நிதி

பல்சமய காலாண்டிதழ்

மலர் 1 இதழ் 2

ஜனவரி - மார்ச் 1998

ஆசிரியர்:
வே. வரதசுந்தரம்

வெளியீட்டாளர்கள்:



சிவகாமி
அம்மாள்
பப்ளிகேஷன்ஸ்

39, 36ஆவது ஒழுங்கை
கொழும்பு – 6
இலங்கை

தொலைபேசி: 596253

அச்சீட்டாளர்:
பிறின்ரெல் மீடியா
த. பெ. இல. 37
தெஹிவளை
இலங்கை.
தொலைபேசி: 730746

# ஆமாறு இதோ!

மார்கழிக்குப் பெண்ணாகத் தைமகள் பிறந்துவிட்டாள்.
புத்தாண்டு மங்கை உலாவருகிறாள்.
புதிய நூற்றாண்டாம் புதுயுக நங்கை புலரப் போகிறாள்.

இவ்வரிய தரிசனம் எம்மிற் பலருக்குக் கிடைக்கப் போகிறது. இப்பேறு கிடைக்கும் அதேவேளை பாரிய கடப்பாடும் நமக்குண்டு. சுயவிமர்சனம் மூலம் நம்மை நாமே உருவாக்குவோமாக. எமது விடிவு எமது கையில்.

"எமக்கு எது தேவை என்பது எமக்குத் தெரியும். அது எங்கு இருக்கிறது என்பதையும் நாம் அறிவோம். அதை அடையும் வழியும் நமக்கு நன்கு தெரியும். இருப்பினும் எம்மிற் பலர் அதனை அடைவதில்லை. காரணம் சாதனை இன்மை. நாம் நாடுபவை சாந்தியும் ஆனந்தமுமே!" இவ்வாறு பகவான் சாயி பாபா எமது நிலையை விளக்குவார்.

மானுட சேவை பலன் கருதாப் பணி மூலம் அகந்தை ஒழிந்து இறைவழிபாடு மூலம் சாந்தியையும் ஆனந்தத்தையும் நாம் துய்த்தல் வேண்டும் என்பதே பகவான் பாபா காட்டும் பாதை.

மானுட சேவையும் இறைவழிபாடும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்பர் அருளாளர்கள். அத்தகைய வழிபாட்டில் பக்தி மார்க்கத்தில் மனம், வாக்கு, காயம் மூன்றும் ஒருங்கிணைய வேண்டும். இறைவனிடத்து இடையறாக் காதல் பெருக வேண்டும்.

நமது நீண்ட பயணத்தில் எம்முன்னே இரு பாதைகள் பரந்து காணப்படுகின்றன. ஒன்று ஆமாறு; மற்றையது சாமாறு.

மனிதருக்கு ஆக்கந் தருவது, இன்பம் பயப்பது, எம்மை ஆன்மீக மேம்பாட்டுக்கு இட்டுச் செல்வது ஆமாறு.

அதேவேளை நமக்கு அழிவைத்தருவது மனச்சலனத்தை ஏற்படுத்துவது துன்பத்தை அளிப்பது சாமாறு. அழிவைத் தரும் வழி சாமாறு ஆகும்.

ஆமாறு இருக்க நாம் சாமாறு விரைவதால் சாந்தியும் ஆனந்தமும் கானல் நீரென ஏமாற்றம் தருகின்றன.


இவற்றை விளக்கும் எமது நெஞ்சை அள்ளும் அருள் நெறிப் பாடல் ஒன்றைப் பார்ப்போம்.

ஆமாறுன் திருவடிக்கே
அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன்
புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில்
தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்
சதுராலே சார்வானே.

– திருவாசகம் (திருச்சதகம்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

குருபாதம்

## நல்லை. திருஞானசம்பந்தர் ஆதீனம்
## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

*(இரண்டாவது குருமஹா சந்நிதானம்)*

## அருளாசிகள்

"சந்நிதி" சஞ்சிகை கண்ணுற்றோம். ஆக்க பூர்வமான கருத்துக்களையும் நவீன சிந்தனைகளையும் உள்ளடக்கிய தாக "சந்நிதி" அமைந்துள்ளது.


சொந்த மொழியிலும் சர்வதேச மொழியிலும் சஞ்சிகை வெளிவருவது அனைவரும் படித்துப் பயன்பெற வாய்ப்பாக உள்ளதோடு விஞ்ஞானம் வளர்ந்து செல்லும் இக் காலத்தில் எல்லா மக்களுமே அமைதியில்லாது தத்தளிக்கின்ற நேரத்தில் இம்மலர் வெளிவருவது எல்லோருக்கும் மனச் சாந்தியைக் கொடுக்கும்.

உங்களுடைய பணி மேலும் வளர்ந்து சிறக்க இறைவனை வேண்டுகின்றோம்,

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

குரு மஹாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய ஸ்வாமிகள்



## பெயர் சூட்டிய பெருந்தகை

எமது ஆங்கில சஞ்சிகைக்கு "Shrine" என்று பெயரிட்ட பின்னர் தமிழுக்கு ஏற்ற பெயர் தேடினோம். பல பெயர்கள் மனதில் தோன்றின. எனினும் எதுவுமே தோதான பெயராகத் தோன்றவில்லை.

இந்த நிலையில் எனது பத்திரிகைத் துறை ஆசான் திரு. எஸ்.டி. சிவநாயகம் ஐயாவிடம் சென்று எமது ஆற்றாமையை எடுத்துக் கூறி "பிள்ளை"க்குப் பெயர் சூட்டும்படி வேண்டினோம். அவருடைய துணைவியார் திருவாட்டி மங்கலம் சிவநாயகம் அவர்களும் உடனிருந்தார்.

அன்னார் எடுத்த மாத்திரத்தே "சந்நிதி" என்று பெயர் சூட்டினார். அது எமது நெஞ்சத்தை அள்ளும் அருமையான பெயராக அமைந்து எமக்குப் பெருமகிழ்வைத் தந்தது.

"சந்நிதி" நல்ல பெயர். உங்கள் இதழின் கொள்கைகளுக்கு ஏற்ற பெயர். பொருள் பொதிந்த பெயர். வாசகர் நாவில் இலகுவாக நடமிடும். "சந்நிதி" நீடித்து நிலைக்கும்"– இவ்வாறு அவர் ஆசீர்வதித்தார்.

இவ்விதழுக்குப் பெயர் சூட்டிய பெருந்தகையாம் திரு. சிவநாயகம் அவர்களுக்கு என்றும் நன்றியுடையோம்.

–ஆசிரியர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாம்பல் தீவு
## வடலியடிப் பிள்ளையார்
## திருவூஞ்சல்

ஆரியமுஞ் செந்தமிழும் கால்களாக
அகிலமொழி ஆங்கிலமே விட்டமாக
சீரிலங்கு கலைஞானங் கயிறதாக
செழும்புலவர் அன்புள்ளம் பலகையாக
வாரிசூழ் உலகமெலாம் வடந்தொட்டாட்ட
வடலியடிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்.
தாரணியோர் புகழ்பதிசேர் சாம்பல்தீவு
தனிலமர்ந்த கரிமுகனே ஆடீரூஞ்சல்.

செம்பாட்டான் வெள்ளையொடு கறுத்தக் கொழும்பான்
தெவிட்டாத விலாட்டொடு தேன் சுரக்கும்
அம்பலவி கிளிச்சொண்டன் மாம்பழங்கள்
அணியணியாய் வீடெங்கும் அணி செய்யும்
கொம்பெல்லாம் பலாக்கனிகள் வெடித்துத் தூங்கும்
கோடில்லாப் பனை நிலத்தில் வாசம் வீசும்
செம்பழங்கள் கொட்டிநிற்கும் சாம்பல் தீவில்
சிறுவடலிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்.

பாடுபட்டிங் குழைப்பாரைப் பார்க்கும் கண்கள்
பணிசெய்யும் அடியாரை ஈர்க்கும் கண்கள்
மாடுகட்டிச் சூடடிக்கும் உழவர் தம்மை
மகிழ்ந்தணைத்து வரமளிக்கும் கருணைக் கண்கள்
காடுவெட்டிக் கழனியாக்குஞ் சாம்பல் தீவார்
காதலித்துப் போற்றிவரும் கமலக் கண்கள்
வாடிவருவார்க்கருளும் கண்கள் கொண்ட
வடலியடிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்.



புலவர்
பெ. பொ. சிவசேகரனார்

## உலாக்கொண்டெழுவாய் தைப்பாவாய்!



**கவிஞர் கண்ணதாசன்**

1 கண்ணார் கரும்பும் கதலிகளும் பூச்சரமும்
கண்ணாரும் மஞ்சள் சரங்கோத்த மங்கலமும்
கண்ணாரக் கண்டு கையாரச் சேர்த்தணைத்து
விண்ணாரும் நீலம் விழியார்ந்த சேயிழையார்
பண்பாடிப் பாடிப் பசியார வந்தவர்க்கு
உண்ணீரென் றூட்டி உறவுரைக்கும் முற்றத்துப்
பெண்ணாய்ப் பிறந்த பெரும்பாவாய்! நின் சீர்மை
உண்ணாவில் ஊற்றி உளம் செரித்தேன் தைப்பாவாய்!

2. காளை மணியோசை களத்துமணி நெல்லோசை
வாழை இலையோசை வஞ்சியர்கை வளையோசை
தாழை மடலோசை தாயர்தம் மத்தோசை
கோழிக் குரலோசை குழவியர்வாய்த் தேனோசை
ஆழி அலையோசை அத்தனையும் மங்கல்மாய்
வாழிய பண்பாடும் மாயமொழி கேட்டிலையோ
தோழியர் கைதாங்கத் தூக்கியபொன் னடிநோக
மேழியர்தம் இல்லத்து மேலெழுவாய் தைப்பாவாய்!

3. குற்றந்தன் சொத்தாகக் குணங்கடையிற் சரக்காகச்
கற்றுந்தன் கல்வி கருதாத நெஞ்சினைப்
பற்றுந்தன் பற்றாலே பம்பரம்போல் ஆடுகிறேன்
முற்றாத நெஞ்சங்காண் முகையவிழா உள்ளுயிர்காண்
பெற்றார்க்குப் பிள்ளை பிறந்தார்க்குத் தந்தையென
வற்றாமல் நீளுமுயிர் வாழ்வுக்கோர் வழிதருவாய்
அற்றாரும் போற்றும் அருள்வடிவே தைப்பாவாய்.


4. போயவெலாம் போயொழியப் புதைந்தவெலாம் புதையத்
தீயவெலாம் சேர்ந்தொழியச் சிறுமையெலாம் அழிய
மாயமனத் துள்ளுலவும் மயக்கமெல்லாம் தீர
ஆயபயன் கைமலர அளித்த பலன் மீளத்
தூயவர்தம் இல்லத்துமிசைச் சுற்றமெலாம் கூட
வாயிதழில் தேன்வடியும் மங்கையர் பண்பாட
மேயவிலங் கூர்ந்துசெலும் வெள்ளெனும் பாற்பொழுதில்
நீயுமுலாக் கொண்டெழுவாய் நிறைந்தெழுவாய் தைப்பாவாய்!

5. தானே தலையாகத் தனக்குள்ளே தான் நிறைந்த
மானே! மணியே! மஞ்சளே! குங்குமமே!
தேனே! திருவே! திருவுடையார் கைப்பொருளே!
மீனேறு காவிரியே! வெள்ளரிசிப் பாற்குழம்பே!
வானேறி மேகம்விழ மண்ணுழவர் பொன்னுதிர
வானாகி வந்தெம் உயிர்காக்கும் மெய்வடிவே!
பூநேர் விழியாரும் பூத்துவரும் குலத்தளிரும்
வான்வாழ்வு வாழ வாழ்த்தாயே தைப்பாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோதகப் பிரியர் !



பிள்ளையார் சுழி போடாமல் நாம் ஒரு காரியத்தையும் தொடங்குவதில்லை. இச் சுழிக்கு தனி ஒலி இல்லை. எனவே இதனை மௌனாக்கரம் என்பர். இங்கு சுழி தாடலை போல் அகரமாகிய உயிர் உகரமாகிய இறைவனுடன் இணைந்து அகரமாகிய உயிர், வடிவம் அற்று உகரவடிவாய் – பிள்ளையார் சுழியாய் – அத்துவிதமாய் நிற்கும் தத்துவத்தைக் காணலாம்.


ஆற்றங்கரையிலும் குளக்கரையிலும், வீதியிலும், அரச மரத்தடியிலும், கூரை இன்றியும் எழுந்தருளி உள்ள விநாயகர் பாரதம் எழுதிய பெருமை உடையவர், எடுத்த காரியம் சித்தியடையவும், புத்தி நல்ல கூர்மையாக இருக்கவும் உதவி செய்யும் விநாயகர் சித்தி புத்தி விநாயகர் என்று அழைக்கப்படுகிறார்.

இந்து மதங்கள் ஆறினுள் ஒன்றான காணாபத்தியம் கணபதிக்குப் பெருமையும் முக்கியத்துவமும் கொடுத்து வணங்கும் சமயமாகும். கணங்களுக்கெல்லாம் தலைவரானதால் கணபதி என்றும், விக்கினங்களைப் போக்குவதால் விக்கினேஸ்வரன் என்றும், தனக்கு ஒரு தலைவனில்லாததால் விநாயகன் என்றும் அழைக்கப்படும் எமது பிள்ளையார் ஓங்காரம் என்னும் பிரணவசொரூபி, பஞ்சபூதங்களின் அதிபதியாகிய இவரை வணங்கியே எல்லோரும் சகல கருமங்களையும் ஆரம்பிக்கின்றனர்.

**கணங்களுக்கெல்லாம் தலைவரானதால் கணபதி என்றும், விக்கினங்களைப் போக்குவதால் விக்கினேஸ்வரன் என்றும், தனக்கு ஒரு தலைவனில்லாததால் விநாயகன் என்றும் அழைக்கப்படும் எமது பிள்ளையார் ஓங்காரம் என்னும் பிரணவ சொரூபி.**

குட்டிக் கும்பிடல்

விநாயகரை வழிபடும் முறை ஏனைய தெய்வ வணக்கத்தை விட வேறுபாடு கொண்டது. குட்டிக் கும்பிடுதலும், தோப்புக்கரணம் போடுதலும் வழக்கமாக உள்ளது. கயமுகாசுரன் என்ற அரசன் தானே பெரியவன் என்றும் தேவர்கள் தன்னைக் குட்டிக் கும்பிட வேண்டும் என்றும் பணித்து வைத்திருந்தான். இதனால் அவன் விநாயகரால் அழிக்கப்பட்ட பின் இவ்வாறு வழக்கம் காணப்படுகின்றது.



எஸ். டி. யோகேந்திரா
கொழும்பு

ஒரு சமயம் விநாயகப் பெருமான் அகத்திய முனிவருடன் விளையாடுவதற்கு பிராமணச் சிறுவனாக வந்தபோது அகத்தியர் அவரைக் குட்டுவதற்குக் கை ஓங்கினார். அவர் உடனே மறைந்து தன் சுய உருவத்தைக்க ாட்ட, அகத்தியர் ஓங்கிய கையினால் தன் தலையில் குட்டி பிழையைப் பொறுத்தருள வேண்டினார். இதனால் இவ்வணக்கம் விநாயகரின் அருள் பெற உதவுகின்றது.

உருவ விளக்கம்

விநாயகர் உருவத்தை நோக்கின், பேழைவயிறு உலகம் யாவற்றையும் தம்முள் அடக்கி இருப்பதைக் காட்டுகிறது. விநாயகரின் ஐந்து திருக்கரங்களை நோக்கின் மேலே உள்ள வலது கரம் அங்குசத்தையும், இடதுகரம் பாசத்தையும், கீழேயுள்ள வலது கரம் ஒடித்த ஒற்றைத் தந்தத்தையும், இடது கரம் மோதகத்தையும் தாங்கி உள்ளன. விநாயகரின் வாகனம் மூஞ்சூறு, இதன் தத்துவம் மூஞ்சூறு மண்ணைத் தோண்டுவது போல் அறிவைத் தோண்டுபவன் ஞானத்தைப் பெறுவான் என்பதாகும்.

விநாயகரைப் பூசிக்கும் பொழுது மஞ்சள், கல், செம்பு, பளிங்கு, முத்து, பவளம், தந்தம், வெள்ளெருக்கு வேர், அத்திமரம், அரைத்த சந்தனம், வெண்ணீறு, சர்க்கரை ஆகியவற்றால் உரு அமைத்து வழிபடுவர், தைப்பொங்கலன்று பசுஞ் சாணியினாலும், திருமணம் முதலிய நற்காரியங்களுக்கு மஞ்சளாலும், விநாயக சதுர்த்தி அன்று புற்று மண்ணாலும் பிள்ளையார் பிடித்து வழிபடுவர். வழிபாட்டின் போது கும்பத்திலும் கூர்ச்சத்திலும், ஓம அக்கினியிலும் விநாயகரை ஆவாஹனம் செய்து வழிபடுவர்.

மோதகப் பிரியர்

விநாயகருக்கு உகந்தவை அறுகம்புல், வன்னிப்பத்திரம், மந்தாரைப்பூ, அத்துடன் சிவபிரானுக்குப் பிடித்தவையும் இவருக்கும் பிடிக்கும். விநாயகருக்கு நைவேத்தியங்கள் பிடிக்கும். இவர் போசனப் பிரியர், எனவே எப்பொழுது வழிபட்டாலும் உணவுகள் படைக்கப்பட வேண்டும். ஔவையார் 'பாலும் தெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முந்தல் விநாயகர் ஆலய நவக்கிரக பீட பிரதிஷ்டை



வடமேல் மாகாணத்தில் ஆங்கிலேயக் கால்வாய் ஓரமாக அமைந்திருக்கும் முந்தல், பாலையடி ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் அண்மையில் புதிதாக நவக்கிரக மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு விநாயகருக்கும், மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் செய்து வைக்கப்பட்டது. முந்தலில் இருந்து கற்பிட்டி வரை செறிந்து வாழுகின்ற இலட்சக் கணக்கான இந்துக்களுக்கு வழி பாட்டுக்கென நவக்கிரக மூர்த்திகள் இல்லாத நீண்ட கால குறை இப்போது நீங்கியுள்ளது. தினமும் இந்துக்களும், பௌத்த மக்களும் இந்த ஆலயத்துக்கு வந்து பொங்கல் வைத்து நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுகிறார்கள். புரட்டாதி, சனிக் கிழமைகளில் அநேகமானோர் நவக் கிரகத்துக்கு எள் எரித்து வணங்கியதையும் காணமுடிந்தது.



கே. சுபாஷ்சந்திரபோஸ்
கொழும்பு

முந்தல் பிரதேச இந்துக்களின் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி சிதம்பர விடுதியைச் சேர்ந்த நா. கணபதிப்பிள்ளை என்ற அடியவர் தனது உபயமாக மாமல்லபுரத்தில் இருந்து நவக்கிரக விக்கிரகங்களை பெரும் பொருட் செலவில் தருவித்து வழங்கியதுடன், கும்பாபி ஷேகத்துக்கும் உதவி வழங்கியிருந்தார். முந்தல் விநாயகர் பாலை மரத்தின் கீழ் உறைந்துள்ளார். பாலை மரமே இவ்வாலயத்தின் விருட்சமாகும். பாலை யடி விநாயகர் மிகவும் சக்தி வாய்ந்த தெய்வமாக இப் பிரதேச அடியார்களால் போற்றி வணங்கப்படுகிறார். ஆதலால் தினமும் அடியார்கள் பஸ் வண்டி, வாகனங்களில் இருந்து இறங்கி வழிபட்டுச் செல்வதைக் காண முடிகிறது. காலப்போக்கில் இந்த ஆலயம் முறிகண்டி பிள் ளையார் ஆலயத்தைப் போன்று சக்திமிக்க ஆலயமாக மாறும் என்பது உறுதி.

தேனும் பாகும் பருப்பும் நான் தருவேன் நீ எனக்கு சங்கத்தமிழ் மூன்றும்தா' என்று பாடுகிறார். அருண கிரிநாதரும், 'கைத்தல நிறைகனி அப்பமொடவல் பொரி கப்பிய கரிமுகன் அடிபேணி' என்கிறார். 'மோதகப்பிரியாய நமஹ' என்று கணபதி அஷ்டோத்திரத்தில் ஒரு நாமாவளி உள்ளது. சர்வலோக மாதாவின் மூத்த பிள்ளையான பிள்ளையார் தனது துதிக்கையினால் ஔவைப் பிராட்டியைத் தூக்கி சேரமான் பெருமானுக்கும் சுந்தரார்க்கும் முதலாகக் கைலாசத்தில் சேர்ப்பித்தார். திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பிக்கு விநாயகப் பெருமானே திருவருள் புரிந்து வழி காட்டினார். எனவே இவர் பிள்ளையாரைப் போற்றிப் பாடிய பாட்டு இது

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே
விண்ணிற்கு மண்ணிற்கு நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

இந்தியாவிலும் இலங்கையிலும் சிறப்பாகக் கொண்டாடப்படும் தெய்வம் விநாயகப் பெருமானே. பிள்ளையார் இல்லாத கிராமமே இந்தியாவில் இல்லை. இலங்கையிலும் சைவர்கள் மட்டுமன்றி, பௌத்தர்களும் கணபதி வணக்கத்தை வழக்கமாகக் கொண்டுள்ளனர். சாந்த சொரூபியான பிள்ளையாரை நமது சகல காரியங்களிலும் முன்னிறுத்தி வணங்கி, நாமும் அருள் வேண்டிப் பிரார்த்தித்து முன்னேறுவேமாக.

அட்டைப்பட விளக்கம்

முன் அட்டைப்படம்:
- அனுமனின் சிவலிங்க வழிபாட்டில் இராமபிரான்
- பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா அருள் பொழியும் காட்சி.

பின் அட்டைப்படம்:
- அவுஸ்திரேலியாவில் சமயத் தொண்டாற்றி வரும் சுவாமி சுவரூபானந்தா கொழும்பு சின்மயா மிஷன் ஏற்பாடு செய்த கீதைப் பேருரைகளை நிகழ்த்து கிறார்.
- செந்தமிழ் பணியும் சிவத்தொண்டும் இலங்கை யில் ஆற்றுகின்ற சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இம்மாதம் (ஜனவரி) 7ஆம் திகதி தமது 73ஆவது வய தினை நிறைவு செய்கிறார். அம்மையாரை மேலும் நீடித்த ஆயுள் பெற்று, பல்லாண்டு வாழ்ந்து தன் அளப்பரிய சேவையினைத் தொடர வேண்டுமென 'சந்நிதி' பிரார்த்தித்து வாழ்த்துகின்றது.
- கொழும்பில் 'ஆன்மீகமும் அரசியலும்' என்ற தலைப்பில் பிரம்மகுமாரிகள் நிலையம் ஏற்பாடு செய்த கருத்தரங்கில் பிரம்மகுமாரி டாக்டர் நிர்மலா கஜாரியா அருளுரை ஆற்றுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினியிலும் இரக்க சிந்தனை



அன்னை தெரேஸா

ஒரு நாளிரவு ஒரு மனிதன் என்னிடம் வந்தான். "எட்டுப் பிள்ளைகளைக் கொண்ட ஒரு குடும்பம் பசியினால் வாடுகிறது; அவர்கள் பல நாட்களாகச் சாப்பிடவில்லை போலத் தெரிகிறது" என்றான்.

இதைக் கேட்ட நாம் துடித்துப் போனோம். கொஞ்சம் உணவுடன் அக் குடும்பத்தார் வீட்டுக்குச் சென்றோம். அக் குடும்பச் சிறார்களின் அழகிய முகங்கள் பசிக் கொடுமையால் மாறுபட்டிருந்ததை நேரில் கண்டு பதறிப் போனோம். அவர்கள் முகத்தில் கவலை ரேகைகள் தெரியவில்லை; ஆனால் பசிக் கொடுமை கொப்பளித்தது.


நாங்கள் கொண்டு சென்ற உணவை அவர்களின் தாயாரிடம் கொடுத்தோம். தாயார் உணவை தனது பிள்ளைகளுக்குப் பரிமாற முன்பு இரு பங்குகளாகப் பிரித்தார். ஒரு பங்கு உணவை எடுத்துக் கொண்டு வெளியே போய் வந்தார். "நீங்கள் எங்கே அம்மா போனீர்கள்?" இது என் கேள்வி.

"எமது அயல் வீட்டாரிடம் போய் வந்தேன். அவர்களும் பட்டினி" இது அவர் பதில்.

அவரது அயலவர் இஸ்லாமிய குடும்பத்தவர்கள். தாம் பட்டினி கிடக்கும் போதும் மற்றவர்களின் பட்டினி பற்றிச் சிந்திக்கும் நல்ல மனப்பாங்கினை; யேசுவின் இரக்கத்தைக் கண்டு மகிழ்ந்தேன்.

மதவேறுபாடு கடந்த மனிதாபிமானம் இது!

# நபிகள் நாயகம் காட்டிய பொறை



கலைஞர் மு. கருணாநிதி

நபிகள் நாயகத்தின் வரலாற்றை நீங்கள் அறியாதவர்கள் அல்ல.

அவர் நாள்தோறும் ஒரு தெரு வழியாகச் செல்லும் பொழுது ஒரு மாடி வீட்டிலிருந்து இஸ்லாம் மார்க்கத்தைக் கட்டோடு வெறுத்த ஓர் அம்மையார் குப்பைக் கூடையை அவருடைய தலையிலே கொட்டுவார்.

நாள்தோறும் இது வாடிக்கை. அப்படிக் கொட்டியவுடன் நபிகள் நாயகம் அவரைப் பார்த்துச் சிரித்து விட்டு அந்தத் தெருவைக் கடந்து செல்வார்.

இப்படிச் சென்று கொண்டிருந்த நபிகள் ஒரு நாள் அந்த வழியாகச் சென்ற போது மாடி வீட்டைக் கடந்தார்.

வழக்கம்போல் குப்பை தலையிலே கொட்டப்படவில்லை. அங்கே நின்று விட்டார். கீழே இருந்தவர்களிடம் "ஏன் இன்று மாடியில் இருந்து குப்பை வர வில்லை?" என்று கேட்டார். "அந்த அம்மா இன்றைக்கு நோயாளியாகப் படுத்திருக்கின்றார்," என்று சொன்னார்கள்.

நபிகள் நாயகம் உடனடியாக மளமளவென மாடியேறினார். அந்த அம்மையாரைப் பார்த்தார். "உடம்பு எப்படி இருக்கிறது?" என்று விசாரித்தார். மறுநாளே அந்த அம்மையார் இஸ்லாம் மார்க்கத்திலே சேர்ந்தார் என்பதுதான் நபிகள் நாயகத்தின் வரலாற்று நிகழ்ச்சி. இது போன்ற மனப்பக்குவம் நமக்குத் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆனந்தம், ஆனந்தம்!"
## -பகவான் சாயி பாபா



பல பக்தர்கள் என்னிடம் வந்து முறையிடுகிறார்கள். "சுவாமி, நான் துன்பமடைகின்றேன்" என்கிறார் ஒருவர். இன்னொருவர் "தலைவலியால் அவஸ்தைப் படுகின்றேன்" என்கிறார். வேறொருவர், "என்னால் வயிற்று வலியைத் தாங்க முடியவில்லை" என்கிறார்.

அவர்கள் எல்லோருக்கும் ஒரே பதிலைத் தான் அளிக்கின்றேன்.

"சந்தோஷம்" என்பதே எனது பதில்.

கணவனை இழந்த மனைவி வந்து என்னிடம் முறையிடுகிறாள். அவளுக்கும் நான் 'சந்தோஷம்' என்றே கூறுகின்றேன்.

இவ்வாறு துன்பங்களுடன் வருபவர்களுக்கெல்லாம் நான் ஏன் இதே பதிலைக் கூறுகின்றேன் என நீங்கள் ஆச்சரியப்படலாம்.

'சந்தோஷம்' என்பது பொதுவான மகிழ்ச்சியைக் குறிப்பது அல்ல. உலகம் சார்ந்த வெற்றி அல்லது லாபங்களிலிருந்து கிடைக்கப்பெறும் இன்பத்தைக் குறிப்பதல்ல. தோன்றி மறைகின்ற அல்லது அற்ப இன்பத்தைக் குறிப்பது அல்ல – 'சந்தோஷம்' என்ற சொல்.

'சந்' என்பது நேர்மையான வழிகளில் கௌரவமான முறைகளில் சம்பாதிக்கும் எதையும் குறிக்கிறது. 'தோஷம்' என்பது புனிதமானது; புனிதமிக்க மேன்மை, பெருமகிழ்ச்சி ஆகியவற்றையும் குறிக்கும். கடவுளிடமிருந்து உங்களுக்குக் கிடைக்கும் பரிசுகளில் மிகவும் பெரிய பரிசு 'சந்தோஷம்' ஆகும்.



தமிழில் :
சி. குருநாதன்
ஆசிரியர் 'சிவநெறி'

சந்தோஷத்துக்கு எதிரானது துயரம். துயரம் ஆசையினால் வருவது. துயரத்துக்குக் காரணம் ஆசை. ஆசை நம்பிக்கையைத் தூண்டி இறுதியில் ஏமாற்றத்தை ஏற்படுத்துகிறது அல்லது நம்பிக்கையை இழக்க வைக்கிறது. ஒரு ஆசை இன்னொன்றுக்குக் காரணமாகிறது. ஒரு ஆசை நிறைவேறிய பின்னர் அது நூறு ஆசைகளாக அதிகரிக்கிறது. காலைச் சூரியனின் நிழல் போன்றது ஆசை. அதனைப் பிடிக்க நீங்கள் ஓடும்போது அது நீள்கிறது. அது உங்களுக்கு ஆசைகாட்டி, உங்களை முட்டாளாக்குகிறது. ஆசைக்கு நியாயப்படுத்தும் தன்மையோ, முடிவோ இல்லை.

ஆகவே 'சந்தோஷம்' என்பது கடவுளின் அதி உயர் ஆசீர்வாதமாகும். கடவுள் தன்னிடமுள்ள எல்லையற்ற அன்பினால் தீராத தாகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார். சந்தோஷம் தரும் பலனுக்குச் சமமாக எந்த வளமும் பேறும் கிடையாது.

பூரண திருப்தியுடன், புனிதமான மன நிறைவுடன் ஆசையின் முழுப் பயனை அடைதல் 'சந்தோஷம்' ஆகும்.

---

சில சமயங்களில் அறிவு நமக்கு வழிகாட்டுவதில்லை. அப்போது நமது நம்பிக்கையே வழி காட்டுகிறது. ஆகவே நம்பிக்கை அறிவுக்கு முரண்பாடானதல்ல. அறிவுக்கும் அப்பாற்பட்டது. அறிவு நம்மைக் கைவிடும்போது நம்பிக்கை கைகொடுக்கிறது

– காந்திஜி

❑

பிரார்த்தனை என்பது கடவுளிடம் கொள்ளும் தொடர்பு!
நீ அவரைப் பார்க்காவிட்டாலும் உனது பிரார்த்தனைகளுக்கு அவர் செவிசாய்ப்பார்.

❑

கடவுளிடம் நாம் எதனை வேண்டுவது?
உலகில் வாழும் அனைத்து உயிர்களும் நலமாக இருக்கவேண்டும் என்று கேள்!
நலமாக இன்பமாக வாழவேண்டும் என்று கேள்.
அப்போது உனது வாழ்க்கை எப்படி ஆனந்தமாகச் செல்கிறது என்று பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்திய மாமுனி, சிவனாரின் திருமணக் கோலம் கண்ட

# திருக்கரைசை மாநகரும் திருமங்கலாயும்

மூதூர் ஒரு பழம்பெரும் நகரம். மூதூர் முகத்துவாரத்தில் இருந்து சுமார் பதினொரு மைல் தொலைவில் கங்கு வேலிக் கிராமத்திற்கு அருகாமையில் உள்ள, மகாவலி கங்கை சமுத்திரத்தில் வந்து கலக்கும் கரையில் வனப்புமிக்க திருக்கரைசை மாநகரம் உண்டு.

சிவபிரானுக்கும் உமாதேவி யாருக்கும் நடைபெறும் திருமணத்தைக் காணும் பொருட்டு தேவர்கள் முனிவர் களுடன் எல்லாம் அறிந்த தமிழ்

**மகாவலி நீர் அபிஷேக தீர்த்தம்!**

முனிவரும், சப்த சமுத்திரங்களையும் குடங்கையில் அடக்கியவருமான அகத்திய முனிவரும் வந்திருந்தார்.


இவர் வருகையினால் வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. இந்த ஆபத்தினை அறிந்த இறைவன் தமிழ் முனிவரான அகத்தியரை அவரது வாசஸ்தலமாகிய பொதியமலைக்குப் போகுமாறு பணித்தார்.

தமது திருமணக் கோலத்தை தெட்சண கைலையில் உள்ள மாணிக்க கங்கைக் கரையில் அமையப் பெற்ற திருக்கரைசை மாநகரில் கண்டு களிக்கும்படி அருளினார்.

**அகத்தியர் ஸ்தாபனத்தைப் புதுப்பித்த சூரிய வம்ச மன்னன் சிங்கபூதரன்!**

இத்திருவாக்கைச் சிரமேற் கொண்டு தெட்சண கைலை சென்று திருகோணமலையில் எழுந்தருளியுள்ள கோணலிங்கப் பெருமானைத் தரிசித்து விட்டு திருக்கரைசையம்பதியை அடைந்து மகாவலி கங்கையின் மகிமையை உணர்ந்து அதில் தீர்த்தமாடினார்.


புண்ணிய தீர்த்தமாடிய முனிவர் மகாவலி கங்கையின் கீழ்க் கரையில்



**திருமணக்கோலம் காட்டிய தீர்த்தேஸ்வர லிங்க மூலவர்!**

தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமது இலங்கை விஜயத்தின் போது வழிபடுகிறார்.

திருகோணநாயகப் பெருமானின் விருப்பப் படி, சிற்ப சாஸ்திரம் முறைப்படி கற்றுணர்ந்த வல்லுனர்களைக் கொண்டு



நாகராஜா கணபதிப்பிள்ளை,
திருவள்ளுவர் கழகம், திருகோணமலை

கற்கோயில் அமைத்தார். சிவலிங்கம் ஒன்றை ஸ்தாபித்து, பிரதிஷ்டை செய்து தீர்த்தேஸ்வரன் என்று நாமஞ்சூட்டி

**ஏட்டுச்சுவடிகளை ஒன்று சேர்த்து திருக்கரைசை புராணத்தைப் பதிப்பித்த திருமலைத் தமிழ் அறிஞர் வே. அகிலேசபிள்ளை!**

உமையாளையும் நவதீர்த்த விநாயகரையும், முருகனையும் பிரதிஷ்டை செய்து மகாவலி நீரினால் அபிடேகம் செய்து வழிபட்டார்.

இறைவன் முனிவர்பால் அருள் கொண்டு உமாதேவி சமேதராக திருமணக்கோல வடிவுடன் ஸ்தாபித்த லிங்கத்தினின்றும் தோன்றி முனிவருக்குக் காட்சி கொடுத்தார். அதன் பின்னர் முனிவர் திருக்கோணமலை வந்து பாவநாச தீர்த்தமாடி மீண்டும் பொதிகை மலை சென்றடைந்தார்.

ஆனால் காலப்போக்கில் அகத்தி யர் ஸ்தாபனமும் திருக்கரைசை மாநகரமும் அழிந்து பாழடைந்தன.

ஏழாம் நூற்றாண்டில் சூரிய வம்சத்தைச் சார்ந்த சிங்கபூதரன் என்ற அரசன் இலங்கை வந்து மூதூர்ப் பகுதியில் உள்ள திருமங்கலாய் என்னும் இடத்தை அடைந்து அவ்வூர் அரசனின் மகளான திருமங்கையைத் திருமணம் முடித்தான். அங்கு சிற்பச் சிறப்புமிக்க சிவாலயம் ஒன்றைக் கட்டுவித்தான்.

மன்னன் சிங்கபூதரனும் திருமங் கையும் அகத்தியர் ஸ்தாபனத்துக்கு அருகில் உள்ள மகாவலி கங்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பம்...... ஒற்றுமை........ கூட்டுறவு!

நாகரிக வளர்ச்சியின் முதிர்ச்சி நிலை குடும்ப வாழ்வு. குடும்பங்கள் பல சேர்ந்து கிராமங்களாகின. கிராமங்கள் பல சேர்ந்து நகரங்களை உருவாக்கின. குடும்பங்கள், கிராமங்கள், நகரங்கள் சேர்ந்து நாடுகள் தோற்றம் பெற்றன. நாடுகள் பலவற்றை உள்ளடக்கி கண்டங்கள் வகுக்கப்பட்டன. இவ்வாறான எல்லா வடிவங்களையும் உள்ளதாக நாம் வாழும் பூகோளம் அமைந்துள்ளது.


சி. இராமச்சந்திரா
வட்டுக்கோட்டை

இவற்றுள் அடிமட்ட அலகாக குடும்பம் அமைந்துள்ளது. அக்குடும்ப அங்கத்தவர் ஒவ்வொருவரும் மகிழ்ச்சியையும் அமைதியையும் அனுபவிப்பதை இலக்காக உள்ளனர். ஆனால் அவர்களின் தேவைகள், அதை அடைவதற்கான வளங்கள், மன வளர்ச்சி போன்றவற்றில் வேற்றுமை நிலவுவதும் சகஜம். இருப்பினும் இலக்குகளை அடைய எடுக்கும் முயற்சிகள் தடைப்படுவதில்லை.

பலருக்கு, தொடுவானம் போல் இலக்குகளை அடையும் காலம் நீண்டு செல்லலாம். ஆனால் முயற்சிகள் தடைப்படமாட்டாது. ஆதிகாலம் தொடக்கம் கூட்டுத் தொழிற்பாடு மூலம் மனிதன் மகிழ்ச்சியையும், அமைதியையும் அடையத் தொழிற்பட்டுள்ளான். அதில் வெற்றியும் கண்டுள்ளான்.

கூட்டுத் தொழிற்பாடு மனித குல வளர்ச்சியில் தவிர்க்க முடியாத காரணியாக அமைந்துள்ளது. இந்த கூட்டுத் தொழிற்பாடு என்னும் கோட்பாடு மனிதனின் சமூக, பொருளாதார, கலாசார, ஆன்மீக வாழ்வு என இனம் காட்டப் படுகின்ற கூறுகளில் அதன் பதிவுகளைப் பதித்துள்ளன.

மனிதனின் மகிழ்ச்சிக்கும் அமைதிக்கும் பங்கம் விளைவிக்கும் காரணிகள் பல. அவற்றுள் இனபேதம், மதபேதம், குலபேதம், வர்க்கபேதம் போன்றவை பிரதானமானவையாகக் கருதப்படுகின்றன.

இவ்வேற்றுமைகளையெல்லாம் ஊடறுத்துச் சென்று மக்களை ஐக்கியப்படுத்தும் வலு கூட்டுறவிற்கு உண்டு.

கூட்டுறவு வேற்றுமையில் ஒற்றுமை காணும் மனப்பக்குவத்தை ஏற்படுத்துகின்றது, ஜனநாயகப் பண்பை வளர்க்கின்றது, பொருளாதார சமத்துவத்தைப் பேண உதவுகின்றது.

இந்த நூற்றாண்டில் கூட்டுறவுத் துறை ஸ்தாபன வடிவம் பெற்றுள்ளது. இப்பொழுது உலகில் மூலை முடுக்குகளிலெல்லாம் கூட்டுறவு ஸ்தாபனங்கள் வியாபித்து, தொழிற்படுகின்றன. சர்வதேச கூட்டுறவாளர் தினம் கொண்டாடும் காலமிது.

எனவே நாம் ஒவ்வொருவரும் எம்மைச் சிறந்த கூட்டுறவாளர்களாக ஆக்கிக் கொண்டால் இந்த மண்ணுலகை விண்ணுலகாக்கலாம், எமது குடும்பத்தை நல்லதோர் பல்கலைக்கழகமாக ஆக்கலாம்.

இதிலும் பார்க்க எமது பெற்றோர்க்கும் உற்றார்க்கும் செய்யக் கூடிய கைமாறு வேறுண்டோ?

---

தீர்த்தமாடினர். அப்போது அகத்தியர் ஸ்தாபனத்தின் அழிபாடுகளைக் கண்ட மன்னன் மீண்டும் அவ்வாலயத்தைப் புனருத்தாரணஞ் செய்தான்.

காலப்போக்கில் படையெடுப்புக்களாலும், வெள்ளப்பெருக்கினாலும் இவை அழிந்து போயின. இவ்வாலயங்களில் ஒலித்த மணிகள் ஓய்ந்து போய்விட்டன. அந்நகரில் வாழ்ந்த மக்களின் சந்ததியினர் கிளிவெட்டி, கங்குவேலி போன்ற கிராமங்களுக்குச் சென்று குடியேறினார்கள். திருமங்கலாய் ஆலய விக்கிரகங்கள் வெருகல், கங்குவேலி, நிலாப்பளை போன்ற கிராமங்களில் கண்டெடுக்கப்பட்டு வெருகலம்பதியில் சித்திரவேலாயுத சுவாமி ஆலய வீதியில் உள்ள பாழடைந்த மண்டபத்தில் வைக்கப்பட்டன. இவ்வாலய வரலாற்றினை திருக்கரைசை ப்ராண மூலம் ஓரளவு அறியக் கூடியதாக இருக்கிறது. இப்புராணத்தினை எழுதிய ஆசிரியர் யாரென்பது இன்னும் புதிராகவே உள்ளது. உமாபதி சிவாசாரியாரின் பரம்பரையினர் ஒருவரே இதனை எழுதியுள்ளார் என்பது சிலரது கருத்தாகும். சிதைந்து போகும் தறுவாயிலிருந்த ஏட்டுப்பிரதி களைத் தம்பலகாமம், கொட்டியாரப்பற்று, கட்டுக்குளப் பற்று முதலிய இடங்களிலிருந்து தருவித்து, ஒன்று சேர்த்துப் பின்னர் பரிசோதித்து, குமாரசுவாமிப் புலவர் அவர்களின் விளக்கவுரையையும் பெற்று பதிப்பித்து தமிழ்கூறும் நல்லுலகிற்கு நல்கியவர் திருக்கோணமலைத் தமிழறிஞர் திரு.வே.அகிலேசபிள்ளை அவர்களாவர்.

**பெருமையோடு ஒலித்து ஓய்ந்த ஆலய மணிகளுள் ஒன்று. இன்று கங்குவேலி சிவாலயத்தில்...........**



பெரியார் அகிலேசபிள்ளை இப் புராணத்தினைப் பதிப்பிக்காது போயிருப்பின் திருக்கரைசை மாநகரும் திருமங்களாயும் நம்முள்ளங்களில் இருந்து மறைந்து போயிருக்கும். அன்னாருக்குத் தமிழுலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லார் கண்பட்ட வறுமையும் அல்லார் கண்பட்ட திருவும்



எஸ். ஜெயரட்ணம்
அதிபர், தொழில் நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்

அண்மைக் காலத்தில் சமயங்களின் செயற்பாடுகள் உலகத்தில் அதிகரித்து வருவதனைக் காண முடிகின்றது. குறிப்பாக எமது இந்து சமயத்தின் செயற்பாடுகளும் அதிகரித்து வருகின்றன. கோவில்களிலும், வீடுகளிலும் விழாக்களிலும் நடைபெறும் நிகழ்வுகளைக் காணும் போது இந்து சமயத்திற்கு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளதோ என எண்ணுகின்ற அளவிற்கு நடைபெறுகின்றன.

"இத்தனை மாந்தருக்கு ஒரு கோவில் போதாது" என எண்ணுகின்ற அளவுக்கு கோவில்கள் பெருகியுள்ளன.

இளைஞர்களின் அங்கப் பிரதட்சண நேர்த்திகளும் யுவதிகளின் அடியழிப்பு பிரார்த்தனைகளும் கூட அதிகரித்துள்ளன. வீடுகளிலும் விழாக்களிலும் சமய சம்பிரதாயத்திற்கு ஏற்ப யாவும் நடைபெறுவதைக் காண முடிகின்றது.

ஆகவே, இந்த நிகழ்வுகளைக் கொண்டு நமது சமயம் நல்ல வளர்ச்சியினை அடைகின்றது என மனநிறைவு கொள்வது தவறாகும். இந்து சமயமும் மேலும் சில சமயங்களும் நாத்திக இயக்கங்களின் செயற்பாடுகளுக்கும் பிரசாரங்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் ஊடாக உலகில் இன்றும் நின்று நிலைபெற்றுள்ளன. அவ்வாறு நின்று நிலைபெறுவதற்கு சம்பிரதாய சடங்குகளும் விழாக்களும் காரணமல்ல. அச் சமயங்களின் கொள்கைகளும் கோட்பாடுகளுமே காரணமாகும்.

ஆனால் மக்கள் அந்தந்தச் சமயக் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் பின்பற்றி வையத்தில் அறவழியில் வாழ்கின்றனரா என்பது இன்று கேள்வியாக அமைந்துள்ளது. அவ்வாறான கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பின்பற்றி வாழ்பவர்கள் அறவே இல்லையெனக் கூறமுடியாது. ஆனால் அது உலக மக்கள் தொகையில் எந்த வீதம் என்பதே முக்கியமாகும்.

பகவான் சாயி, தான் அவதாரம் எடுத்துள்ள கருத்தினைக் குறிப்பிடும் போது தர்மத்தையும் சத்தியத்தையும் நிலைநிறுத்த அவதாரம் எடுத்துள்ளதாகக் கூறியுள்ளார். கிருஷ்ண அவதாரத்தின் போது துரியோதனன் அழிந்தான். தர்மம் நிலைநாட்டப்பட்டது. அதே போன்று இராம அவதாரத்தின் போது இராவணன் அழிந்தான். தர்மம் நிலை நிறுத்தப்பட்டது.

சமயக் கோட்பாடுகள் பின்பற்றப் படாமல் வெறும் சமயச் சடங்குகளும் கோவில் வழிபாடுகளும் மட்டும் இன்று பின்பற்றப்படுவதற்கான காரணிகள் பலவுண்டு, அவைகளில் முக்கியமானவை சமூக, விஞ்ஞான, அரசியல், பொருளியல் காரணிகளின் விளைவுகளாகும்.

> சமய கோட்பாடுகள் பின்பற்றப்படாமல் வெறும் சமயச் சடங்குகளும் கோவில் வழிபாடுகளும் மட்டும் இன்று பின்பற்றப்படுவதற்கான காரணிகள் பலவுண்டு, அவைகளில் முக்கியமானவை சமூக, விஞ்ஞான, அரசியல், பொருளியல் காரணிகளின் விளைவுகளாகும்.

உலக வாழ்வுக்கான சம்பத்துக்களை, வழி வழியை மீறியாகினும் தேடுதல் தவிர்க்க முடியாத யதார்த்தம் என்று நினைக்கிறார்கள் பலர். இது சமய வாழ்வுக்கு ஊறானது அல்ல என்றும் நினைக்கிறார்கள்.

கோயிற் திருப்பணியில் முன்னணியில் நின்று வழிபடுபவர்களில் நல்லவர்களுமுண்டு; தீயவர்களுமுண்டு. முன்னணியில் நிற்பவர்களில் சிலர் தவறான வழிகளில் வசதி வாய்ப்புக்களைப் பெற்றவர்களாக இருக்கலாம். இப்படியாக வசதிகளைப் பெற்றவர்களைப் பார்த்து இவர்கள் இறைவன் அருளால்தான் இந்த வசதிகளைப் பெற்றார்கள்; ஆகவே அந்த அந்த வழிகள் சமயக் கோட்பாடுகளுக்கு முரண் அற்றவை என்பது பலரின் எண்ணமாகும்.

ஒரு தோட்டத்தில் முட்பற்றையும், பூஞ்செடிகளும் வளர்கின்றன. இயற்கை இரு வகைகளுக்கும் வேறுபாடு இன்றி நீரையும், காற்றையும் வெளிச்சத்தையும் அள்ளிச் சொரிகின்றது. இரு வகைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வேல்பட்டழிந்தது", "வேல்பட்டழிந்தன" - எது சரி?

சோ. பத்மநாதன்
(அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை)

சில காலத்துக்கு முன் ஓர் ஐயம் தலைக்குள் புகுந்து கொண்டது.
"சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில்
வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்பும்....."
—என்பது கந்தரலங்காரம்

வேலையுஞ், சூரனும் வெற்பும் அழிந்தன என்றல்லவா இருக்க வேண்டும்? என் ஆசங்கை இது.

நான் புரட்டிய பதிப்புக்களில் எல்லாம் "அழிந்தது" என்றே கண்டிருந்தது. தம்வாழ்நாள் முழுவதும் முருகன் புகழ் பரப்பிய தணிகைமணி செங்கல்வராயபிள்ளை, திருமுருக கிருபானந்த வாரியார் முதலியோர் பதிப்புக்களிலும் "அழிந்தது" என்றே இருந்தது.

ஈற்றில் விழிசிட்டி, பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை அவர்களை நாடினேன்.

"வேல்பட்டழிந்தன என்று தான் ஓதிவந்துள்ளேன். ஒருகால் திருவிளங்கம் பதிப்பைப் பாரும். கா. ரா. ஜமதக்னி சுவாமிகள் பதிப்பொன்றிருக்கிறது. அதனையும் பாரும்" என்றார்.

பார்த்தேன். "அப்பாடா" என்று ஆறுதலடைந்தேன்.

இதோ அந்தப் பாடல்:

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடியார் மனம் மாமயிலோன்
வேல்பட்டழிந்தன வேலையுஞ் சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே. — (அருணகிரிநாதர்)

---

பிரமிக்கத்தக்க வகையில் வளர்கின்றன. இருப்பினும் சில வேளைகளில் முட்பற்றை செழிப்பாக வளர்வதும் உண்டு.

ஆனால் முட்பற்றை என்றோ ஒரு நாள் களையப்படும்; அழிக்கப்படும். அதே வேளை மலர்ச்செடிகள் பேணிப் பராமரிக்கப்பட்டு அலங்காரத்துக்கு உபயோகிக்கப்படும். அறவழி வாழ்வோர் பூச்செடிகள், அல்லாதார் முட்பற்றைகள். அறவழி வாழாதவர் வளர்ச்சி, முடிவு முட்பற்றை போன்று அமையும். இறையருள் பெற்றும் அறவழி வாழா இராவணன் சூரபத்மன் வாழ்வினைப் பாருங்கள்.

'அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை'

என்ற குறளிற்கு அறத்தின் பயனை நன்கு அனுபவிப்பவராக சிவிகையில் இருந்து பயணம் செய்ப வரையும் மறத்தின் வழியே ஒழுகியவரையே அச்சிவிகையைத் தூக்குபவராகவும் சித்திரிக்கின்றார் பரிமேலழகர்.

ஆனால் இக்குறளுக்கு திரு. வி. க. அவர்கள் கீழ்கண்டவாறு பொருள் கொண்டு,

"பயணம் செய்வோரும் அற நெறியின் கண் நின்றால் அறவோர் ஆகலாம். அதையொப்ப சிவிகையைச் சுமந்து செல்பவரும் அறநெறி பூண்டால் அறவோராகலாம்" என்கிறார்.

சிறியன சிந்தியாராகிய, வள்ளுவப் பெருந்தகையின் வாக்கில் இக்குறளின் மெய்ப்பொருளாவது உலக வாழ்க்கையில் கிட்டும் வசதி, வசதியின்மை போன்ற வற்றை வைத்து தருமத்தைக் கணிப்பீடு செய்யக் கூடாது என்பதே.

## பொய்யில்லா வாழ்வு; போதுமென்ற மனம்



ஒரு கையில் குடையிருக்கும்
மறுகையில் புத்தகப்பை
இருகாலும் செருப்பில்லை
இரு துண்டுக் கதருடுப்பார்.

பொய் இல்லா வாழ்வும்
போதும் என்ற மனமும்
வள்ளுவர்க்கு வாய்த்த
வாசுகிபோல் (இராச) நாயகியும்.

மைல்கணக்காய் தான் நடப்பார்
மனம்சிறிதும் தளரமாட்டார்
எவர்வரினும் உதவிசெய்ய
எள்ளவும் தயங்கமாட்டார்.

சத்திய சோதனையின்
சாரமதை வாழ்க்கையிலே
நித்தியம் கடைப்பிடிக்கும்
உத்தமர்தான் காந்திமாஸ்டர்.

சுத்த மனத்தோடு சூதுவாதின்றி
புத்தர் யேசு காந்திபோன்று
உத்தமனார் இவர்செய்பணி
உலகுள்ளவரை ஒளிர்விடுமே.



"வீணைவேந்தன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பவாரிதி இ. ஜெயராஜ்
அமைப்பாளர், அகில இலங்கை கம்பன் கழகம்



# வால்நிலாக் கண்ட செங்கை பங்கயம்!

ஒரு நாட்டின் சிறப்பை வர்ணிக்கப்புகும் புலவர்கள் பல்லாற்றானும் அந் நாட்டிலுள்ள அனைத்திலும் மலர்ச்சியைக் காட்ட முனைவர். வயல்கள், சோலைகள், ஆடவர், மகளிர் என அனைவரினதும் நிறைநிலையை மலர்ச்சியாய்ப் பல காட்சிகளூடும் வெளிப்படுத்துவர். கம்பனும் இவ்வாறே அயோத்தியின் சிறப்பைப் பல கற்பனைக் காட்சிகளூடு விதிமுகத்தான் கூறத் தலைப்படுகிறான்.

கற்பனை கடலெனப் பெருகுகின்றது. வர்ணனைப் பாடல்கள் ஆயிரமாய் விரிந்தும், கம்பனுக்குத் திருப்தியில்லை. வம்பனல்லவா? புதுமை செய்ய விரும்புகிறான். செங்கோன் மன்னவர் நாட்டில் வெளிப்படும் மலர்ச்சியை இஃதேபோல் பல புலவர்களும் பாடியிருப்பதால் அந்நெறியினின்றும் மாறுபட்டுப்பாடத் தலைப்படுகின்றான் .மலர்ச்சியை எதிர்முகத்தான் கூறும் கவிதையொன்றை கோல வர்ணனைப் பாடல்களுள் அமைக் கிறான். அவ்வற்புதப் பாடல் காண்பாம்.

தசரதன் தன் செங்கோலாட்சியால் கோசலத்தில் கூம்புதல் எங்குமின்றி அனைத்துமே மலர்ந்திருக்கின்றன. எனவே, மலர்ச்சியை அன்றிக் கூம்புதலை அந் நாட்டில் காட்டுதலே புதுமை எனக் கருதுகிறான் கம்பன். 'அக் கூம்புதலும் நாட்டின் செழிப்பை வெளிப்படுத்த வேண்டும்'. இஃது அவன் எண்ணம். செழிப்பை வெளிப்படுத்தும் கூம்புதலைத் தேடுகிறான் அவன். கம்பனுக்கா காட்சி கிடைக்காது? அற்புதமான ஓர் கற்பனை வாய்க்கக் கவிதை பிறக்கிறது.

அயோத்தி மக்கள் வாழும் செழிப்புற்ற ஒரு வீதி, மாலை நேரம்; தன் பிள்ளைக்கு உணவூட்ட விழையும் ஓர் தாய்; பூரண சந்திரன் போலப் பொலிந்து நிற்கும் அக் குழந்தையை தன் சிற்றிடையில் இருத்தி நிலாக்காட்டிச் சோறூட்ட முனைகிறாள். இஃதே கம்பன் கைக் கொண்ட காட்சி.

'இக் காட்சியில் கூம்புதலுக்கு எங்கே இடம்?' நம்மனம் வியக்கிறது. கம்பனோ அவ்விடத்துக்கே நம்மைக் கைப்பிடித்து அழைத்துச் செல்கிறான்.

தாயின் சிற்றிடையில் குழந்தை. அதனை அணைத்துள்ள அவள் கையில் ஒரு பொற்கிண்ணம். அக் கிண்ணத்தில் அன்னமிட்டு குழந்தையின் விருப்புக்கேற்ப அதனுடன் பாலும் சர்க்கரையும் சேர்த்து குழந்தையின் நலன் கருதி அக் கிண்ணச் சோற்றைத் தன் வண்ணக் கையால் இறுகப் பிசைகிறள் அத்தாய். தனக்காகத் தாய் பிசையும் அமிழ்து கண்டு பசி மிக, மழலையின் சிறுவாயினின்றும் அமுதநீர் மாலையாய் வழியத் தொடங்குகிறது. குழந்தையின் மார்பிலோ காவல் வேண்டி திருமாலின் பஞ்சாயுதங்களை ஒன்றாக்கி தாயிட்ட ஐம்படைத்தாலி. உணவை உடன் வேண்டி அங்குமிங்குமாய்க் குழந்தை அசைய அவ்வசைவிற்கேற்ப அசையும் அப்பொற்றாலிக்குப் போட்டியாய் மழலையின் வாயினின்று ஒழுகும் அமுதநீர் மாலையும் அசைந்திட மகவிற்குப் பாற்சோறு ஊட்டுகிறாள் அவள். இக் காட்சியைக் கவிதையாக்குகிறான் கம்பன்.

"தாலி ஐம்படை தழுவு மார்பிடை
மாலை வாய் அமுது ஒழுகு மக்களைப்
பாலின் ஊட்டுவார்............"

இதுவரை இக்காட்சியூடு செழிப்பைக் கண்ட கம்பன் திடீரெனச் சிலிர்க்கிறான். அயோத்தியில் அதுவரை காணாத குவிதலைக் கண்டதே சிலிர்ப்பின் காரணம் இக் காட்சியில் குவிதல் எங்கே? விளக்கும் வகையில் கம்பன்கவி தொடர்கிறது.

பிள்ளையின் பசிவேட்கை கண்ட தாய் அது தீர்க்க எண்ணி இதுவரை தான் பிசைந்த சோற்றைக் குழந்தையின் குமுத வாய்க்குள் செலுத்தக் கருதி அச் சோற்றின் ஒரு சிறு பகுதியை, தன் நுனிக்கைக்குக் கொண்டு வந்து குழந்தையின் முகம் நோக்கி நீட்டுகிறாள். எண்ணத்தை வெளிப்படுத்த இடங்கிடைத்ததில் கம்பனுக்கு மகிழ்ச்சி. அயோத்தி முழுவதும் குவிவைத் தேடிய கம்பன் முதன் முறையாய், உணவூட்டும் தாயின் கைக்குவிவைக் கண்டு 'இஃதொன்றே அயோத்தியில் குவிந்துள்ளது. மற்றவை அனைத்திலும் மலர்ச்சியே, என அயோத்தியின் சிறப்பை எதிர்முகத்தான் காட்டி நிறைவு கொள்கிறான்.

இராமன் பிறக்கப்போகும் நாட்டில் இக் குவிதல் தானும் இருக்கலாமா? கம்பன் மனதில் கேள்வி. இக்குவிதலுக்கும் கற்பனையாய்த் தக்கதோர் காரணம் தேடுகிறான். கிடைத்த கற்பனை கவிதையாய் விரிகிறது. இதோ அக் காரணம், சோற்றைப் பிசைதலே கடுஞ் செயலாக தன் இயல்பான மென்மையால் அந்த இளந்தாயின் வெண் கை செங்கையாகித் தாமரைபோற் காட்சி தருகிறது. செழிப்புற்ற குழந்தையின் முகமோ பூரண சந்திரனாய்ப் பொலிவுற்றுக் கிடக்கிறது. இவ்விரு நிலையையும் காட்டிய கம்பன், கையாகிய தாமரை முகமாகிய சந்திரனை நெருங்கினால் குவிதல் இயல்பன்றோ? எனக்கேட்டு சந்திரனைக் கண்டு குவியும் தாமரையின் இயல்பு பற்றியே இக்கை குவிந்தது. அன்றேல் இக்குவிதலும் அயோத்தியிலிருக்க இடமில்லை எனக் கூறி, அயோத்தியின் சிறப்பை உச்ச நிலைக்கு உயர்த்தி விடுகிறான். கவிதை பூரணமாகிறது.

"தாலி ஐம்படை தழுவு மார்பிடை
மாலைவாய் அமுது ஒழுகு மக்களைப்
பாலின் ஊட்டுவார் செங்கை பங்கயம்
வால் நிலா உறக் குவிவ மானுமே."

கவிச் சக்கரவர்த்தியைக் கற்பனைச் சக்கரவர்த்தியாய்க் காட்டும் இக் கவிதை எண்ணி எண்ணி மகிழத்தக்க தன்றோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முக்கண் பசு பிறந்தது; திருப்பணி வளர்ந்தது!

ஆண்டுகள் ஓடிவிட்டாலும், முக்கண் பசு பிறந்து கந்தரோடை, கணக்க வளவு, வீரகத்திப் பிள்ளையார் கோயில் திருப்பணி நிறைவேறிய அற்புதம் நம் மனத்தில் பசுமையாக இருக்கிறது.

சுன்னாகத்தில் மாகியப்பிட்டி இரண்டு ஊர்களை இணைக்கும் பாதை அருகில் அமர்ந்துள்ளது கந்தரோடை வீரகத்திப் பிள்ளையார்.

பழமை வாய்ந்த இக் கோயிலைப் புதுப்பித்துப் பொலிவுறச் செய்ய இவ்வூர் மக்கள் அவாவுற்றனர். திருப்பணிச் சபை அமைத்தனர். திருப்பணி வேலைகள் ஆரம்பமாகின. ஆனால் பொருளின்மையால் இப்பணி தாமதமாகியது. கந்தரோடை மக்களில் பெரும்பாலானோர் விவசாயிகள். அவர்கள் தம்மாலான பொருளுதவி செய்த போதும், திருப் பணியினை முடிக்க நிதி போதாது இருந்தது. "என்ன செய்யலாம்" என்பதே அவர்கள் கவலையாக இருந்தது.

இவ்வேளைதான் அந்த அற்புதம் நிகழ்ந்தது. கோயிற் திருப்பணியில் அயராது உழைத்த திரு. பி. விசுவலிங்கம் என்பவருக்குச் சொந்தமான பசு கருத் தரித்து இருந்தது. அந்தப் பசு ஒரு கன்றை ஈன்றது. அப்பசுக் கன்றின் தோற்றம் அதிசயமாயிருந்தது. அக்கன்றினுக்கு மூன்று கண்கள் இருந்தன. வழமையான இரு கண்களுடன் மூன்றாவது கண் நெற்றியில் காணப்பட்டது. அக்கன்று ஆரோக்கியமாகவே இருந்தது. இக் கன்றின் தோற்றம் விநாயகரின் அருள்தான் என்றெண்ணினோம். ஆலய வளவில் வைத்தே இப்பசுவைப் பராமரித்தோம்.

இவ்வற்புதம் பற்றிய செய்தி ஊரெல்லாம் பரவியது. மக்கள் திரள் திரளாக வந்து ஆலய வளவில் இப்பசுக்கன்றினைப் பார்த்துச் சென்றனர். விநாயகப் பெருமானின் மகிமை எங்கும் பரவியது.




ஆ. வரதராஜன்
(தபால் அதிபர், வெள்ளவத்தை)


தம்மால் இயன்ற நிதியினை அவர்கள் திருப்பணி வேலைகளுக்கு அன்பளிப்புச் செய்தார்கள்.

விநாயகர் ஆலயத் திருப்பணி வேலைகள் இனிதே நிறைவேறின. கும்பாபிஷேக வைபவத்தை நவாலியூர் சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் சிறப்பாகச் செய்து முடித்தனர். அழகுற ஆலயத் திருப்பணி நிறைவேறியதே என்று ஊர் மக்கள் மனநிறைவு பெற்றனர். கும்பாபிடேகம் நிறைவேறிய கையோடு அப்பசுக்கன்றும் மறைந்து விட்டது.

## "கங்காதரம் இனிநம் வாழ்வு"




கயிலையில் ஈசனைக் கண்டுணர் வாரும்
கங்கையில் நாள்தொறும் களிப்புணர்வாரும்
காசியில் வேதங்கள் பயின்றிடு வாரும்
கங்காதரன் தாள்தொழு வார்க்கீடீ லையே! 1

கண்ணன் குழலும், கயிலையிற் சிலம்பும்
இவன்சொற் கேட்க மௌனமாகும்
கல்லும் கனியும் இவன்சொற் கேட்டு
நாம்கனியா திருந்தால் அதுநம் பாவம். 2

கண்ணொளி கண்டு கதிரோன் நாணும்
இவன்புன்னகை கண்டு புதுமலர் நாணும்
இவன்சொற் கேட்டு நாம்மாறா விட்டால்
நம்செயல் கண்டிவ் வுலகமே நாணும். 3

கங்காதரன் புகழ்தனைப் பாடிடுவோம்
கங்காதரன் மொழிதனைக் கேட்டிடுவோம்!
கங்காதரன் பணிதனைச் செய்திடுவோம்
கங்காதரம் இனியிங்கே நம்மவர் வாழ்வாம்! 4




ச. அருள்ஜோதி சந்திரன்
(லண்டன்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி கெங்காதரானந்தர் பார்வையில் பகவத் பக்தி


பக்தி: பக்தி என்பது உணர்வுகளை மீறிச் செல்லும் பொழுது அனுபவிக்கின்ற ஒரு தனித்த பேரானந்தம்" (லஜனாம்ருதம்)

**யா**னையை அங்குசத்தால் மடக்குவது போன்று தொல்லைகளைச் சிருஷ்டிக்கும் மனதைப் பக்தியென்ற அங்குசத்தால் மடக்கிச் சுயாதீனப்படுத்தும் பக்தன், சமுத்திர அலைகளுக்கு இடையில் மிகச் சந்தோசமாக நீந்திக் கரையேறும் சிறந்த ஒரு நீச்சல் வீரனைப் போன்று இம் மண்ணுலக வாழ்க்கையில் வெப்பம், குளிரால் தாக்கப்படாமல் நீந்திக் கரையேறுகின்றான் – என்பார் சுவாமி கெங்காதரானந்தர்.


பக்தியானது நாம் அன்றாடம் செய்யும் ஒவ்வொரு செயலையும் இறைவனிடத்தும், குருவினிடத்தும் சம்பந்தப்படுத்தி ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் நீக்கி, மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரணங்களையும் சுத்திகரித்து ராஜஸ, தாமஸ குணங்களின் தன்மையகற்றி, சாத்வீக குணங்களை வளர்த்து தெளிவு கொடுக்கக்கூடிய உயர்ச்சிக்கு இட்டுச் செல்லும்.

பக்தியில் நீண்ட காலம் நாம் ஈடுபடும் போது, உலக விசயங்களில் பற்றுதல், ஆசை, கோபம், காமம், போன்ற புன்மையான குணங்கள் எங்களை விட்டு அகன்று, நல்ல சிந்தனை, நல்ல உணர்வுகள் மலரும் . இறுதியில் மனச்சலனம் இல்லாத பரிசுத்தமான ஏகாத்மபாவம் ஏற்பட்டு ஜீவன் சகல பாவங்களிலிருந்தும், ஜென்ம தோஷங்களிலிருந்தும் சம்சார சாகரத்திலிருந்தும் விடுபட்டு பிறப்பு இறப்பு அற்ற ஜீவன்முக்தி நிலை அடையும்.

"மனித ஜீவிதம் ஒரு அமர்க்களம், சுகம், துக்கம் இரண்டுக்கும் இடையே



நடைபெறும் இப்போராட்டத்தின் மத்தியில் நின்று வாழ்க்கையை ஆனந்த மயமாக்கித் தீர்க்க வேண்டும். இதுதான் வாழ்க்கையின் யதார்த்த தத்துவ தரிசனம். பாரதப்போர் முனையில் வைத்துக் கிருஷ்ணன் அருச்சுனனுக்கு இதற்குரிய சித்தாந்தத்தை உபதேசித்தார். மனிதன் தனது துன்பங்களை ஒழிக்க முயற்சிப்பதற்கு முன் அவைகளைப் பொறுமையோடு சகிப்பதற்குரிய மனப்பக்குவத்தைத்தான் பெற வேண்டும். அதற்குப் பயன்படக்கூடிய



ஜெ. ஜெயமயூரகன்
சிவயோக சமாஜம், திருகோணமலை

பக்தியைத்தான் உண்மையான பக்தி என்று சொல்லலாம்." (ஞானமண்டலம்)

மனக் கலக்கமின்றி ஆனந்த மயமான மனத்துடன் மனம் தளராமல் பொறுமையோடு சாந்த சீவனாய் இறைவன் நம்மை வருத்துவதன் நோக்கத்தை உணர்ந்து அதற்குக் கீழ்ப்படிந்து வாழ்வதற்கு பயன்பட்ட, பயன்பட்டுக் கொண்டிருக்கின்ற, பயன்படும் பக்தியே பகவத் பக்தி. இதை ஆதாரமாக வைத்தே பக்தி என்ற பதம் வழங்கி வருகின்றது.

**பகவத் பக்தி**

"பல ஜென்மங்களில் செய்த புண்ணியத்தின் பயனாக ஒருவருடைய மனதில் பகவத்பக்தி தோன்றுகிறது. களஞ்சியத்தில் கிடக்கின்ற வித்து, அங்கு கிடந்தபடி முளைவிட்டுக் காய்த்துப் பலன் தருவதில்லை. பண்படுத்திய நிலத்தில் விதையை விதைத்து நீரிறைத்து உரமும் போட்டுப் பக்குவமாய் வளர்த்தெடுத்தால் தான் அது பலன் தருகின்றது. அது போன்று, மனிதனுடைய மனதில் பிஜாவஸ்தையில் இருக்கின்ற பக்தியுணர்வை ஞான அனுஷ்டானங்களால் விருத்தி செய்து இறையருளைப் பெற வேண்டும். இந்தப் பிரதான தர்மத்தில் யாதொரு முயற்சியும் செய்யாத ஜனங்கள், கற்பூரம் கொளுத்தி, தேங்காய் உடைத்து ஒரு தோத்திரத்தையும் பாடினால், ஆகாத காரியமெல்லாம் கடவுள் ஆக்கித் தரவேண்டும் என்று எண்ணுகின்றனர். இந்த லட்சணத்தில்தான் அநேக பக்தர்களின் பக்தி விசுவாசம் இருக்கின்றது.

(ஞான மண்டலம்)

முழுமனதுடனும், நம்பிக்கையுடனும், பொறுமையுடனும் பகவத் பக்தியில் தொடர்ந்து ஈடுபட வேண்டும். தொடர்ச்சியாக உள்ளத்தை, ஆத்மாவை தொடும் வண்ணம் பயிற்சி செய்தால் உள்ளத்தில் அது உறுதியாக நிலைபெறும். சாதகன் தன்னைப் பரிபூரணமாக இறைவனிடம் ஒப்படைத்து விட்டால் இறப்பு பிறப்பு என்ற சக்கரத்தில் இருந்து முழுமையாக விடுதலை பெற்று பரிபூரண நிலைக்கு உயர்ந்து விடுகின்றான்.

சென்ற காலத்தைப் பற்றி சிந்திப்பதில்லை; வருங்காலத்தைப் பற்றி கவலைப்படுவதில்லை; நிகழ்காலத்தில் வாழ்ந்து அதிலேயே நிலைத்துக் கொண்டிருப்பான். இந்த நிலையே ஜீவன் முக்தி நிலை. இதை அடைவதற்கு இறைவனோடு இணைவதற்கு, பற்றுக்களை விடுவதற்கு ஒரு புதிய பற்று தேவை. இதைத்தான் "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை பற்றுக பற்று விடற்கு" என்று திருக்குறள் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணாகதிக்கு ஒரு 'சின்ன சுவாமிஜி!'

சிவந்த மெலிந்த தோற்றம் அவருடையது; தீட்சண்யமான கண்கள்; கருணையே உருவான – சாந்தமான – வசீகரமான அழகு முகம்; சிவந்த மேனிக்குப் பொலிவு தரும் காவி வேட்டி சட்டை. குழைவான – ஆனால் அழுத்த மான வார்த்தைகள். இவர்தான் சின்ன சுவாமி ஜெகதீஸ்வரானந்தா.

இலங்கையின் பண்டாரவளை நகரத்தில் செல்வச் செழிப்பு நிறைந்த குடும்பத்தில் அவதரித்தவர் இம் மகான். தவமும் தவமுடையார்க்கே என்பது போல், திரு. நடராஜா – செல்வம் தம்பதியின ருக்குப் பெரும் பேறாகக் கிடைத்த சிரேஷ்ட புதல்வன் இவர். 1943ஆம் ஆண்டு வைகாசி மாதம் முதலாம் நாள் பிறவியின்



செல்வி தா. சியாமளாதேவி

நோக்கத்தைப் பூர்த்தி செய்ய வந்த அற்புதக் குழந்தைக்கு, பெற்றோர் இட்ட பெயர் 'ஜெகதீசன்'.

இளமைக் காலக் கல்வியை பண்டாரவளையிலும், கண்டியிலும், பின் கொழும்பு அக்குவானஸ் கல்லூரியிலும் கற்று, மேற்படிப்பாக வைத்தியத் துறையை மேற்கொண்டார். உலகியல் ரீதியாக சீரும் சிறப்பும் பெற்றும், கல்வியில் மேன்மை பல கண்டும், அவரது அந்தராத்மா அதில் முழுமை அடையவில்லை. உலகியல் பந்தங்கள் – ஆசாபாசங்களினின்றும் விடுதலைப்பட்டு அதற்கு அப்பாற்பட்ட ஒரு நித்திய சுகத்தை அடைவதிலேயே அவர் குறியாக இருந்தார்.


கர்மயோகியான தந்தையினதும், அன்பே உருவான தாயாரினதும், ஒரே உடன் பிறப்பான சகோதரனினதும் பரிபூரண சம்மதத்துடனும் ஆசியுடனும், அருள்மிகு கதிர்காம ஷேத்திரத்தில் காவியுடையேற்று துறவுக்கெனத் தம்மை அர்ப்பணித்தார்.

சுவாமி ஜெகதீஸ்வரானந்தா என்ற இந்த இளந் துறவிக்கு தன் குருவைத் தேடும் ஆதங்கம் உள்ளக் கருவிலே நெருடிக் கொண்டிருந்தது. தமது இருபத்தி ஆறாவது வயதிலே பாரதம் சென்றார். இமாலய அடிவாரமான ரிஷிகேசம் வரை சென்று, தன் ஞான குருவைத் தேடினார். அங்குவேதாந்த சிந்தாந்த சாஸ்திரங்களைக் கற்று, பல துறவிகளின் திவ்ய தொடர்பினைப் பெற்றும் மனநிறைவின்றி பிறந்த நாட்டிற்கே திரும்பினார்.

பண்டாரவளையிலே துறவி ஒருவரின் தொடர்பினால், திருகோண மலையில் ஞான ஒளிபரப்பும் பிரம்ம ஞானி – சுவாமி கெங்காதரானந்தா அவர்களின் திருவருள் மகிமை அறியக் கிடைத்தது. திருகோணமலை சிவயோக சமாஜ யோகாச்சிரமத்தில் பழுத்த ஞான விருட்சத்தின் ஒளிக்கீற்றுக்களின் முன், ஞான இளம் தளிர் ஒன்று, புத்துயிர் பெற்று செழுமை அடைந்தது.

ஞானிகளின் சந்திப்பு வர்ணிக்க முடியாத ஒன்று. தன் உள்ளம் முழுவதையும் ஆக்கிரமித்த அந்த அருட்கனலைக் குருவாகக் கொண்டு, அவரது தெய்வீகத் திருப்பாதங்களில் முழுமையாகச் சரண டைந்தார் சுவாமி ஜெகதீஸ்வரானந்தா.

குருதேவரின் ஆத்மீக ஸ்தாபனமான சிவயோக சமாஜ யோகாச்சிரமமே ஆன்மீக பயிற்சிக் களமாக அமைந்து, கடினமான பயிற்சிகள் குருதேவரால் அளிக்கப்பட்டன. குருசிஷ்ய உறவு முறை இங்கு விசித்திரமானது. இருவருக்குமிடையில் பேச்சுவார்த்தைக்கே இடமிருக்கவில்லை. குருதேவரிடமிருந்து வீசி வரும் ஒவ்வொரு தெய்வீக அலையையும் காத்திருந்து பெற்று –



குருதேவரின் ஆத்மீக ஸ்தாபனமான சிவயோக சமாஜ யோகாச்சிரமமே ஆன்மீக பயிற்சிக் களமாக அமைந்து, கடினமான பயிற்சிகள் குரு தேவரால் அளிக்கப்பட்டன. குருசிஷ்ய உறவு முறை இங்கு விசித்திரமானது. இருவருக்கு மிடையில் பேச்சுவார்த் தைக்கே இடமிருக்கவில்லை. குரு தேவரிடமிருந்து வீசி வரும் ஒவ்வொரு தெய்வீக அலையையும் காத்திருந்து பெற்று – அனுபவித்து – அனு பூதி பல கண்ட அற்புத புருஷர் சுவாமி ஜெகதீஸ்வரானந்தா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவித்து – அனுபூதி பல கண்ட அற்புத புருஷர் சுவாமி ஜெகதீஸ்வரானந்தா.

"இந்த உலகிலே ஆன்மீகத்துக் கென உதித்த உன்னத ஆத்மா அவர். அவரோடு பேசுவதற்கு என்ன இருக்கிறது; பேசாமலே விளங்கிக் கொள்வார்" என்று குருதேவர் கூறிய வாசகங்கள் எவ்வளவு அர்த்த புஷ்டியானவை.

'சின்ன சுவாமிஜியையும் சென்று தரிசியுங்கள்' என்று பெரியவர் பக்தர்களுக்கு இடும் அன்புக் கட்டளை, நாளாவட்டத்தில் 'பெரிய சுவாமிஜி' – 'சின்ன சுவாமிஜி' என்று பேசும் வழக்கத்தை பக்தர்களிடையே கொண்டு வந்தது.

**"இந்த உலகிலே ஆன்மீகத்துக் கென உதித்த உன்னத ஆத்மா அவர். அவரோடு பேசுவதற்கு என்ன இருக்கிறது; பேசாமலே விளங்கிக் கொள்வார்" என்று குருதேவர் கூறிய வாசகங்கள் எவ்வளவு அர்த்தபுஷ்டி யானவை.**



பன்னிரண்டு வருடங்கள் கடுமையான சாதனையின் பின் மட்டக்களப்பு – கொம்மாந்துறை – கொழும்பு– பண்டாரவளை – சில காலம் லண்டனிலும் தன் ஆன்மீகப் பணியைத் தொடர்ந்தார். சுவாமிஜி அவர்கள் எழுதிய ஒரே நூல் 'எனது குரு' (My Guru) என்பதாகும். அவர் ஆற்றிய பல சொற்பொழிவுகளில் இது ஒன்றாகும். ஜேர்மன் மொழியிலும் இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

**ஞானிகளின் பூவுலக வருகை நம் சிற்றறிவுக்கு எட்டாதது. அவர்களது திருவருளில் மூழ்கியவர் களையும் ஈர்க்கப்படுபவர்களையும் அத் தெய்வீக நுண் அலைகள் என்றும் அணைத்துக் காத்து நிற்கும் என்பது சத்தியம்.**

1990ஆம் ஆண்டு குருதேவருடைய சமாதிநிலைகண்டு சின்னவர் அடைந்த துயரம் சொல்லில் அடங்காது. வாய்விட்டுக் கதறிய செயல் உலகியலுக்கு உட்பட்ட செயலாகப் பக்தர்களுக்குத் தெரியவில்லை. குருதேவரின் இறுதிக் கிரியைகளையும், பின் அஸ்தியின் மேல் தம் திருக்கரங்களால லிங்கப் பிரதிஷ்டையும் செய்து தன் கடமைகளை நிறைவு செய்தார்.

1996ஆம் ஆண்டின் பிற்பகுதி, உணவைக் குறைத்து, உடலை ஒறுத்து – பக்தர்களுக்கு தரிசனம் தர மறுத்து ஏகாந்தமாக சில காலம் வாழ்ந்தார். அல்லும் பகலும் அவரோடு இருந்து பணி செய்த வயதான அன்னையையும் அழைத்துக் கொண்டு, கம்பளை என்னும் இடத்திற்கு வந்தார். இத்தகைய முன்னேற்பாடு ஒரு அற்புத செயலாகவே அமைந்தது. ஞானிகள் பூவுலகுக்கு வருவதும் சமாதிநிலை அடைவதும் அவர்கள் தெரிந்து நடைபெறும் அற்புத கருமமன்றோ! இதன் பின் நடைபெற்ற சம்பவங்கள் அனைத்தும் இந்த வார்த்தைகளை முற்றும் முழுதாகத் தெளிவு படுத்தின.

அன்று மார்கழி இருபது; ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி. இல்லத் தலைவியை அழைத்து, "இன்று சமயாசாரப்படி இல்லத்தை தூய்மைப்படுத்தி பூஜை வழிபாடு செய்யுங்கள். இன்றிலிருந்து ஐந்தாம் நாள் தில்லை நடராஜப் பெருமானின் திருவாதிரை ஆருத்திரா தரிசன விசேஷ தினத்தன்று, இங்கு சிறப்பான நிகழ்வு ஒன்று நடைபெறும்" என்றும் கூறிப் புன்முறுவல் பூத்தார்.

24ஆம் திகதி காலை சுவாமிஜிக்கு மார்புவலி ஏற்பட்டது. அன்று முழுவதும் மார்பு வலியால் துடித்த பொழுதும், அவரது திருநாமம் 'சுவாமிஜி' என்ற தாரக மந்திரத்தையே உச்சரித்துக் கொண்டிருந்தது. குருதேவரின் நிழலுருவைப் பார்த்த வண்ணம் அவரது திவ்ய விபூதியையே வாயிலிட்டும், நெஞ்சாரப் பூசியும் வேதனையை அனுபவித்தார்.

25ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் திருவாதிரை நட்சத்திரத்தில் குருதேவரை நோக்கி முகமலர்ந்த, வண்ணம் சமாதி நிலை எய்தி குருதேவரின் தாளிணைகளை அடைந்தார். ஞானிகளின் பூவுலக வருகை நம் சிற்றறிவுக்கு எட்டாதது. அவர்களது திருவருளில் மூழ்கியவர்களையும் ஈர்க்கப்படுபவர்களையும் அத் தெய்வீக நுண் அலைகள் என்றும் அணைத்துக் காத்து நிற்கும் என்பது சத்தியம்.

### தன்னையறிந்தவன் மரணத்தையும் அறிகிறான்!

நான் கட்டளையிட்டால்தான் மரணம் என்னிடம் வரமுடியும்.
நிம்மதியாகச் சாகவேண்டும்.
அதுதான் முடிவில் முக்கியமானது.
எல்லாருமே சாகப் பயந்துதான் சாகிறார்கள்.
அஞ்சாமல் மரணத்தை வரவேற்பவன் தன்னையறிந்தவன் மட்டும் தான்.
தன்னையறிந்தவன் மரணத்தையும் அறிகிறான்.
அவன் கட்டளையிட்டால்தான் மரணம் அவனிடம் வரமுடியும்.
அதுவரை எட்ட நிற்க வேண்டியது தான்

–சாது அப்பாத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை இரக்கத்தில் பக்தி



"தாய் தன் பிள்ளையைப் பாதுகாப்பது போல் இந்த இரக்கத்தின் பக்தியைப் பரப்புவோர்களைப் பாதுகாப்பேன். அவர்களுடைய மரண வேளையில் அவர்களுக்கு நீதிபதியாக இல்லாமல் இரட்சகராக இருப்பேன்."

இறை இரக்கத்தின் பக்தியைப் பரப்பும் பணி விசேடமாக சகோதரி மரிய பவுஸ்தீனா கோவால்ஸ்காவிடம் அளிக்கப்பட்டது. முத்திப் பேறுபெற்ற பவுஸ்தீனா கோவால்ஸ்கா 1905ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி போலந்திலுள்ள லோட்ஸ் என்னுமிடத்தில் பிறந்தார். அவர்



சகோதரி பவுஸ்தீனா


கன்னியர் மடத்தில் சேரவிரும்பியும் பெற்றோர் பலமுறை அனுமதி மறுத்து விட்டனர். இறுதியில் தனது 20 வயதில் தேவதாயின் இரக்கத்தின் சகோதரிகள் சபையில் சேர்ந்தார். வார்சாவில் தவசன்னியாசத்தை முடித்து 1928இல் முதல் வார்த்தைப்பாடும் கொடுத்தார்.

இரக்கத்தின் அரசனான இயேசு இவருக்குப் பலமுறை காட்சி தந்தார். இக் காட்சிகள் 1930இல் இருந்து 1938 வரை நீடித்தன. இவர் தான் கண்ட காட்சிகளை இறை இரக்கத்தின் இயேசுவின் அறிவுரைக்கமைய தனது நாட்குறிப்பில் எழுதியுள்ளார்.

சகோதரி பவுஸ்தீனா 5.10.1938 இல் மரணமடைந்தார். 1966ஆம் ஆண்டு அவரது உடல் தோண்டி எடுக்கப்பட்டு மடத்துக் கோவிலில் வைக்கப்பட்டுள்ளது.

சகோதரி பவுஸ்தீனாவின் கையேட்டுக் குறிப்புகள்

"பாவியின் சீர்கேடு எவ்வளவு அதிகமாக உள்ளதோ அவ்வளவுக்கு இரக்கத்தைப் பெறும் உரிமையும் அதிகமாக உள்ளது. ஆழம் காணமுடியாத எனது இரக்கத்தில் நம்பிக்கை வைக்க எல்லா ஆன்மாக்களுக்கும் அழைப்பு விடு. ஏனெனில் எல்லோரையும் மீட்க நான் விரும்புகிறேன். எல்லா ஆன்மாக்களுக்காகவும் எனது இரக்கத்தின் ஊற்று. சிலுவை மரத்தில் ஈட்டியால் குத்தித் திறக்கப்பட்டுள்ளது. நான் யாரையும் ஒதுக்கி விடுவது இல்லை."



எஸ். தர்ஷன்

"ஆன்மாக்களின் நம்பிக்கையின்மை என் நெஞ்சத்தைக் கிழிக்கிறது. தெரிந்தெடுக்கப்பட்ட ஆன்மாக்களின் நம்பிக்கைக் குறைவே என்னை மிகவும் வருத்துகிறது. என்னிடம் வற்றாத அன்பிருந்தும் என்னை அவர்கள் நம்புவது இல்லை."

"நலம் கெட்ட மனித சமுதாயத்தை இரக்கமுள்ள என் இதயத்தருகே வரும்படி சொல். நான் அதை அமைதியால் நிரப்புவேன். நம்பிக்கையோடு என் இரக்கத்தை நாடி என்னிடம் திரும்பும் வரை மனித சமுதாயம் அமைதியைக் காணவே முடியாது."

"நான் நீதிபதியாக வருவதற்கு முன் என் இரக்கத்தின் கதவுகளை அகலத் திறந்திருக்கிறேன். என் இரக்கத்தின் வாயில் வழி செல்ல விரும்பாதவன் என் நீதியின் வாயில் வழி சென்றுதான் ஆக வேண்டும்"

இறை இரக்கத்தைப் பெற இயேசு கற்பித்த நான்கு சிறப்பான வழிகள்

1. இரக்கமுள்ள இயேசுவின் படம்
2. இறை இரக்கத்தின் திருநாள்
3. இறை இரக்கத்தின் நவநாள்
4. இறை இரக்கத்தின் செபமாலை

## இரக்கமுள்ள இயேசுவின் படம்

1931ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ம் நாள் பவுஸ்தினாவுக்கு இயேசு காட்சியளித்த போது அவர் வெள்ளாடை அணிந்து தோன்றினார். ஒரு கரம் மார்பைத் தொட்ட படியும் மறுகரம் ஆசீரளிக்கும் பாவனையாகவும் இருந்தன. அவரது இதயத்திலிருந்து சிவப்பும் வெண்மையு மான இரு ஒளிக்கதிர்கள் வீசின. இத் தோற்றத்தைப் படமாக வரையும் படியும் அதற்கடியில் "இயேசுவே நான் உம்மில் நம்பிக்கை வைக்கிறேன்" என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்களை எழுதும்படியும் இயேசு அவளுக்குக் கூறினார்.

அவரது இதயத்தில் இருந்து வெளிப்பட்ட ஒளிக்கதிர்கள் இரத்தத்தையும் நீரையும் குறிக்கின்றன. வெண்கதிர் ஆன்மாவைத் தூய்மைப் படுத்தும் நீருக்கும். செங்கதிர் ஆன்மாவின் உயிரான அருளுக்கும் அடையாளமாக இருக்கின்றன. மேலும் இயேசு, "இந்தக் கதிர்கள் எனது தந்தையின் கோபத்திலிருந்து ஆன்மாவைப் பாதுகாக்கின்றன. இதன் அடைக்கலத்தில் வாழ்பவன் பேறுபெற்றவன். ஏனெனில் இறைவனின் நீதிக்கரம் அவனை ஒரு போதும் தீண்டாது" என்று கூறினார்.

இப்படத்துடன் நமதாண்டவர் பின்வரும் வாக்குறுதியையும் அளித்தார்.

"இந்தப் படத்தை வணங்கும் ஆன்மா மீட்படையாமல் போகாது. மேலும் அந்த ஆன்மா இவ்வுலகிலும் சிறப்பாக மரண வேளையிலும் தனது சத்துருக்கள் மீது வெற்றி பெறுமென வாக்களிக்கிறேன். எனது சொந்த மகிமையைப் போல் அந்த ஆன்மாவை நானே பாதுகாப்பேன்."

"இப்படம் உள்ள நகரங்களையும் குடும்பங்களையும் பாதுகாப்பேன்"

1939இல் இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது இப் படத்தை வைத்து வணங்கிய கிராக்கோ, வில்னோ என்னும் இரு நகரங்கள் மட்டும் அழிவிலிருந்து பாதுகாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### இரக்கத்தின் திருநாள்

உயிர்ப்பு விழாவை அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமையைத் தமது இரக்கத்தின் திருநாளாக குறிப்பிட்டுள்ளார்.

"அந்நாளில் எனது ஆழ்ந்த இரக்கத்தை அனைவரும் அடையக் கூடியதாக இருக்கும் எனது இரக்கத்தை, ஊற்றை அண்டிவரும் ஆன்மாக்கள் மீது எனது அருட்பெருக்கை கடல் மடைபோல் திறந்து விடுவேன்."

### இரக்கத்தின் நவநாள்

இது பெரிய வெள்ளியன்று ஆரம்பித்து அடுத்து வரும் 9 நாட்கள் நடைபெறும். இந்த நவநாளை அனுசரிக்கும் முறையை இயேசு நாதர் தாமே பவுஸ்தினாவுக்கு கற்பித்தார்.

"ஒன்பது நாட்களிலும் எனது இரக்கத்தின் ஊற்றுக்கு ஆன்மாக்களை அழைத்துவர வேண்டும். அவர்கள் வாழ்வின் சோதனைகளின் போது சிறப்பாக மரண வேளையில் அந்த ஊற்றிலிருந்து பலமும் உற்சாகமும் பெறுவதோடு தமக்குத் தேவையான சகல அருள் வரங்களையும் அடைந்து கொள்வார்கள்."

### இயேசு குறிப்பிட்ட ஆன்மாக்கள்

1ம் நாள் – பாவிகள்
2ம் நாள் – குருக்கள், கன்னியர்
3ம் நாள் – விசுவாசிகள், பக்தர்கள்
4ம் நாள் – நாஸ்திகர், கடவுளை அறியாதவர்
5ம் நாள் – பிரிந்த சகோதரர்கள்
6ம் நாள் – சாந்தமும் தாழ்ச்சியுமுள்ளவர்கள்
7ம் நாள் – இறைவனின் இரக்கத்தைச் சிறப்பாக மதித்து வணங்குபவர்
8ம் நாள் – உத்தரிக்கும் ஆன்மாக்கள்
9ம் நாள் – வெது வெதுப்புள்ளவர்கள்

### மாபெரும் இரக்கத்தின் நேரம்

இயேசு தாம் மரணித்த நேரமான பிற்பகல் 3 மணிக்கு தமது இரக்கத்தை வேண்டி விசேடமாக மன்றாடும்படி பவுஸ்தினாவுக்கு கூறியுள்ளார்.

"அகில உலகுக்கும் மாபெரும் இரக்கத்தின் நேரம் இது. இந்த நேரத்தில் எனது பாடுகளின் பெயரால் இரந்து கேட்கும் ஆன்மாவின் எந்த வேண்டுதலையும் நான் மறுக்க மாட்டேன்."

"என் மகளே, இந் நேரத்தில் சிலுவைப் பாதை செய். முடியாவிட்டால் கோவிலுக்குள் சென்று சில நிமிடங்களாவது பரிசுத்த நற்கருணையிலிருக்கும் இரக்கம் நிறைந்த என் இதயத்தை ஆராதி. அவ்வாறு செய்ய முடியாத வேளையில் நீ இருக்கும் இடத்திலேயே ஒரு சில வினாடிகள் ஆழ்ந்து செபம் செய்."

### இரக்கத்தின் செபமாலை

1935ஆம் ஆண்டு செப்டெம்பர் 13ம் திகதி இயேசு காட்சி கொடுத்த பொழுது பவுஸ்தீனாவுக்கு இரக்கத்தின் செப மாலையைச் செபிக்கும் விதத்தைச் சொல்லிக் கொடுத்தார்.

அன்று பவுஸ்தீனா, உலகில் எங்கோ ஓர் இடத்தைத் தாக்கி அங்குள்ளோரைத் தண்டிப்பதற்காக கையில் இடியேறுடன் சென்ற தேவ தூதனைக் கண்டாள். கருணை இதயம் கொண்டவளான அவள் அம் மக்கள் மீது இரக்கம் காட்டும்படி மன்றாடினாள். ஆனால் இறை கோபத்தைத் தணிக்க தனது செபம் போதாதென்பதை உணர்ந்தாள். அப்போது விண்ணிலிருந்து "நித்திய பிதாவே" என்னும் செபம் ஒலித்தது. அச் செபத்தை அவள் மீண்டும் மீண்டும் சொல்லவே தேவ தூதர் தனது தண்டனையை நிறைவேற்றச் சக்தியற்றவரானார். இச் செபமானது ஆண்டவரின் கோபத்தைத் தணிக்க வல்லதென அறிவிக்கப்பட்டது.

இறை இரக்கத்தின் பக்தியானது ஒவ்வொரு மாதமும் முதல் வெள்ளியிலிருந்து அடுத்து வரும் ஒன்பது நாட்களும் பிற்பகல் 3 மணிக்கு சொல்லலாம்.

### முத்திப்பேறு பெற்ற பவுஸ்தீனாவின் மன்றாட்டினால் வரங்களையடைய நவநாட் செபம்.

"இயேசுவே, உமது அடியாளாகிய பவுஸ்தீனாவை உமது எல்லையற்ற இரக்கத்தின் பக்தியால் நிரப்பினீரே! உமக்குத் திருவுளமானால் அவளது மன்றாட்டின் வழியாக நான் இறைஞ்சிக் கேட்கும் இவ்வரத்தை எனக்குத் தந்தருளும்..... (வேண்டும் வரம்).......

"எனது பாவங்களினால் உமது இரக்கத்திற்கு நான் அருகதையற்றவனானேன். ஆனால் முத்திப்பேறு பெற்ற பவுஸ்தீனாவின் தியாகத்தையும் தன் மறுப்பையும் பார்த்து. இவளது மன்றாட்டின் வழியாக நான் உம்மிடம் கேட்கும் விண்ணப்பத்தை எனக்கு அருளி இவளது புனித வாழ்வுக்கு சம்பாவனை அளிப்பீராக! – ஆமென்!

> கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன்.
>
> *(மத்தேயு 11:15)*
>
> வாக்குவாதம் செய்யவும் மாட்டார்; கூக்குரலிடவும் மாட்டார்; அவருடைய சத்தத்தை ஒருவனும் வீதிகளில் கேட்பதுமில்லை.
>
> *(மத்தேயு 12:19)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மீகமும் அறிவியலும்

"ஆத்மீகம் தழுவாத அறிவியல் குருடு; அறிவியல் தழுவாத ஆத்மீகம் நொண்டி" என்றார் பிரபல விஞ்ஞானி ஐன்ஸ்டீன்.

விஞ்ஞான வளர்ச்சி ஆத்மீக ஈடேற்றத்துக்குக் குந்தகமானது; முரண்பாடானது என்று எண்ணலாகாது.



**பிரம்மகுமாரி டாக்டர் நிர்மலா கஜாரியா**

பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலைய பிராந்திய இயக்குநர் (அவுஸ்திரேலியா, ஆசியா, பசிபிக்)

அறிவியலும் ஆத்மீகமும் கை கோர்த்துச் செல்லும்பொழுது சமுதாயம் உன்னத இடத்தை எட்டும். எனவே இரு சாராரும் தெளிவான சிந்தையுடன் செயற்பட வேண்டும்.

சமயச் சடங்குகள், செயற்பாடுகள், இன்று விரும்பத்தக்க பெறுபேறுகளைத் தருவதில்லை என்பது உண்மையே. சில வேளைகளில் சமயங்களின் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் முரண்பாடுகளை, பதட்ட நிலையை, ஒருவருடன் ஒருவர் இணைந்து போகாத மனோ நிலையை உருவாக்குவதை நாம் காண்கிறோம். மனிதன் துன்பக் கடலினைக் கடந்து பேரின்பம் அனுபவிக்க சமயங்கள் வழிகாட்ட வேண்டும். ஆனால் நடைமுறையில் இவற்றைக் காண்கிறோமா? ஆத்மாவுக்கும் சரீரத்துக்கும் இடையே ஓர் இணைப்பை ஏற்படுத்த வேண்டும்.

"நான் யார்?", "நான் எப்படிப் பட்டவன்?" என்று வினவி நாம் சுய உணர்வு பெற வேண்டும். தெளிவு பெற வேண்டும். ஞானம் எனப்படும் மூன்றாவது கண் மூலம் இத்தகைய தெளிவு பிறக்கும். எல்லா வசதிகள் இருந்தும் என்ன? விஞ்ஞானம் அளித்த வசதிகளிலேயே கூடுதலாக தங்கியிருக்கிறோம். பௌதீகத்தில் காட்டும் கவனம் ஆத்மீகத்தில் இல்லை, ஆனால் உண்மையில் தேவைப்படுவது உள் அமைதியும் சந்தோசமுமே. ஆத்மீக பலம் எமக்குள் இருக்கிறது. ஆனால் நாங்கள் அதை அறிந்திருக்கவில்லை. நாங்கள் ஆலயங்களுக்கு அமைதியை தேடி ஓடுகிறோம். ஆனால் நாங்கள் தேடுவது எங்கள் ஒவ்வொருவருள்ளும் இருக்கிறது. சக்தியின் ஊற்றாக இருப்பவர் பரமாத்மா அல்லது இறைவனா வர். ஆத்மீக ரீதியில் பல சக்திகளை வளர்க்கலாம். எங்களில் மாற்றங்களை ஏற்படுத்தலாம். எங்களுக்கு வழிகாட்ட ஆத்மபலம் தேவை.

நாங்கள் பயிலும் தியான முறைகள் உலகத்தில் மற்றவர்கள் பின்பற்றும் தியான முறைகளிலும் பார்க்க மாறுபட்டவை. முதலாவதாகத் தெரிய

தமிழில்: B.K. சிவப்பிரகாசம்

வேண்டியது, நான் ஒரு ஆத்மா, என் தொடர்பு சக்தியின் ஊற்றாகிய பரமாத்மாவிடம் மட்டுமே என்றும் எனக்கு அந்த அழிவற்ற சக்தி ஊற்றில், எனக்கு நம்பிக்கை உண்டென்றால் அத்துடன் என் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதாகும். தியானம் எனக்கு மட்டுமல்ல மற்றவர்களுக்கும் உதவுகிறது. மற்றவர்களுடன் தொடர்புகளை வைப்பதில் தியானம் சிறந்த முறையாகும். பௌதீகத் தொடர்புகள் தவறினாலும் எங்கள் ஆக்க பூர்வமான எண்ணங்கள், நல்லெண்ணங்கள், தூய்மையான உணர்வுகள் மூலம் தொடர்பு ஏற்படுத்தும்போது அது மற்றவர்களைச் சென்றடைகிறது. இதை மனம் மூலம் தொடர்பு அல்லது சேவை என்று சொல்வோம். என் சரீரத்திற்கு நான் அதிகாரியா அல்லது சேவகனா என்று கேட்டுணர வேண்டும். நான் துன்பத்தில் இருப்பேன் என்றால் மற்றவர்களுக்கும் குடும்பத்திற்கும் துன்பம் கொடுக்கிறேன் என்று உணர வேண்டும். ஆத்மீகமும் விஞ்ஞானமும் ஒருங்கிணைந்து செல்ல வேண்டும். ஆத்மீகம் உச்ச நிலையை அடையும் போது அங்கே இணக்கம் ஏற்படும். அப்பொழுது ஒவ்வொருவரும் அன்பாகவும் இணக்கமாகவும் இருப்பார்கள். விஞ்ஞானத்தை வசதிகளுக்காகப் பயன்படுத்தலாம். இந்த நிலையைத் தான் பூமியில் சொர்க்கம் என்று இதிகாசங்களில் குறிப்பிட்டிருக்கிறது.

இப்போது நாங்கள் அமைதி இழந்து இருக்கிறோம். இயற்கையின் ஒத்துழைப்பும் இல்லை. வன்செயல்கள் நிறைந்திருக்கின்றன. எனவே நாங்கள் மாற்றமடையும் பொழுது இயற்கையும் ஒத்துழைக்கும். இப்போது நுளம்புகள் கூட எங்களுக்கு எதிரியாகவே இருக்கின்றன.

21ஆம் நூற்றாண்டில் எல்லாம் சரியாக அமையும். ஒரு இனம்; ஒரு இராச்சியம்; சிங்கமும் ஆட்டுக்குட்டியும் ஒரே ஓடையில் நீர் குடிக்கும் உலகத்தையே நாம் எதிர்பார்க்கிறோம். நாங்கள் செய்ய வேண்டியது ஆத்மீக ரீதியில் வளர்ச்சியடைவதில் கவனம் செலுத்துவதாகும். விஞ்ஞானம் வளர்கின்ற பரிமாணத்திற்கு ஆத்மீகம் வளரவில்லை. எனவே, அமைதியான ஒரு உலகத்தைக் காண்பதற்கு சுயமாற்றம் ஏற்பட வேண்டும். அப்போது தான் உலக மாற்றம் இயல்பாகவே ஏற்படும். எனினும் இளைஞர்கள் மத்தியில் ஆத்மீக உணர்வு பரவலாக முளைவிடும் காட்சியை உலகெங்கும் காண்கிறோம். இவ்வெழுச்சி சமூக மேம்பாட்டுக்கு நல்லது.

(இலங்கை பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தின் ஆதரவில் அண்மையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் பிரம்மகுமாரி டாக்டர் நிர்மலா கஜாரியா ஆற்றிய உரையி லிருந்து.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் தொழுது கொண்டே இருப்பேன்!



"இறைவா! உன் அடியார்களை அவர்கள் உயிர் உள்ளவரை கெடுத்துக் கொண்டே இருப்பேன்" என்று சைத்தான் சொல்ல, "என் அடியார்களை நான் மன்னித்துக் கொண்டே இருப்பேன்" என்று இறைவன் அவனுக்கு மறுமொழி கூறினான்.

மனமே! கருணைக் கடலான அல்லாஹ் வின் பொறுமையின் பொன் மொழியை கேட்டும் உன் கல்பு கனியவில்லையா? இத்தகைய அவன் பெருந்தன்மைக்கு எத்தனை கோடி நன்மை செய்தாலும் ஈடாகுமா?

ஒரு குழந்தை மீது பாசம் கொள்ளும் ஒரு தாயின் தன்மையுடைய இறைவன் கட்டளையை மீறி நடக்க உனக்கு எப்படி துணிவு பிறந்தது? துணிவு கொண்ட நீ மறுமையில் எந்த முகத்தோடு இறைவனை சந்திப்பாய்? எந்த நிலையில் உன்னை அவன் வரவேற்பான் இதனை எல்லாம் இவ்வுலகில் விட்டுவிட்டு மறுமையில் போய் சிந்திக்க முடியுமா?



செல்வன் முகமட் பைசால்
உயர்தரவகுப்பு
இசிப்பத்தான கல்லூரி, கொழும்பு

உழைத்தால் தானே நிலத்தில் விளைச்சலைப் பார்க்க முடியும். உலகத்திற்கு உரியவனான நீ எப்படி மறுமைக்குரியவனாக முடியும்?

சைத்தான் கெடுத்துக் கொண்டே இருப்பேன் என்று சொல்கிறான். நீ என்ன சொல்லப் போகிறாய்? ஒரு உண்மை அடியான் என்ன சொல்வான். "நான் தொழுது கொண்டே இருப்பேன்", என்று சொல்வான்.


ஏன் என்றால் தொழுது பிரார்த்தனை புரிந்தால் தான் இறைவன் மன்னிப்பை பெற முடியும் என்ற உண்மையை தெரிந்திருக்கிறான். நீ தொழுகை இல்லாமல் அவன் மன்னிப்பை பெறலாம் என்று நினைக்கிறாயா?

இமாம் கஸ்ஸாலி அவர்கள் கருத்தைக் கவனி! "உன் ஆயுளில் பெரும்பகுதியை நீ வீணான செயலில் கழித்து விட்டாய். நீ செய்த பாவங்கள் குவிந்து கிடக்கின்றன. இப்படி இருக்க உன் பாவமன்னிப்பை எப்படி ஏற்றுக் கொள்வான்." அடுத்து கவனி! ஹசன் பஸரி (ரஹ்) சொல்கிறார்கள். "மன்னிப்புக் கிடைக்கும் என்ற குருட்டு நம்பிக்கை சிலரை நல்ல அமல்களை விட்டும் தடுத்து விட்டது. அவர்களிடம் எந்த அமலும் இல்லாமல் போய்விட்டது. நான் அல்லாஹ்வை நம்பியுள்ளேன்' என்று அவன் கூறுகின்றான். அவன் கூறுவது முற்றும் பொய். அல்லாஹ்வின் மீது நல்லெண்ணம் இருக்குமானால் அவன் நல்ல அமல் செய்வான் அல்லவா?"

(நன்றி: அல்லாஹ்வின் அழைப்பு)


இந்நாளை அன்புடன் தொடங்கு.
இந்நாளை அன்பினால் நிரப்பு.
இந்நாளை அன்பினில் கழித்திரு.
இந்நாளை அன்புடன் நிறைவு செய்.
இதுவே கடவுளை அடையும் வழி.
ஏனெனில் அன்பே கடவுள்.

–சாயி பாபா



*Sponsored by:*

**SHANMUGA AGENCIES**

Dealers in All Kinds of Local Produce and Commission Agents

**45, 4th Cross Street, Colombo - 11.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயப் பற்றுள்ளவன் சர்வதர்மங்களையும் ஏற்றுக்கொள்கிறான்



ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா
இந்து சமய அபிவிருத்திச் சபை
திருகோணமலை.

சர்வ தர்மம் என்பதன் பொருள் என்ன? (ஸ) ஸர்வ என்பது எல்லாம் என்று பொருள்படும். (ச) சர்வ என்பவர் சிவன். எல்லாத் தர்மங்களும் சிவனின் அனுக்கிரகமாகும். ஒருவன் சிவப்பு நிறக் கண்ணாடியை அணிந்தால் உலகம் சிவப்பு என்று விளங்குவான். நீல நிறக் கண்ணாடியை அணிந்தால் உலகம் நீலம் என்று விளங்குவான். இதே போன்று மனித சமுதாயத்தில் நிறைய மதங் களுள்ளன. அம்மதங்களுள் நிறையப் பிரிவுகள் உள்ளன. பூலோக வாழ்க் கையைப் பொறுத்தவரை உண்மையான எல்லா மதங்களும் புனித நேசத்தின் அடிப்படையில் இயங்கும். எனவே எந்த மதத்தைச் சேர்ந்திருந்தாலும் சரி; எல்லா மனிதர்களும் சமரசத்துடன் ஜீவிக்க வேண்டும். இக் கொள்கையாவது, சர்வதர்ம சமபாவமாகும். எந்த மதத்திலும் நல்லவர்கள் கெட்டவர்கள் இருக்கலாம். எங்கள் மதத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் நல்லவர்கள். ஏனை மதத்தவர் எல்லாரும் கெட்டவர்கள் என்று சொல்ல முடியாது. மேலும் ஒருவன் இந்த ஜன்மம் ஒரு இனத்தை, ஒரு சமயத்தைச் சேர்ந்தவனாக இருந்து அடுத்த ஜன்மம் வேறு சமயத்தை வேறு இனத்தைச் சேர்ந்தவனாக இருக்கலாம். உண்மையில் எல்லா நற்காரியங்களும், தீய காரி யங்களும் மாயையின் ஒரு அம்சம். அதாவது சாத்வீக, ராஜஸ, தாமஸமாகிய முக் குணங்களாகும். சாத்வீக குணத்தின் தன்மை என்பது சமரசம், பொறுமை, வாய்மை, நீதி முதலியன. இத் தன்மையுடைய உணவு மரக்கறி வகை. ராஜஸ தன்மை என்பது பேராசை, பொய்மை, பொறாமை, முதலியன. இதனுடைய உணவு காரம், வெங்காயம், அளவுக்கு மீறிய வகையான உணவுகளின் தேவை. தாமஸ என்பது மிருகத்தன்மை. இத் தன்மை உடைய உணவு மாமிசம். முனிவர்கள் சாத்வீக குணத்தை ஒரு பூலோக வாகனம் போல் பாவிக் கின்றார்கள். ஏனைய குணங்களைத் தவிர்ப்பார்கள். மனிதனுடைய உண்மை யான நிலையென்பது பரமாத்மம். இப் பரமாத்மம் என்பது "திரி குணா தீத" அதாவது மூன்று குணங்களுக்கு அப்பால், ஈசோபநிஷத்தில் குறிப்பிட்டிருக்கின்றது.

தத் ஏஜதி தன் நைஜதி
தத் துரே தத்வ அந்திகே
தத் அந்திரஸ்ய ஸர்வஸ்ய
தத்உ ஸர்வஸ்ய ஸ்ய பாயதஹ

ஐம்பது பேருந்துப் பிரயாணிகள் செல்லும் போது அந்தப் பிரயாணிகளிற் சிலர் காணி விவகாரங்களைப் பற்றிப் பேசுவார்கள். சிலர் குடும்ப விவகாரங்கள் பற்றிப் பேசுவார்கள். சிலர் அரசியல் முதலியன பற்றிப் பேசுவார்கள். ஆனால் அந்தப் பேருந்து திடீரென்று பெரும் பள்ளத்துள் வீழ்ந்தால் சகல பிரயாணிகளும் இறைவனை வணங்கு வார்கள். எனவே இச் சூழ்நிலையை ஆராய்ந்தால் கடைசியில் மனிதனுக்கு இறைவனுடன் தொடர்பு இருப்பது வாழ்க்கையின் எந்தளவுபிரதான விஷயம் என்று சொல்லலாம்.

> முனிவர்கள் சாத்விக குணத்தை ஒரு பூலோக வாகனம் போல் பாவிக்கின்றார்கள். ஏனைய குணங்களைத் தவிர்ப்பார்கள். மனிதனுடைய உண்மையான நிலையென்பது பரமாத்மம்.

ஒருவன் சமுதாயத்தின் மீது புனிதப் பற்று உள்ளவன் என்பதற்கு மூல காரணம் என்ன? சர்வ தர்ம சம பாவனமே அத்திவாரமாகும். எல்லா ஜீவராசிகளும் பரமாத்மாவிலிருந்து வந்தார்கள் என்ற புரிந்துணர்வு தான். நேசம் உலக புத்தி சக்தியிலிருந்து வருகிறது. இது ஒரு தனிப்பட்ட மனிதனுடைய உரிமையில்லை. மிருக வாழ்க்கையை இயற்கைச் சுபாவம் அடையாளம் காணுகிறது. சாப்பாடு, தூக்கம், ஜதைசேர், தற்காப்பு என்பன இம்மிருக வாழ்க்கையில் அடங்கியுள்ளது. நிறைய ஜென்மங்களிலிருந்து, ஜீவன். அறிவியல் நிலை – பேரறிவாற்றல் – தொழிற்பாடு நிலையை அனுபவிக்கலாம்.

நமஸ்காரம் என்பது என்ன? நமஸ்கார முத்திரை என்பது என்ன? இரு புஜங்களும் நேராக இருக்க மார்பில் இரண்டு கைகளையும் சேர்த்துப் பிரார்த்தனைத் தோற்றத்துடன் இருப்பது. இம் முத்திரையுடன் நமஸ்காரகோஷம் செய்கின்றோம். இறைவனுடைய அருள் எல்லா ஜீவன்களிடத்தும் இருக்கும். ஜீவராசிகளில் பரஸ்பர ஒளியின் அடையாளம் காணப்படுவதற்காக நாங்கள் நமஸ்கரிக்கின்றோம். சுவாமிகள் கூட நமஸ்கரிக்க வேண்டும். கர்வத்துடன் நான் ஒரு ஆன்மீக முன்னேற்றமுள்ளவன், மற்றவர்கள் தான் என்னை நமஸ்கரிக்க வேண்டும். நான் நமஸ்கரிக்கத் தேவை யில்லையென்று எண்ண வேண்டாம். கடவுள் எல்லா இதயங்களுள்ளும் சமமாக வசிக்கின்றார். ஆகவே உண்மையான ஆன்மீக முன்னேற்றமுள்ளவர்கள் நிரம்பிய இதயத்துடன் எல்லா நல்லவர் களையும் நமஸ்கரிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பௌத்தம் கூறும் செய்தி

சித்தார்த்தர் ஏன் இந்து மதத்தினின்றும் விலகிச் சென்றார்? உண்மையாகவே அவர் விலகிச் செல்லவில்லை. இந்து மதத்திற்குச் சில சீர்திருத்தங்களைச் செய்யவே விரும்பினார்.




யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஈஸ்வராம்பா தினத்தில் கட்டுரையாளர் திருமதி பத்மதர்ஷினி ஸ்ரீராம் உரையாற்றுகிறார்.

# அன்பும் அகிம்சையும்

வேதத்தை வைத்துக் கொண்டு வேள்வி முறையைக் கட்டிக் காத்தது இந்து மதம். அந்த வேள்வியிலே உயிர்ப்பலி இட்டார்கள். கருணை உள்ளம் படைத்த சித்தார்த்தருக்கு இது பொறுக்கவில்லை. ஒரு வேள்வியில் பலியிடுவதற்காகக் கொண்டுவரப்பட்ட ஆட்டையும், குட்டியையும் சித்தார்த்தர் கண்டார். அது ஓர் அரசனது வேள்வி. அந்த அரசனிடம் அவர் சென்றார். அரசனுடன் வாதாடினார். அதில் வெற்றியும் கண்டார். அரசன் அடி பணிந்தான். வேள்வி நிறுத்தப்பட்டது. ஆட்டுக்கும் குட்டிக்கும் விடுதலை கிடைத்தது. இல்லை. உயிர்ப்பிச்சை கிடைத்தது.

இதிலிருந்து நமக்கு ஒன்று புலப்படுகின்றது. இந்து மதத்தின் மெருகு ஊட்டிய ஒரு புதிய வடிவே புத்தமதம். எனவே, இவ்விரு மதங்களும் சகோதர மதங்கள் என்பதில் ஐயமில்லை. புத்த மதத்தின் தோற்றத்தைச் சற்றே முன்னோக்கி ஆராய்வோமானால் அதன் அடித்தளத்தில் அன்பு ஊறிக்கிடப்பதையும் அகிம்சை என்ற இன்னா செய்யாமைக் கோட்பாடு செறிந்திருப்பதையுங் காண்போம்.

போதிமர நிழலில், சீடர்கள் புடைசூழ ஆறாண்டுகளாக அருந்தவஞ் செய்த புத்தபெருமான் பரிநிர்வாணம்



அடைந்தார். புத்தர் பிறந்ததும், ஞானம் பெற்றதும், பரிநிர்வாணம் அடைந்ததும் வைகாசி மாதத்துப் பூரணை தினங்களிலாகும். இதனாலே வைகாசி மாதத்துப் பூரணை புத்த மதத்தவர்களுக்குப் பெரும் மகிமையுள்ள தினமாகக் கருதப்படுகின்றது. இன்று 200 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் உலகெங்கும் புத்த மதத்தைக் கொண்டாடுகிறார்கள் என்றால் அதன் உட்பொருள் என்ன? அது அன்பை, அகிம்சையை உள்ளடக்கியதாக உள்ளமையே ஆகும்.

## மனித மனத்தில் சாந்தி பிறக்க வேண்டும்



ராஜயோகினி
**டாடி பிரகாஷ்மணி**
*தலைவி, பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையம்*

முரண்பாடுகளுக்கு காரணமாக அமைவது "நான்" எனது என்ற அகந்தை "எனது நாடு" "உனது நாடு" என்பவையே. இயற்கையின் சொத்துக்கள் அநாதியானவை. அவற்றுக்கு நாம் எவ்வாறு உரிமை கோருவது? போரும் சமாதானமும் மனித மனத்தில்தான் உருவெடுக்கிறது. எனவே தூய சிந்தனைகளை நமது உள்ளங்களிலே தூவ வேண்டும். உணர்த்த வேண்டும். வானத்தில் ஒரேயொரு சூரியனைத் தான் காண்கிறோம். ஒரேயொரு சந்திரனையே காண்கின்றோம். ஆனால் தொகையான நட்சத்திரங்களைப் பார்க்கின்றோம். அவை ஒன்றோடு ஒன்று மோதுகின்றனவா ? மனிதர்களும் நிலத்தில் காணப்பெறும் அழகுடைய நட்சத்திரங்கள் அல்லவா? அவர்கள் ஏன் தமக்குள் வேறுபாடுகளை வளர்த்து மோதிக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவக் குழந்தை விவேகானந்தர்



சுவாமி விவேகானந்தப் பெரும் ரிஷியை இந்து சமயம் பெற்றுக் கொண்டது எமது தவப்பயனாகும்.

உலக மொழியான ஆங்கில மொழியில், நாவன்மை கொண்டு விளங்கிய சுவாமி அவர்கள், இந்து சமயச் சந்நியாசிகள் வெறும் பக்கிரிகள் என்ற நிலைப்பாட்டை முற்றாக மாற்றி அமைத்த மாபெரும் துறவி. சுவாமி அவர்கள் நரேந்திரனாக தாய் தந்தைக்குரிய சொத்தாக விளங்கிய காலத்திலேயே அவரது தாய் தந்தையர் இக் குழந்தை தெய்வீகக் குழந்தை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டனர்.




இ. சோமசுந்தரம்

விபுலானந்தர்கழகம், திருகோணமலை.


அவர்களது குல வழிபாட்டுக் கடவுளாக விளங்கியது "சிவன்" என்பதை அறிவோம்.

சுவாமி அவர்களுடைய தந்தையார் பெயர் விசுவநாததத்தர்; தாயின் பெயர் புவனேஸ்வரி, காசியில் அமைந்துள்ள சிவனுக்கு விசுவநாதர் எனும் சிறப்பு நாமம் உண்டு. தாயின் பெயர் சக்தியைக் குறிக்கும் பெயராகும் சுவாமி அவர்களின் மண்ணுலகத் தோற்றத்திற்கு சிவனார் அருளே காரணம் எனப் பெற்றோர் பெரிதும் நம்பினர்.

சுவாமி அவர்களின் தாய் தந்தையர் பெயரும் உலக மக்களின் தாய் தந்தையர் பெயரும் ஒன்றாக அமையப் பெற்றுள்ளது திருவருள் சித்தம் என்று கூறினால் மிகையாகாது. சுவாமி அவர்களும் தாய் தந்தையரும் சிவ வணக்கத்தையுடையவர்கள் என்பதை நாம் உறுதி செய்து கொள்ள முடியும்.

பாடசாலைக் காலத்தில் தியானம் செய்துள்ளமையும், தியானத்தில் மூழ்கி அமர்ந்திருக்கும் போது எந்த உணர்வுகளும் தீண்ட முடியாத ஞான நிலையில் இருந்தமை ஆகியன அருளாளர்களால் உணரப்பட்டுள்ளது. பல சம்பவங்கள் அவரது ஒப்பற்ற தியான நிலையைச் சான்றுபடுத்தியுள்ளன.

உலகப் புகழ் பெற்றுள்ள அமெரிக்க நாட்டுச் சொற்பொழிவும், இராம கிருஷ்ண சங்க வளர்ச்சியும் சுவாமி அவர்களின் தெய்வீக சக்தி என்று கூறிவிடலாம்.

சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சரை சுவாமி விவேகானந்தர் தமது குருவாகக் கொண்டார் என்பதும் நரேந்திரர் என்ற பெயருடன் சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சரைச் சந்திக்கச் சென்ற போது, அவரது வருகையை நோக்கி காத்திருந்ததாகவும் நாம் அறிந்தோம்.

சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சரின் பெருமையை சுவாமி விவேகானந்தாவிற்கு எடுத்துச் சொன்னவர் வில்லியம் ஹேஸ்டி என்ற வெளிநாட்டவர். அதன் பின் 1881ஆம் ஆண்டு சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சரை சுவாமி விவேகானந்தர் அவர்கள் சந்தித்தார்கள். அன்றைய முதற் சந்திப்பில் சுவாமி அவர்களை "சிவ அம்சம் பொருந்தியவரே! வருக" எனக் கூறியே சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சர் இன்முகத்துடன் வரவேற்றார் என்பது சரித்திரம்.

அனைத்தையும் ஆய்வு செய்து நோக்கினால் "அன்பு" எனும் ஒளிவிளங்கும் "சிவன்" அன்பு மயமான சுவாமி விவேகானந்தரை எமக்களித்தார் என்று கூறி மகிழமுடியும். அன்பே சிவம்.

# மனத் திருப்தியும் மன நிறைவும்

மன நிறைவு ஏற்படும் போது எல்லை இல்லாத ஆனந்தம் உண்டாகிறது.

மன நிறைவு என்பது வேறு; மனத் திருப்தி என்பது வேறு. இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒருவர் தாம் விரும்பிய பொருளை அடையும் போது, அவருக்குத் திருப்தி ஏற்படுகிறது. தாம் நெடுங்காலமாக விரும்பிய பொருளை ஒருவர் பெறுகிறார். அவரிடம் நீண்டகாலமாக இருந்து வந்த குறை தீர்ந்து விடுகிறது. இது தான் மனத் திருப்தி என்பது.

மன நிறைவு என்பது வெளியில் இருக்கும் ஒரு பொருளைப் பெறுவதனால் ஏற்படும் மகிழ்ச்சி அல்ல. வெளியில் இருந்து நமக்கு ஒரு பொருள் கிடைக்கிறது. அந்தப் பொருளை வேண்டாம் என்று நாம் ஒதுக்குவதில்லை. அதே சமயத்தில் அந்தப் பொருள் நமக்குக் கிடைக்காமல் இருந்தால் அதற்காக வருந்துவதும் இல்லை.

ஒரு பொருளை ஒருவர் விரும்புகிறார். அந்தப் பொருள் அவருக்குக் கிடைக்கவில்லை. அதனால் அவர் மனஞ் சலனம் அடைவதில்லை.



சுவாமி சச்சிதானந்த யோகி

மன நிறைவு என்பது விருப்போ, வெறுப்போ இல்லாத மனநிலையைக் காட்டுவது. இதுதான் மனநிறைவு.

இதுவே தான் கடவுள் அனுபவத்துக்கு அடிப்படையாகவும் இருப்பது.

இந்த உண்மையைத் திருவள்ளுவர் மிக அருமையாக விளக்குகிறார்.

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல."

விருப்பு, வெறுப்பு இல்லாதவர் தான் கடவுள். அவருடைய திருவடிகளாகிய அறிவையும், அனுபவத்தையும் பெற்றவர்களுக்கு எந்தக் காலத்திலும், எந்த வகையான துன்பங்களும் அவர்கள் உடம்புக்கும் மனதுக்கும் ஏற்படுவதில்லை.


இந்த அனுபவத்தைப் பெற்ற அப்பர் பெருமான் "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்கிறார்.

மனதிலே இன்பம் பெருகும் போது மனதைச் சூழ்ந்து இருந்த இருள் அகன்று விடுகிறது. முன்பு துன்பத்துடன் அதற்கிருந்த தொடர்பு அறுந்து விடுகிறது. இப்போது உயிர்க்குலத்தை எல்லாம் நேசித்து, அவருக்குத் தொண்டு செய்யும் அருட்பணி மட்டும் கலங்கரை விளக்கம் போல் உயர்ந்து எல்லோருக்கும் வழி காண்பித்துக் கொண்டிருக்கிறது. மனம் பரிபூரணமாக நிறைவு பெற்று சிறிதும் சலனமோ, சபலமோ இல்லாமல் தூய்மையுடன் விளங்குகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லின் செல்வன் மாருதி!




தொண்டர்களுக்குரிய எல்லாத் தகுதிகளையும் பரிபூர்ணமாகப் பெற்றவர் ஆஞ்சநேயர். அதாவது செருக்கு, பேராசை, பொறாமை, பகையுணர்ச்சி, போட்டி மனப்பான்மை ஆகியவற்றால் மாசுறா நிர்மல ஹ்ருதயம். ராமபிரானிடம் அசைக்க முடியா நம்பக்கை, சோர்வறியா சுறுசுறுப்பு என்ற அம்சங்களை முழுமையாகப் பெற்றவர். அது தவிர தேக பலம், புத்தி பலத்திலும் நிகரற்றவர். அதனால் தான்.

"புத்தியும் பலமும் தூய
புகழொடு துணிவும் நெஞ்சில்
பக்தியும் அச்சமில்லாமல்
பணிவும் நோய் இல்லா வாழ்வும்
உத்தம ஞான சொல்லின்
ஆற்றலும் இம்மை வாழ்வில்
அத்தனை பொருளும் சேரும்
அனுமனை நினைப்பவர்க்கே"

என்று கூறப்படுகிறது. அப்பேற்பட்ட ராமதூதனுக்குத் தொண்டனாக, மண்ணில் நாம் கண்ட மாருதியாக வணக்கத்திற்குரிய ஸ்ரீமத் சந்திரசேகர ஸ்வாமிகள் விளங்குகிறார்.

ஸ்வாமிகளால் இலங்கை வாழ் ஆஞ்சநேய பக்தர்களுக்காய் முதன் முதலாக அருள்மிகு வீர ஆஞ்சநேயர் ஆலயம் 1996ம் ஆண்டு தெஹிவளை 3/11, போதிருக்காராம மாவத்தையில் நிர்மாணிக்கப்பட்டது. தனது பன்னிரண்டாவது வயது முதல் ஸ்வாமிகள் ஆஞ்சநேய வழிபாட்டை மேற்கொண்டு வந்தாலும், பக்தர்களின் ஏகோபித்த பங்களிப்பு அவரின் சேவைக்கு உரமூட்டி வளர்த்து வருகின்றது என்று கூறினால் அது மிகையாகாது. பக்தர்கள் உடலாலும் உள்ளத்தாலும் பொருள் மூலதனங்களினாலும் பல்வேறு வகையில் தமது பங்களிப்பினை ஆற்றி வருவதை வார்த்தைகளால் வடித்திட முடியாது.

இக் கோயில் மக்களின் கோயிலாக மிளிருகின்றது. இங்கு பக்தர்களே சகல கருமங்களையும் ஆற்றுகிறார்கள். காலை, மாலை இரு வேளைகளிலும் பூசை நடைபெறும். பூசையைத் தொடர்ந்து, பஜனையும் அருள்மிகு சந்திரசேகர ஸ்வாமிகளின் மன்றாட்டமும் இடம்பெறும். இங்கு அர்ச்சனை செய்வது கிடையாது. பதிலாக மக்களின் துயரங்களை அதாவது நோயால் பீடிக்கப்பட்டவர்கள், தாலி வரம் கேட்போர், பிள்ளை வரம் வேண்டி நிற்போர் என பல தரப்பட்ட பிரச்சினைகளுடன் வருவோரின் துன்பங்களை நீக்குவதற்காக, தம்மை வருத்தி ஆஞ்சநேயரிடம் மன்றாடி வேண்டி, பிறரின் மனக் கவலைகளைத் துடைப்பார். மன்றாட்டத்தின் போது இடைக்கிடையே அருளும் வந்துவிடும். இச் சமயத்தில் கோலாலும் கதாயுதத்தாலும் தன்னைத் தானே பல வழிகளாலும் தாக்கிக் கொள்வார். இச் சமயத்தில் ஆஞ்சநேயரே பூவுலகத்திற்கு மீண்டும் வந்துவிட்டாரோ என்று எண்ணத் தோன்றும் வண்ணம் ஸ்வாமிகள் காட்சி தருவார். இறுதியாக மங்களம் பாடி தீபாராதனையுடன் பூசை நிறைவு பெற்று, பின் பிரசாதமும் வழங்கப்படுகிறது.



செல்வி இராஜினி மகாராஜா

செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் விளக்குப் பூசையும் ஞாயிற்றுக் கிழமைகளில் விசேட அபிஷேக ஆராதனைகளும் நடைபெற்று அன்ன தானமும் வழங்கப்படுகிறது. இதை தவிர விசேட பண்டிகை தினங்களிலெல்லாம் அபிஷேக ஆராதனைகள் விமரிசையாக நடைபெறுகின்றன. இத் தினங்களில் பக்தர்கள் இளநீர், பால் அபிஷேகம் செய்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள். அத் தருணம் சமய சொற்பொழிவுகளும், கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன. மற்றும் இங்கு பக்தர்கள் மெய்மறந்து கண்களை மூடி மண்டியிட்டுத் தியானிப்பதும், தமது கரங்களாலேயே தெய்வங்களுக்கு மாலை அணிவிப்பதும் ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும். அபிமானிகளால் பாடப்பட்ட துதிப்பாடல்களே பெரும்பாலும் பஜனைகளில் இசைக்கப்படுவதுடன், இப் பாடல்கள் புத்தகங்களாகவும், ஒலிப்பதிவு நாடாக்களாகவும் வெளியிடப்பட்டுள்ளன. உலகிலேயே ஆஞ்சநேயருக்கு முதன் முதலில் தேரெடுத்த பெருமையும் இக் கோயிலையே சாரும்.

இக் கோயிலின் அமைப்பு முறையை நோக்கும் போது ஒரே மேடையில் வெண்கலத்திலான விநாயகர், சீதாப் பிராட்டி ஸ்ரீ ராமச்சந்திரர் சமேத இலக்குமணர், ஆஞ்சநேயர், பஞ்சமுக ஆஞ்சநேயர், துர்க்கை அம்மன், வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமானும், வேறாக ஒரு மேடையில் சரஸ்வதி தேவியாரின் சிலையும் வெளி மண்டபத்தில் கருங்கல்லிலான வீர ஆஞ்சநேயர் சிலையும் உள்ளன. ஜயவீர ஆஞ்சநேயரின் கட்டளைகளின் படியே இக் கோவிலை அமைத்தும் இரவு, பகல் தூக்கமின்றி வழி நடத்தியும் வருகிறார் ஸ்வாமிகள். சில வேளைகளில் ஆஞ்சநேயரின் சிறப்புகள் பற்றியும் தனக்கு அவர் அருளால் கிடைக்கப் பெற்ற மெய்சிலிர்க்க வைக்கும் தெய்வீக அனுபவங்கள் பற்றியும் அருளுரைகள் ஆற்றுவார். அன்னையும் பிதாவும் தான் கண்கண்ட முதல் தெய்வமென்றும், அவர்களைத் தினமும் காலையில் வணங்கிய பின்னரே ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய கடமைகளை ஆற்ற வேண்டும் என்பதும் ஸ்வாமிகளின் அன்புக் கட்டளையாகும். ஆஞ்சநேயருக்கு பூ மாலையோ, துளசி மாலையோ வெற்றிலை மாலையோ வடை மாலையோ தான் தேவை என்றில்லை. உள்ளம் உருகி அன்பாலே கண்ணீர் மாலை அணிவித்தால் அதுவே போதுமென்றும் அடிக்கடி ஸ்வாமிகள் கூறுவார்.

இங்கு தினமும் சாரிசாரியாக கவலைகளைச் சுமந்த நிலையில் ஸ்வாமிகளைத் தேடி வரும் மக்கள், அருள் வாக்கினால் நிம்மதி அடைந்து செல்கின்றனர். கவலைகள் தீர்ந்து எல்லாம் இனிதே நடைபெற ஆஞ்சநேயர் உறுதுணையாக இருக்கிறார் என்று நாம் சும்மா இருந்திட முடியுமா? அந்த அஞ்சனை மைந்தனின் திருநாமம் திக்கெட்டும் பரவி கோடானு கோடி மக்கள் பயனடைய ஆலயம் மேன்மேலும் வளர எம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும். மக்களின் நலன் பொருட்டும், உலகில் அமைதி நிலவும் பொருட்டும் இங்கு எழுந்தருளியிருக்கும் ஆஞ்சநேயரை எல்லோரும் கட்டாயமாக சேவிக்க வேண்டும், அருள் பெற வேண்டும் என்கிறார் ஸ்வாமிகள் ஆர்வத்துடன்.

கிள்ளிக் கொடுத்தால், அள்ளிக் கொடுக்கும் பண்பு கொண்டவரல்லவா ஆஞ்சநேயர். நாம் எல்லோரும் அவர் அருட்கடாட்சத்தைப் பெற்று சகல சௌபாக்கியங்களுடன் சீரும் சிறப்புமாக வாழ்வோமாக.



பலதரப்பட்ட பிரச்சினைகளுடன் வருவோரின் துன்பங்களை நீக்குவதற்காக, தம்மை வருத்தி ஆஞ்சநேயரிடம் மன்றாடி வேண்டி, பிறரின் மனக் கவலைகளைத் துடைப்பார் ஸ்ரீ சந்திரசேகர ஸ்வாமிகள்.


**Avoid Drugs**
**and**
**Plant Palmyrah**
**for**
**Prosperous Life**

*With Best Compliments from*


**PALMYRAH DEVELOPMENT BOARD**

53, Kandy Road,
Jaffna.

244, Galle Road,
Colombo - 04.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எங்கே இறைவனைக் காணலாம்?

ஒரு சிவராத்திரி நாளன்று காசி விஸ்வநாதர் ஆலயத்தில் குடமுழுக்கு நடந்து கொண்டிருக்கிறது பெருந்திரளான பக்தர்கள் குடமுழுக்கில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். நிறைந்த குடங்களுடன் நீண்ட வரிசையில் நின்ற பக்தர்கள் எப்போ தங்கள் நேர்த்தியை சிவலிங்கத்தின் மேல் அபிஷேகம் செய்வோம் என்ற அங்கலாய்ப்பு.

அப்போது இந்தப் பக்தர்கள் வரிசைக்குள் இடையே மிக உடல் தளர்ந்த நிலையில் கண் தெரியாத ஒரு வயோதிப மாதும் கணவனும் அகப்பட்டு, திசை தெரியாமல் தவிக்கிறார்கள். அவர்களுக்கு ஒரே தண்ணீர்த் தாகம், "தண்ணீர் தண்ணீர்" என்று ஓலமிடுகிறார்கள். தண்ணீர்க் குடங்கள் வைத்திருக்கும் பக்தர்கள் கண்களில் அவர்கள் காணப்பட்டும் அவர்களில் ஒருவரும் கருணை கூர்ந்து தண்ணீர் கொடுக்க முன் வரவில்லை.

அப்போது அங்கே பார்வைக்கு மிகவும் கரடுமுரடான ஒருவன் "இதோ தண்ணீர் குடியுங்கள்," என்று தான் குடமுழுக்குக்குக் கொண்டுவந்த தண்ணீரை அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்து மகிழ்ந்து நின்றான். குடித்தவர்கள் அதே வேளையே சிவனும் பார்வதி தேவியுமாக அவனுக்குக் காட்சியளித்து "என்ன வரம் வேண்டும்? கேள்" என்கிறார்கள்.



தொகுப்பு:
அ. இராமலிங்கம்
கொழும்பு

தண்ணீர் கொடுத்தவனைச் சூழ்ந்திருந்த பக்தர்கள் கூட்டம் இக் காட்சியைக் கண்டு பெரிதும் வியந்து, "நீ இவ்வுலகில் இத்தனை பெரிதும் வரம் பெற என்ன புண்ணியம் செய்தனை" என்று வினவுகின்றனர். அவன் தன் கதையை இப்படிச் சொல்கிறான்.

"நான் ஓர் கொள்ளைக்காரன், எனது தொழில் கொள்ளையடிப்பதும் உலகில் என்ன என்ன பாவங்கள் உளவோ அவற்றையெல்லாம் செய்து விட்டேன். இன்று எனது பாவங்களைத் தீர்ப்பதற்கு குடமுழுக்கு செய்ய வேண்டும் என்று நினைந்து குடமுழுக்கெடுத்து வந்தேன்.

"இடையில் இந்த வயது முதிர்ந்த கண் தெரியாத தம்பதிகள், என் கண்முன்னே எனது அன்னையும் பிதாவும் போல் தோற்றினர். மேலும் அவர்கள் தாகத்துடன் 'தண்ணீர் தண்ணீர்' என்று ஓலமிட்டது என் மனதைப் பெரிதும் வருத்தியது. என்னால் மேலும் பொறுக்க முடியவில்லை.

"குடமுழுக்குக்கு வைத்திருந்த தண்ணீரை அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தேன். இதுவே நான் வாழ்நாளில் செய்த பெரிய புண்ணியம் எனக் கருதுகிறேன்" என்றான். "இதுவே என் ஜென்ம சாதனையாகிவிட்டது" என்றான்."

இறைவன் எம்மை அறிய எத்தோற்றத்தில் வருகிறான் என்பதை பகவான் சத்தியசாயிபாபா அவர்கள் சொன்ன இக் கதையில் இருந்து நினைவு கூர்கிறோம்.

| | |
|---|---|
| அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி<br>பகவன் முதற்றே உலகு. | *A is the starting - point of the world of sound: even so is the Ancient One Supreme the starting - point of all that exists.* |
| கற்றதனால் ஆய பயனென்கொல்? வாலறிவன்<br>நற்றாள் தொழாஅர் எனின். | *Of what avail is all thy learning if thou worship not the Holy Feet of Him of the perfect intelligence?* |
| மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்<br>நிலமிசை நீடுவாழ் வார். | *Behold the man who taketh refuge in the Sacred Feet of Him who walked on flowers; his days will be many upon the earth.* |
| - திருக்குறள் | -Thrukkural |

புரவலர்: எஸ். திருநடராஜா குடும்பத்தினர் (வத்தளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய உணர்வு

சமயம் பயனுள்ள சமயமாக இருக்க வேண்டுமானால் அதற்கு நல்லுணர்வு ஆர்வம் மிகவும் அவசியம். அதே சமயத்தில் சமய உட்பிரிவுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுகின்ற ஆபத்து ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளவும் வேண்டும். இந்து சமயம் என்பது ஒரே ஒரு சமயந்தான். ஒரே ஒரு இறைவனைப் பற்றித்தான் இந்து சமய சாத்திரங்கள் கூறுகின்றன. சமய வழியில் இந்து என்பவன் ஒருவனே. இந்த உணர்வு இருக்கும்வரை தான் இந்து சமயத்தினால் ஒவ்வொரு இந்துவும் பயன்பெறமுடியும்.

> ஞானியாக விழையும் ஒருவன் முதல் முதலாகக் களைந்தெறிய வேண்டியது அச்சமே, நமக்குப் பெரும் கேடுகளை விளைவிக்கும் பகையும் அதுவொன்றே. அடிக்கடி உனக்குள் "நான் உடல் அல்ல; மனமல்ல; அறிவல்ல; நினைவல்ல; ஆத்மாவே எனக்கூறிக்கொள்" அனைத்தையும் எறிந்து விடும் திறமை பெறும் போது மெய்யான ஆத்மாவே மிஞ்சும்.

ஞானவாழ்க்கைக்கு மிக உயர்ந்த துணையாவது தியானமே என இந்து சமய சாத்திரங்கள் செப்புகின்றன. தியானம் என்ற வழியினைக் கடைப்பிடிக்காவிட்டால் சமயத்துக்கும் வாழ்க்கைக்கும் தொடர்பு இருக்காது. தியானத்தில் நமது ஸ்தூல நிலைகள் அத்தனையும் நம்மிடமிருந்து களைந்துவிட்டு நமது தெய்வீக இயல்பினை உணர்கிறோம். தியானத்தில் நாம் எவ்வித புறத்துணையையும் சார்ந்து நிற்பதில்லை. ஆன்ம உணர்வு மிக இருண்ட இடங்களில் மிகப் பிரகாசமான ஒளியை தீட்டிவிடும். மிக இழிந்த பொருளின் மீது நறுமணத்தைச் சொரியும். தீயோரையும் தெய்வமாக்க வல்லது அது. பகையும் சுயநலமும் நீக்கப்படும். உடலின் நினைவு குறை வதற்கேற்ப மிக்க நன்மை விளையும். ஏனெனில் உடலே நம்மைக் கீழே இழுத்துக் கொணர்கிறது. பற்றுதல், ஒன்றுபடுதல் இவையே நம்மைத் துயருக்கு உள்ளாக்கு கின்றன.

இதுவே இரகசியம். "யான் ஆன்மா உடல் அல்லேன். இப்பிரபஞ்சம் முழுவதும் அதன் தொடர்புகளோடும் அதிலுள்ள நன்மை தீமைகளோடும் ஒரு திரை மீது வரையப்பட்ட வரிசையாக அமைந்த சித்திரங்களே, காட்சிகளே, அவற்றுக்கு யான் சாட்சியாக நிற்கிறேன்" என நினைத்தலே அந்த இரகசியமாகும்.

அன்பாலும் பக்தியாலும் பரம்பொருளோடு முழு ஐக்கியம் அடைய, பக்தியாகி வழிதேடுவதுபோல, ஞானியும் தனது அழுக்கற்ற புத்தியின் திறமையால் மெய்யுணர்வை வலிந்து பற்றுகிறான். அவன் பழைய குறிகள் அனைத்தையும் பழைய நம்பிக்கைகள் அனைத்தையும் மூடக் கொள்கைகள்அனைத்தையும்



**க. சிவசங்கரநாதன்**
செயலாளர், சரசாலை இந்து மன்றம்.

இம்மை மறுமைக்குரிய எல்லா ஆசைகளையும் விட்டெறியத் தய ாராகவும் முக்திப் பேற்றை மட்டும் அடைய உறுதி பூண்டவனாகவும் இருத்தல் வேண்டும். இவ்வுலகம் இயற்கையின் பரிணாமமும் இறைவனின் சக்திப் பிரகாசமும் ஆகும். மாயை என்னும் தோற்றமாகிய திரை வழியாக நோக்கிப் பிரமத்தை அதாவது பரம் பொருளை அறிந்துரைக்கும் வகையே அது.

உலகமும் மனிதனும் தெய்வமும் ஒன்றே என்பது பன்முறையும் மறைகள் நமக்கு ஊட்டும் போதனையாகும். ஆனால் திரையை ஊடுருவி நோக்கி இந்த உண்மையை உணரவல்லார் சிலரே. ஞானியாக விழையும் ஒருவன் முதல் முதலாகக் களைந்தெறிய வேண்டியது அச்சமே, நமக்குப் பெரும் கேடுகளை விளைவிக்கும் பகையும் அதுவொன்றே. அடிக்கடி உனக்குள் "நான் உடல் அல்ல; மனமல்ல; அறிவல்ல; நினைவல்ல; ஆத்மாவே எனக்கூறிக்கொள்". அனைத்தையும் எறிந்து விடும் திறமை பெறும் போது மெய்யான ஆத்மாவே மிஞ்சும்.

நாம் முகமலர்ச்சியும் அக மலர்ச்சியும் உடையவராதல் வேண்டும். துயரம் தோய்ந்த முகம் சமய வாழ்வுக்கு அறிகுறியாகாது. சமயம் அனைத்திலும் சிறந்ததாகவும் உலகிலே மிக ஆனந்த மானதாகவும் இருக்க வேண்டும். இறைவன் மீது தூய்மையான பேரன்பு கொண்டிருக்கும் ஒருவன் துயர நெஞ் சோடிருக்கக் காரணம் யாது? அவன் இன் பமாக வாழும் குழந்தை போன்று இருக்க வேண்டும். உண்மையாகவே இறைவனது குழந்தை யாயிருக்க வேண்டும்.

சமயத்தின் சாரமாவது நெஞ்சத்தை தூய்மையானதாக ஆக்குதலே. பரலோக நாடு நமக்குள்ளே இருப்பதொன்று; ஆனால் நெஞ்சில் தூய்மை யுடையோரே மன்னனாகிய இறைவனைக் காணவல்லவர் ஆவார். ஞானம் என்பது கொள்கைக்கு மேலானஅப்பாலான ஒரு நிலையை அடைவதே பகவத்கீதையில் கிருஷ்ண பகவான் ஞானத்தைப் பற்றி மிகவும் தெளிவாகப் போதித்துள்ளார். இறைவனது இயல்பை உணர்த்துவதும், நாம் இறைவனுடைய இயல்பை பெறுவதற் கான மார்க்கத்தை காட்டுவதும் தான் இந்து சமயத்தின் அடிப்படைத் தத்துவம் ஆகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதி சோதிடம்

# ஒரு தூய துறவியின் ஜாதகம்

"விக்னேஸ்"



அன்புக்குரிய வாசகர்களே!

ஒன்பதாண்டு காலம் ரிஷிகேசத்தில் வாழ்ந்து யோக வாழ்க்கையில் ஈடுபட்டவரும், "விக்னேஸ்" என்ற பெயரில் பிரபல்யமடைந்துள்ள சோதிட ஆய்வாளரும், "வான்மதி" சோதிட சஞ்சிகை ஆசிரியருமான திரு. எஸ். விக்னேஸ்வரன் அவர்கள் சந்நிதி வாசகர்களின் சோதிடம் தொடர்பான சந்தேகங்களுக்கு அல்லது பிரச்சினைகளுக்கு விளக்கம் அளிக்க முன்வந்துள்ளார்.

சந்நிதி அன்னாருக்குத் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

வாசகர்கள் தமது பிரச்சினையைச் சுருக்கமாக ஒரு தாளில் தெளிவாக எழுதி, பின்வரும் கூப்பனை நிரப்பி, சுயவிலாசமும் முத்திரையும் இடப்பட்ட கடித உறையுடன் எமக்கு அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி.

ஆசிரியர்
"சந்நிதி"
39, 36 வது ஒழுங்கை
கொழும்பு – 06.

---

ஆசிரியர், **சந்நிதி சோதிடம்**
"சந்நிதி"
முழுப் பெயர்: ..............................
பிறந்த திகதி: .................... நேரம்: ....................
விலாசம் : ..............................
..............................

இத்துடன் இணைத்துள்ள எனது பிரச்சினைக்கு சோதிட ஆய்வாளர் "விக்னேஸ்" அவர்களின் பதிலை எதிர்பார்க்கிறேன்.

திகதி: .................... ....................
கையொப்பம்

---

**வா**ழ்வு என்ற நதி பல மேடு பள்ளங்களைக் கடந்து செல்கின்றது. இறுதியில் சேருமிடம் ஒன்றாக இருப்பினும் செல்லும் வழியில் காணும் அனுபவங்களும் அவற்றினால் ஏற்படுகின்ற நிரந்தரமான தாக்கங்களும் வாழ்வைத் திசை திருப்பி விடுகின்றன. அறம், பொருள், இன்பம் என்னும் அடிப்படையில் பலர் தமது வாழ்வுப் பாதையை அமைத்துக் கொண்டாலும், இவ் வழியில் செல்பவர்களின் அனுபவங்கள் உலகியல் அனுபவங்களாகவும் இன்பம், துன்பம் என்ற எல்லைகளுக்குள் உட்பட்டதாகவும் உள்ளன. இந்த அனுபவங்களின் தாக்கங்களினால் ஏற்படும் கர்ம பந்தத்தின் தொடர்புகளைக் கட்டறுப்பதற்காக முக்தி என்ற வீடுபேற்றை நோக்கி தம் வாழ்வை நெறிப்படுத்தி, கொண்ட குறியும் தவறாது நின்று தமக்கென்று ஆத்மீகம் என்கின்ற பாதையில் செல்பவர்கள் ஒரு சிலரே.

ஆத்மீகப் பாதையில் செல்பவர்களுக்கு அறியாமை என்ற அஞ்ஞான இருளை விலக்கிட உண்மைப் பொருளை அறிய உதவுவது மெய்ஞ்ஞானம். பார்வையில் ஏற்படுகின்ற தவறால் கயிறு பாம்பாகத் தெரிவது அஞ்ஞானம். மறைக்கின்ற பொருளில் மறையா மெய்பொருள் காண்பது மெய்ஞ்ஞானம்.

மெய்ஞ்ஞானியாகவும், சநாதன தர்மத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவரும், தீர்க்கதரிசியும், ஆத்ம அனுபூதிமானும், பல லட்சக்கணக்கானவர்களுக்கு ஞான ஒளியாகவும், ஜகத்குரு ஆதிசங்கரரின் காஞ்சி காமகோடி பீடத்தின் 68ஆவது ஆச்சார்ய சுவாமிகளாக விளங்கியவரும் ஆகிய ஸ்ரீ சந்த்ரசேகரேந்திர ஸ்வாமிகள் ஒரு தூய துறவியாவர்.

அண்டத்துக்கோள்கள் சுவாமிகளின் ஜனன ஜாதகத்தில் கூறுவது என்ன?

இந்தியாவின் தென்னாற்காடு மாவட்டத்தில் விழுப்புரம் நகரத்தில் ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளுக்கும் மகாலட்சுமி அம்மையாருக்கும் 20.05.1894 ஞாயிற்றுக் கிழமையும் அனுச நட்சத்திரமும் கூடிய சுப தினத்தில் பகல் நாழிகை 19க்கு சுவாமிகள் இரண்டாவது தவப் புத்திரர் ஆக அவதாரம் செய்தார். சுவாமிகளிற்கு பெற்றோர்கள் இட்ட பெயர் சுவாமிநாதன்.

சுவாமிகள் சிங்க இலக்கினம் உதயமாகின்ற வேளையில் மனதிற்குரிய காரகன் சந்திரன் 4ஆம் இடத்தில் நீசமடையவும், இலக்கினாதிபதி சூரியன் கர்ம பீடமாகிய 10ஆம் இடத்தில் வியாழன், புதன் கிரகங்களுடன் இருக்கும்போது ஜனனமாகியுள்ளார்.

கல்விக்குரிய புதன் கிரகமானது சூரியன் இலக்கினாதிபதியுடன் சேர்ந்திருப்பது விசேஷமானது. இளமையிலே திண்டிவனம், ஆர்க்காடு, அமெரிக்க மிஷன் உயர்நிலைப் பள்ளியில் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்த இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | | |
|---|---|---|---|
| வெள்ளி ராகு | 9 | புதன் வியாழன் சூரியன் | 11 |
| செவ் | இராசி | | 12 |
| 6 | | | 1 |
| 5 | சந்திரன் | 3 | சனி கேது |

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | 6 | கேது | வியாழன் |
| செவ் புதன் | நவாம்சம் | | 9 |
| வெள்ளி | | | 10 |
| 2 | சந்திரன் ராகு | 12 | சனி |

சனி திசை இருப்பு : வரு 3 மாதம் 8 நாள் 1

பல பரிசில்களை கல்வியில் திறமைக்காகப் பெற்றிருந்தார். புதன், யோக காரகன் வியாழன் உடன் சேர்க்கை பெறுவது இவாது ஜாதகத்தில் சிறப்பானது. புத்திக் கூர்மையும் நுண்ணறிவும் பெற்ற இவருக்கு முதலாவது 7½ சனீஸ்வரனின் காலத்தின் முடிவில் இளமையிலே வாழ்வில் முக்கிய திருப்பு முனையேற்பட்டது. "இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து, அதனை அவன் கண் விடல்" – என்பதற்கிணங்க விதி 68ஆவது காஞ்சி காமகோடி ஞான பீடத்திற்கு 13.2.1907, புதன்கிழமை, புதன் திசையில் யோககாரகனாகிய 9ஆம் அதிபதி செவ்வாயின் புத்தியில் பொறுப்பேற்க வைத்தது. அன்றோடு சுவாமிநாதன் என்ற பூர்வாச்சிரமப் பெயர் அகன்று தீக்ஷா நாமமான ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி என்ற நாமம் சுவாமிகளோடு இணைந்தது.

காஞ்சி காமகோடி பீடாதிபதி என்கின்ற பொறுப்பு இவருக்கு எட்டியதற்கு புதன், வியாழன், சூரியன் இலக்கினத்திற்கு 10ஆம் இடத்திலும் சந்திரனிற்கு 7ஆம் இடமான இடப இராசியிலும் ஜனன ஜாதகத்தில் இருப்பதே காரணம்.

புதன் திசையில் சநாதன தர்மத்தின் உள்ளடக்கமான வேதம், புராணம், சரித்திரம், வழிபாடு ஆகியவைகளை முழுமையாக அறிந்தவரும் பின்னால் அவற்றின் வளர்ச்சிக்கு வித்திட்டவருமானார். அறிவிற்குரிய கிரகமான 5ஆம் அதிபதியான வியாழனின் திரிகோணத்தில் கேது இருப்பதும், சந்திரன் நீசமடைவதும் ஆத்மீக வாழ்விற்கும், இவரது உண்மை ஞானத்திற்கும் பொருத்தமாயுள்ளது.

துறவியாக வாழ்வதற்கு வேறென்ன காரணமிருக்கும்? சுப வீடுகளான 2,4,7ஆம் இடங்களில் பாபக் கிரகங்கள் இருப்பதும், உலகியல் வாழ்விற்குரிய வெள்ளி 8ஆம் இடத்தில் ராகுவுடன் மறைவதும், இலக்கினாதிபதி சூரியன் நவாம்சத்தில் இருக்கும் வீடான மீனத்திற்கு 7ஆம் இடத்தில் சனீஸ்வரன் இருப்பதே இவரைப் பற்றற்ற வாழ்வில் பற்றி நிற்க வைத்தது.

புதன், கேது, வெள்ளி திசைகளில் சுவாமிகள் சநாதன தர்மத்தின் வளர்ச்சிக்கு பல வகைகளில் அருள்பாலித்து வந்தார். வெள்ளி திசையில் குறிப்பாக இராகு புத்தியில் இராகு ஜனன ஜாதகத்தில் தந்தைக்குரிய 9ஆம் இடத்தை கடந்து செல்லும் வேளையில் 24.07.1929இல் இவரது தந்தை காலமானார். இதே வெள்ளி திசையில் வியாழ புத்தியில் சந்திரனிற்கு 4ஆம் இடத்தை கோசாரத்தில் இராகு கடந்து செல்லும் தருணம் 14.06.1932இல் சுவாமிகளின் தாயார் இவ்வுலகை விட்டுச் சென்றார்.

1970ஆம் ஆண்டில் இருந்து ஞானபீடத்தை விட்டு விலகி முழுமையான வைராக்கியசீலராகவும், பற்றற்ற துறவியாகவும் பல கோடி பக்தர்களுக்கு நடமாடும் தெய்வமாகவும் அருள்பாலித்து வந்தார்.

சுவாமிகளின் 100ஆவது ஆண்டு பூர்த்தியான கனகாபிசேகம் 26–05–1993 இல் வெகு சிறப்பாக நடைபெற்றது. பூரண ஆயுளை உடைய காஞ்சிப் பெரியவர் 1994ம் ஆண்டு ஜனவரி மாதம் 08ம் திகதி இவரது ஜன்ம நட்சத்திரத்தை சந்திரன் கடந்து செல்லும் வேளையில் பூதவுடலை விட்டு பிரிந்து இன்றும் ஸ்வயம் ஜோதியாய் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் பிரகாசிக்கின்றார். காஞ்சிப் பெரியவரின் பூரண ஆயுளிற்கு ஜோதிட ரீதியான விளக்கம் வேறொன்றுமல்ல: இலக்கினாதிபதி சூரியன் கேந்திரமேறி, தனது நட்சத்திரமான கார்த்திகையின் 4ஆம் பாதத்தில் அமருவதே ஆகும்.

"பிரபுவே, நான் உன் உடைமை. நீ உடைமையாளன். நீ என்னைச் சார்ந்து, என் உடைமையாக இருப்பவனில்லை. அலையில்லாமல் சாந்தமாக சமுத்திரம் இருக்கலாம். உள்ளே எப்போதும் அது அப்படியிருப்பதுதான். அதுபோல் ஜீவர்களும் பிரபஞ்சமும் இல்லாமல் நீ இருக்கலாம். ஆனால் சமுத்திரமில்லாமல் அலை இருக்க முடியாது. அதுபோல், நீ இல்லாமல் நான் இல்லவே இல்லை. சமாதி நிலையில் 'நான் – நீ' பேதமில்லாத ஏகத்தை நான் அனுபவிக்கிறேன் என்பதால் வியவஹார தசையில் நம்மை இரண்டாகப் பார்க்கிறபோது, 'நீதான் என் உடைமை, நீதான் என்னைச் சார்ந்திருப்பவன்' என்று நினைத்தால் அது எப்பேர்ப்பட்ட அசம்பாவிதம் தெரியுமா? 'சமுத்திரம்தான் அலையைச் சேர்ந்தது; அலை சமுத்திரத்தைச் சேர்ந்ததில்லை' என்று நினைக்கிற மாதிரிதான். – காஞ்சிப் பெரியவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாண்டு வாழ்க!



சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தமது 73ஆவது அகவையை 7.1.98 அன்று நிறைவு செய்கிறார்கள். இதனையொட்டி நூல் வெளியீடு உட்படப் பல நிகழ்ச்சிகள் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படுகின்றன.

தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டு செய்வதில் மிக இக்கட்டான சூழல்களுக்கெல்லாம் முகம் கொடுத்து, ஆலயத் தொண்டுடன் அனாதைகட்கும் பணி செய்து மக்கள் சேவையை மகேசன் சேவையாக்கியவர். சைவம் வளர்த்த மங்கையருள் அவரே தனியொரு ஸ்தாபனமாக விளங்குகிறார். அன்னாரின் பெருமை இயம்புதற்கரியது.

துர்க்கா துரந்தரியாகிய சிவத்தமிழ் அன்னை ஸ்ரீ துர்க்கை அம்மன் அருளால் பல்லாண்டு வாழ்க!

– ஆசிரியர்

# இப்புவிமீது வாழ்க நெடிது!

சீரிய நல்லாசிரியை; பேச்சாளர்
பாரிய சமூகசேவகியாகி துர்க்கையைத்
தினம் துதிக்கும், உத்தமியே; துர்க்கா துரந்தரியே
இப் புவி மீது வாழ்க நெடிது!

வளம் நிறை யாழ் நகரின்
புகழ் நிறை தெல்லியூர்க்கண்
சீரிய சைவம் வளர்க்கின்ற
நேரிய மாந்தர்க்குள்ளே
தன்னிகரற்ற தனித்துவம் நிறை
தாயே தங்கம்மா அம்மையே!
அன்னை துர்க்கை அம்பாளின்
அன்புறு அடியாள் நீ!

தெல்லியம்பதியினிற் பிறந்த நீ
நற்பண்புடைத் தொண்டரானாய்
தெள்ளு தமிழை நன்கு கற்று
அள்ளு புகழ்ப் பண்டிதையாய்ப் புலவராய்
ஊர் வாழ்த்தும் நல்லாசிரியையாய்
பார் போற்றும் மேடைப் பேச்சாளியாகி
பெருமை நிறை துர்க்கா தேவஸ்தானத்தின்
பேராளராகும் பேறும் பெற்றாய்!

நின் நிகரில்லாத் தலைமைத்துவமும்
நீண்டு விட்ட சேவைகளும்,
தீவிர சமயப்பற்றும், மனிதநேயமும்
பாரெங்கும் நின் புகழைப் பரப்பி நிற்க
துர்க்கா தேவஸ்தானமெனும் தேரின்
முதுகெலும்பாம் அச்சாணி நீயேயானாய்!

நின்வாக்கு அருள்வாக்கென்போர்
நின்னைத் தொழுதிடும் நம்மவர் எத்தனை
நிர்வாக ஆற்றல் நிறைந்தவள் பெண்ணென
நிரூபித்துப் பெண்ணிற்குப் பெருமை சேர்த்தாய்!
நின்பணியைப் பின்பற்றியே
ஈங்குள்ள மன்றங்கள் பல
தம் சேவை தொடர்ந்திட
தரமான வழிகாட்டி யானாய்!

நின் இங்கிதப் பேச்சும், சிந்தையில் தெளிவும்
காரிய சித்தியும் கடமையிற் கண்ணும்
பாரிய சிக்கல் எதனையும் தீர்க்கும் பக்குவமும்
என்றென்றும் தொடர்ந்திட வேண்டும் அம்மா!

அனாதைக் குழந்தைகளை ஆதரித்து
அவர்தம் கல்வியிற் கருத்தினை நிறுத்தி
பெண்குழந்தைகளைத் தன்குழந்தையென்றெண்ணி
பண்புடன் பராமரித்து மகிழ்ந்து
பல்கலைக் கழகம் வரை அனுப்பிய பெருமை
துர்க்கா மகளிர் இல்லத் தலைவி நின்னையே சாரும்!

இத்தனை பெருமை கொண்ட
இனிய நின் புகழை யாமும்
வாயினிக்க வாழ்த்தித்
துதிக்கின்றோம் – இலுப்பைத் தோட்டத்துத்
துர்க்கை அம்மன், துர்க்காபுரத்
துர்க்கை அம்மனான
மெய்த் திருவருளால் எல்லா
மேன்மையும் மேதினியில் பெற்று
மென்மேலும் பெருமையுடன்
மேன்மையுடன் வாழ்ந்திடுக.

பொய் நெறி வழிசென்ற போலி
மதவாதி கட்கும்
மெய் நெறி காட்டுகின்ற சைவ
மதத்தின் மேன்மையைக் காட்டித்
துய்ய நற்பணி பல செய்து – கோபுரத்
தூபியென உயர்ந்திட்ட
தாயாராம் துர்க்கா துரந்தரியே
நின் அன்பு மிகு மக்கள் நாம்
உவந்துரைத்தோம் இவ் வாழ்த்தை!




செல்வி ஸ்ரீகுமாரி கதிரித்தம்பி
*கொழும்பு இந்து மகளிர் மன்றம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்தங்கேணி - பெரியவளவு
## ஸ்ரீ மகாகணபதி பிள்ளையார் கோவில்



இலங்கையின் வடபிரதேசத்தில் யாழ்ப்பாண நகரில் இருந்து 8 மைல் தூரத்தில் சிற்றூர் ஆகிய சித்தங்கேணி கிராமத்தின் மத்தியில் அதாவது கிராமத்தின் நாற்சந்தியில் நாயகன் ஆக வீற்றிருக்கின்றார். ஏக நாயகன் ஆகிய விநாயகர் வீற்றிருக்கும் திருத்தலம் ஆனது சித்தங்கேணி பெரியவளவு ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் கோவில் என அழைக்கப்படுகிறது. இங்கு வீற்றிருக்கும் மூலஸ்தான விக்ரகம் வலஞ்சுழி கொண்டு இருப்பதோடு விக்கினங்களைத் தீர்ப்பவர் ஆகையால் விக்கினராஜா ஆகிறார் என்பது போல் அல்லாது எமது ஊரில் விக்கினங்கள் வரவிடாது நாற்சந்தியில் நடுநாயகனாக இருந்து எமது சிறிய சித்தங்கேணி கிராமத்தைக் காத்துக் கொண்டிருக்கும் அவருக்கு என தமிழ் உயிர் எழுத்து 'அ' தொடக்கம் 'ஃ' வரை அவரது புகழ் சொல்லிய பதிகம் ஒன்றுள்ளது.

அன்புடை யமரரைக்
காப்பாய் ஜெய ஜெய
ஆவித் துணையே
கணபதி ஜெய ஜெய
இண்டைச் சடைமுடி
யிறைவா ஜெய ஜெ
ஈசன் றந்தருள்
மகனே ஜெய ஜெய
உன்னிய கருமம்
முடிப்பாய் ஜெய ஜெய
ஊர்நவ சக்தி
யுகந்தாய் ஜெய ஜெய
எம்பெரு மானே
யிறைவா ஜெய ஜெய

ஏழுல குந்தொழ
நின்றாய் ஜெய ஜெய
ஐயா கணபதி
நம்பியே ஜெய ஜெய
ஒற்றை மருப்புடை
வித்தகா ஜெய ஜெய
ஓங்கிய வானைத்
கன்றே ஜெய ஜெய
ஔவிய மில்லா
வருளே ஜெய ஜெய
அஃகர வஸ்து
வானவா ஜெய ஜெய



எஸ்.என்.நேசன்
கொழும்பு

இந்து மதத்தவர்கள் ஆகிய நாம் ஆதியும் அந்தமும் இல்லாத ஒரு கோட்பாட்டைக் கொண்டுள்ளோம். அதாவது அநாதி காலம் தொட்டு இருந்து வரும் மதமான இந்து மதத்தினைக் கைக்கொண்டுள்ளோம் நாம். எமது குல தெய்வங்களை மிகவும் அனு சரணையுடன் வணங்குவோமாக.

இந்துவாகியவன் தனது மதத்தை நேசித்து நடக்க வேண்டும். அதே நேரத்தில் பிற மதத்திற்கும் மதிப்புக் கொடுக்க வேண்டும். மத சுதந்திரத்தின் மூலம் மனிதனையும் அனைத்து ஜீவராசிகளையும் நேசிப்பதே இந்து மதத்தின் தாற்பரியமாகும்.

## வேண்டுகோள்

பேரன்புக்குரிய வாசகர்களே,

பல்சமயக் கருத்துக்களை ஏந்திவரும் பேழையாக ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழி இதழ்கள் உருவாக வேண்டும் என்ற நெடுநாளைய எண்ணம் இறையருளாற் கைகூடியுள்ளது. இவ்விதழ் காலாண்டிதழாக தற்போது வெளிவந்துள்ளது.

இவ்விதழ் தொடர்ச்சியாக மலர்ந்து பல்சமய ஆன்மீக நறுமணம் பரப்பி நீடித்த பயன் தரச் சந்தா செலுத்தி ஊட்டமளிக்குமாறு கோருகின்றோம்.

**காலாண்டுச் சந்தா :**
இலங்கை ரூ. **30/=** வெளிநாடு **£ 1.00** (தபாற் செலவு உட்பட)
**ஆண்டுச் சந்தா :**
இலங்கை ரூ. **120/=** வெளிநாடு **£ 4.00** (தபாற் செலவு உட்பட)

காசோலை, காசுக்கட்டளை "Sivagami Ammal Publications" என்ற பெயருக்கு எழுதப்பட வேண்டும். கீழ்வரும் படிவத்தை நிரப்பி காசோலை/காசுக்கட்டளையை இணைத்து எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

இவ்வண்ணம்
வே. வரதசுந்தரம்
ஆசிரியர்

### சந்தா விண்ணப்பம்

ஆசிரியர்,
சந்நிதி,
39, 36 ஆவது ஒழுங்கை, கொழும்பு 06, இலங்கை.

நான் சந்நிதி காலாண்டிதழுக்கு காலாண்டு /ஆண்டு சந்தா செலுத்த விரும்பி இத்துடன் ரூபா ......................க்கான காசோலை/காசுக்கட்டளை அனுப்புகிறேன்.

அனுப்பவேண்டிய முகவரி:


..............................................................
..............................................................
..............................................................
..............................................................

| காசோலை / காசுக்கட்டளை இல. | வங்கி / தபால் நிலையம் | திகதி |
|---|---|---|
| | | |

..............................
கையொப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குறள் கூறும் கதை

# காலத்தினால் செய்த உதவி...

பல்கலைக்கழக வளாகம் அன்று களைகட்டி நிற்கின்றது. தங்கள் பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட பட்டதாரிகளுக்கு பட்டமளிப்பு விழா அன்று. ஒரே அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது பல்கலைக்கழக மண்டபம். பல்கலைக்கழகக் கதாநாயகர்கள் கோட்டும் சூட்டுமாய் ஓடியாடித் திரிகின்றனர். பட்டமளிப்புக் கதாநாயகிகள் பட்டுப் புடவையும் கூந்தலில் பூச்சரமுமாய் தேவதைகளாய்க் குதூகலித்துக் கும்மாளமடித்துக் கொண்டிருந்தனர். மண்டப வாசலில் மாணவர் கும்பல் ஒன்று முரளியின் வரவை எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றது. அன்றைய விழாக் கதாநாயகனே முரளிதான். முரளியின் திறமைக்கு அன்று அமெரிக்கப் பல்கலைக் கழகப் புலமைப் பரிசு வழங்கப்பட இருந்தது.

முரளி தன் பெற்றோருடன் வருகின்றான். கால் பாதங்கள் இரண்டும் துண்டிக்கப்பட்ட நிலையில், சக்கர நாற்காலியில் முரளியின் தந்தை! முரளியும், தாயார் மங்களமும் தந்தையின் சக்கர நாற்காலியைத் தள்ளிக் கொண்டு வருகின்றனர். முரளியின் நண்பர்கள் ஓடிச் சென்று, அவர்களை அழைத்துக் கொண்டு விழா மண்டபம் நோக்கி வருகின்றனர். தங்கள் பல்கலைக்கழகத்துக்குப் பெருமையைத் தேடித்தந்த முரளியின் வருகையால் மண்டபமே கர கோஷத்தால் நிரம்பி வழிகின்றது. பட்டமளிப்பு விழாவினை விட, பொறியியல் துறையில் அமெரிக்காவின் விசேட புலமைப் பரிசில் பெற்றுச் செல்லவுள்ள மாணவனான முரளி கௌரவிக்கப் படும் நாளும் அதுதான்.

செல்வி ஸ்ரீ குமாரி கதிரித்தம்பி

அன்றைய விழாவின் பிரதம விருந்தினரும் பிரபல தொழிலதிபருமான இளங்கோ அவர்களே, முரளியின் உயர்கல்விக்கு உதவினார். முரளியோ, அவன் குடும்பமோ அறியாத வரை, முரளியின் கல்விக்கு உதவியவரை அன்று சிறப்பு விருந்தினராக அழைத்து, முரளி குடும்பத்துக்கு அறிமுகப்படுத்த விரும்பியது பல்கலைக்கழக நிர்வாகம்! அதுதான் விழா வழமையை விட ஆர வாரித்தது.



முரளியுடனும் பெற்றோருடனும் கதைத்துத் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டிருந்த மாணவர்களிடையே திடீரென அமைதி நிலவியது. வாசலில் பிரதம விருந்தினர். பல் கலைக்கழக வேந்தர், துணை வேந்தர், பேராசிரியர்கள் சகிதம் மண்டபத்துள் நுழைவதைக் கண்டு விட்டனர் – முரளியும் அவனது பெற்றோரும் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டுள்ள அந்த வள்ளலைப் பார்க்கும் ஆவலில் இருந்தனர். முன் வரிசையில் அமர்ந்திருந்த முரளியின் பெற்றோருக்குத் தம் கண்களையே நம்பமுடியவில்லை – ஆச்சரியத்தால் விழிகளை மலர்த்தியபடி மேடை நோக்கி அழைத்துச் செல்லப்பட்ட அந்தப் பிரமுகரையே பார்த்த வண்ணம் இருந்தனர். 'இந்தப் பிரமுகர் ஏன் என் படிப்புக்கு இத்தனை செலவழித்தார்' என்ற கேள்வியை தன் மனதுக்குள் கேட்டபடி, அந்தப் பிரமுகர் வரும்வரை ஆவலுடன் இருந்தான் முரளி.

மேடையில் அமர்ந்திருந்த பிரதம விருந்தினர் இளங்கோ, சபையை நோட்டம் விடுகின்றார். முன் வரிசையில் அமர்ந்திருந்த முரளியின் பெற்றோர் அவரது கண்களில் பட்டுவிடுகின்றனர். மேடையிலிருந்து சரேலெனக் கீழே இறங்கி, முரளியின் பெற்றோரை நோக்கி வருகின்றார். தம்மை நோக்கி பிரதம விருந்தினர் இளங்கோ வருவதைக் கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரளியின் தந்தையும், தன் சக்கர நாற்காலியை விட்டு எழ முயல்கின்றார். அதற்கிடையில் இளங்கோ விரைந்து வந்து அவரை அணைத்துக் கொண்டு கண் கலங்கினார். அவரருகிலுள்ள நாற்காலியில் தானும் அமர்ந்து கொள்கின்றார்.

முரளியின் தந்தையின் மனக் கண்ணில் இறந்த காலம் படமாக விரிகின்றது. தினமும் காலையும் மாலையும் வீட்டிற்குக் கிட்டவுள்ள அம்மன் கோவிலுக்கு முரளியின் தந்தை சிவராமின் குடும்பம் செல்வது வழக்கம். அந்த அம்மன் கோயில் வாசலில் ஒரு இள்ைஞன் புத்தகமும் கையுமாகவே இருப்பான். போவோர் வருவோர் கொடுப்பதை வாங்குவதும் புத்தகத்தைப் படிப்பதுமாக இருப்பான். அவனது முகத்தில் தெரிந்த ஒருவித களை, சிவராம் குடும்பத்தை அவன் மீது ஈர்த்து விட்டது. முரளி அப்போது 3 வயதுக் குழந்தை. முரளிக்கு கோயிலில் கும்பிடுவதை விட, புத்தகமும் கையுமாக இருக்கின்ற இளைஞன் மீதுதான் பிரியம். சிலவேளைகளில் கோயிலுக்குள் செல்லாமலே அங்கேயே அந்த இளைஞன் அருகில் நின்று விடுவான். அவனது பெற்றோரும் பணமோ, சாப்பாடோ அவனுக்குத் தினமும் கொடுப்பதை வழக்கமாக்கிக் கொண்டார்கள். பாடசாலை நேரத்துக்குப் பாடசாலை சென்று விடுவான். பாடசாலை விட்டு மீண்டும் வந்து அதே இடத்தில் இருந்து விடுவான். சிறு வயதிலேயே பெற்றவர்களை, ஒருவர் பின் ஒருவராக இழந்த அவனை ஆதரிக்கவே யாரும் இல்லாத போது அவனது படிப்புக்கு ஆதரவு கிடைக்கும் என எதிர்பார்க்காமல், அம்மன் வாசலில் அமர்ந்து விட்டான். ஆனால் அந்தக் கோயிலுக்கு வரும் ஒரு சிலருக்கு அவன் அதிலிருந்து படித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கும் போது ஒரு ஏளனம்.

"இந்த வயதில் புத்தகமும் கையுமாக இங்கு ஏன் இருக்கின்றாய்? உனக்குப் படிப்பதற்கு வேறு இடம் இல்லையா?" இப்படிக் கேட்பவர்கள் பதிலாக ஒரு புன்முறுவலையே அவனிடம் இருந்து எதிர்பார்க்கலாம். " உழைத்துச் சாப்பிட வருத்தம். உதிலையிருந்து படிக்கிறதாய் நடிச்சுக் காசு சேர்க்கப் போகின்றார் – நல்ல ஐடியா – உதுகளுக்கெல்லாம் ஒரு சதமும் போடக்கூடாது". சில பணக்கார வர்க்கத்தினரின் இப்படியான வார்த்தைப் பிரயோகங்களைக் கேட்கும் போதெல்லாம் அவன் கண் கலங்கியபடியே, வேதனை கலந்த சிரிப்பை உதிர்ப்பான். தினமும் அந்த இளைஞன் இளங்கோவின் காதுகளில் விழுந்த ஏச்சுக்கள் கொஞ்சநஞ்சம் அல்ல. ஏனோ சிவராம் குடும்பத்தவரின் மனதில் இளங்கோ இடம்பிடித்து விட்டான். தம் வீட்டிற்குக் கூட்டிச் செல்ல, எவ்வளவோ முயற்சித்தனர். முரளி எவ்வளவோ அடம் பிடித்தான். எதற்கும் இளங்கோ சம்மதிக்கவில்லை. இரவுப் பொழுதை அம்மன் கோவில் மண்டபத்தில் கழித்தான். இளங்கோ மறுத்த போதும், இளங்கோவின் தேவை அறிந்து, அவன் மனம் கலங்காமல் படிப்பதற்கு வேண்டிய சகல உதவிகளையும் சிவராம் குடும்பத்தினர் செய்தனர். இளங்கோவும் கல்வியே கருத்தாக இருந்து, தன் உயர்கல்விக்கான பரீட்சையும் எடுக்க ஆயத்தமானான். அந்த நாட்களில் சிவராம் குடும்பம் மாற்றலாகிச் செல்ல நேர்ந்தது. ஆனாலும் இளங்கோவிற்கு உதவி செய்ய அவர்கள் மறக்கவில்லை.

அப்போது தான் சிவராம் குடும்பத்தினர் கோர விபத்தொன்றில் சிக்கினர். தெய்வாதீனமாக உயிர் தப்பியபோதும், சிவராமின் கால்கள் துண்டிக்கப்பட்டன. எதிர்பாராத இந்த விபத்தினால் சிவராம் குடும்பம் நொந்து போய் விட்டது – சிவராம் குடும்பத்தினருக்கும் இளங்கோவிற்கும் தொடர்புகள் இல்லாமற் போய்விட்டன தொடர்ந்து இளங்கோவிற்கு உதவ முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது சிவராம் குடும்பம்.

இளங்கோ சிறந்த பெறு பேறுகளைப் பெற்று பல்கலைக்கழகம் சென்றதும், பட்டப்படிப்பு முடிந்து ஒரு தனியார் நிறுவனத்தில் நல்ல பதவி வகித்ததும், சிவராம் குடும்பத்துக்குத் தெரியாது. ஆனால் இளங்கோவோ சிவராம் குடும்பம் பற்றி தினமும் பலரிடமும் விசாரித்து, ஒரு நாள் விபரம் அறிந்து கவலைப்பட்டான். தன்னை இந்த நிலைக்கு உயர்த்திய சிவராம் குடும்பத்தைத் தான் உயர்த்த வேண்டும் என்று தீர்மானித்தான். நேரில் சென்று உதவினால், சிவராம் குடும்பம், அதை ஏற்க மறுத்து விடுவார்களோ என்ற பயத்தில் முரளியின் படிப்புக்கு வேண்டிய சகல உதவிகளையும், கல்லூரி அதிபர் மூலமாகச் செய்தார் இளங்கோ. பின்னர் பல்கலைக்கழகக் கல்விக்கு வேண்டிய சகல உதவிகளையும் பல்கலைக்கழக நிர்வாகத்தின் மூலம் செய்தார் யாரோ ஒருவர் உதவுகின்றார் என்றதுடன் சரி – அது யாராக இருக்கும் என்று அறிய சிவராம் குடும்பம் முற்படவில்லை. விழாவிலன்றுதான் அவரை நேரிற் பார்க்கின்றனர்.

முரளியின் தந்தை சிவராம் அருகில் அமர்ந்த இளங்கோ அவரை மேடைக்கு அழைத்துச் சென்றார். விழாவும் ஆரம்பித்தது. பிரதம விருந்தினரும் பிரபல தொழிலதிபருமான இளங்கோ அவர்களின் பேச்சும் ஆரம்பமானது. அடிக்கடி சிவராம் அவர்களை நன்றி கலந்த பார்வையுடன் பார்த்துக் கொண்டிருந்த இளங்கோ, பேச ஆயத்தமானார். முரளியோ இவர் யாராக இருக்கும்? இவர் ஏன் என் கல்விக்கு உதவி செய்தார். என்ற பல கேள்விகளுக்குப் பதில் இன்று தெரிந்து விடும் என்ற ஆவலில் அவரது உரையை ஆர்வத்துடன் கவனித்தான்.

"இன்று இந்த மேடையில் உங்கள் முன் தொழிலதிபராக, பிரதம விருந்தினராக நிற்பதில் நான் பெருமைப் படுகின்றேன். எனக்குப் பெருமையையும், புகழையும் தேடித் தந்த, தந்து கொண்டிருக்கின்ற, அந்த மகான், இதோ என் முன்னிலையில் சக்கர நாற்காலியில் அமர்ந்திருக்கின்ற, திரு. சிவராம் அவர்ளே. அதாவது இன்று இந்தப் பல்கலைக்கழகத்துக்கு உலகளாவிய ரீதியில் புகழைப் பெருமையைத் தேடித் தந்துள்ள முரளியின் தந்தையார் சிவராம் அவர்களே. நான் சிறுவயதில் என் தாய் தந்தையரை இழந்து, ஆதரிக்க எவருமற்ற நிலையில், என் படிப்பைத் தொடர முடியாத நிலையில், எங்கள் ஊரின் அம்மன் கோயில் வாசலில் இருந்து காலையும் மாலையும், படித்துக் கொண்டிருந்த காலம் என்னால் மறக்க முடியாதது". கண்கலங்கிப் பேசிக்கொண்டிருந்த இளங்கோவின் நா பேச முடியாமல் தழுதழுத்தது. அவரது குரலில், அவர் படிப்பதற்குப் பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டங்களைச் சபையோரால் உணர முடிந்தது. அவரது உரை தழுதழுத்த குரலில் தொடர்ந்தது. "என் படிப்பைத் தொடர எனக்கு மிகவும் உற்சாகமும் உதவியும் தந்த சிவராம் அவர்கள் குடும்பத்தை என்னால் மறக்க முடியாது. தினமும் அம்மன் வாசலில் அந்தக் குடும்பத்தின் தரிசனம் கிடைத்த அந்த நாட்கள் மறக்க முடியாதவை. "அமெரிக்கப் புலமைப் பரிசில் பெற்றுச் செல்லவுள்ள முரளியின் தாய், தந்தை இருவரும் இனிமேல் என் பெற்றோராக, என்னுடன் வந்திருக்க வேண்டும் என்று மிகமிகத் தாழ்மையாக கேட்டுக் கொள்கின்றேன்". கண்கலங்கி, மெய் மறந்து, அவரது உரையைக் கேட்டுக் கொண்டிருந்த அனைவரும் கைதட்டி தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். இளங்கோவின் உரை தொடர்கின்றது. "நாம், நம் வாழ்க்கையில் நன்றிக் கடனாற்றுவதைத் தலையாய கடமையாகக் கொள்ள வேண்டும். எமது 'வான் புகழ்' கொண்ட வள்ளுவப் பெருந்தகையும் செய்நன்றி அறிதலைத் தலையாய கடன் என்கிறார்.

"நாம் எந்த உதவியைச் செய்யாதிருந்த போதிலும் எம்மிடமிருந்து எந்த உதவியையும் எதிர்பார்க்காமல், ஒருவர் எமக்கு உபகாரம் செய்கின்றா ரென்றால் அந்த உதவிக்கு என்ன ஈடு காட்ட முடியும்? இந்த இரு உலகங் களையும், ஒருமிக்கக் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது என்கிறார் வள்ளுவர்.

'செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது'.

"அதுபோல் முரளியின் தந்தையும் எனக்குச் செய்த உதவி பிரதிபலன் கருதாத உதவி. அவர் எனக்கு உதவி செய்த காலத்தில், நான் வாழ்ந்து கொண்டிருந்த அவல நிலையில் அது மிக மிகப் பெரிய உதவி. அந்த உதவியானது இந்த உலகத்தை விடப் பெரியது என்கிறார் வள்ளுவர்–

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது."

"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது."

இப்படிப் பேசி முடித்தார் இளங்கோ.

பல்கலைக்கழகப் பட்டமளிப்பு நிறைவுற்றது. பட்டம் பெற்றுக் கொண்ட பட்டதாரிகள் அனைவருடனும் தானும் ஒருவராக இணைந்து கொண்டு, பிரதம விருந்தினர் என்ற பெருமையே இல்லாமல் அன்றைய விழாவினில் மிக எளிமையாக எல்லோருடனும் பழகிய திரு. இளங்கோ அவர்களை வியந்தபடி அனைவரும் வீடு சென்று கொண்டிருந்தனர்.

# பெண்ணின் பெருமை

ஒரு தாயாக வாழ எவ்வளவு பொறுமை வேண்டும்? இது ஆண்களிடம் உள்ளதா? ஒரு இல்லத் தலைவியாக வாழ எவ்வளவு பெருமை வேண்டும்? இது ஆண்கள் எத்தனை பேரிடம் உண்டு? கணவனின் மதிப்பைக் குறையாமல் நிலை நாட்ட வேண்டும். அவனையும் அவனின் குடும்பத்தாரையும் அனுசரித்து நடக்க வேண்டும். அதுவும் வேலைக் குப் போகும் பெண் என்றால் அலுவலகக் கடமையையும் செய்துவிட்டு வீட்டுப் பணி களையும் செவ்வனே செய்ய வேண்டும். எப் பொழுதும் சிரித்துக் கொண்டே எந்த இட ரையும் சமாளிக்கத் தெரிய வேண்டும். குடும் பம், இனபந்துக்கள், சமூகம் என்று அவள் அனுசரித்து நடக்க வேண்டிய இடங்கள் பல. அப்படியிருந்தும் பொது வாக எல்லா இடத்திலும் நல்ல பெயரைச் சம்பாதித்திருப்ப வர்கள் பெண்கள். ஆகவே வெறும் ஆளுமைக் குணம் ஒன்றையே கை வசம் வைத்து உறவுகளைச் சின்னாபின்னமாக்கும் ஆண்கள் எங்கே, பொறுமையின் அணிகலனாய் இருந்து நாட்டையும் வீட்டை யும் பெண் மையின் மென்மையால் விளங்கச் செய்து வாழ்க்கைக்கு விளக்கேற்றும் பெண்கள் எங்கே?



நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன்

ஆண்கள் மடு என்றால் பெண்கள் மலை என்பேன். பெண்களாகப் பிறந்ததில் பெருமை அடைய வேண்டும். பெண்மை ஒரு வரப்பிரசாதம். அறிவின் அடிப்படையில் ஆளுமையின் அடிப்படையில் ஆணவத்தின் அடிப்படையில் ஆண்கள் இதுவரை காலமும் நடத்திய உலகம் அழிவுப்பாதையில் சென்று கொண்டிருக்கிறது. அறிவும் உணர்வும் சேர்ந்த, அன்பும் அழகும் சேர்ந்த ஒரு புது யுகத்தைப் பெண்கள் தான் சிருஷ்டிக்கலாம்.

தம்மைத் தியாகம் செய்வதில் வல்லவர்கள் பெண்கள். தியாகம் தான் வாழ்க்கையின் நோக்கம். வாழ்க்கையின் இலட்சியம். வாழ்க்கையின் இரகசியம். எடுப்பதில் எதுவுமே இல்லை. நாங்கள் எடுத்துச் செல்லப் போவதுமில்லை. கொடுப்பதில் தான் உலகம் உய்யலாம். உயர்ச்சி பெறலாம். பெண்கள் இயற்கையாகவே தங்கள் அன்பையும், அறிவையும், சேவையையும் மனமுவந்து கொடுக்கும் திறன் பெற்றவர்கள். பிரதிபலன் பார்க்காமல் கொடுக்கும் தாய்மையின் இலட்சணம் பெண்மையின் இலக்கணம்.

ஆனால், நிகழ்காலத்தில் மாணவியரின் நளினத்தையும், மென்மையையும், பெண்மையையும் வெளிக்கொணரக் கூடிய ஆற்றல் பெற்றவை நுண்கலைகள் தான் என்பதை நாம் மறத்தல் ஆகாது.


பெண்மையானது ஆண் வர்க்கத்தின் மூர்க்கத்தனத்தால் அடாவடித் தனத்தால் சிதைந்து விடாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால் நுண் கலைகளைப் போற்றிப் பேணி அரங்கேற்றுவது அத்தியாவசியம். மேலைநாடுகளில் ஆயுதம் தாங்கி ஆண்களைப் போல் கொடுந்தொழில்களில் ஈடுபட்டு வழிப்பறி, கொள்ளை, கொலைகளில் கூட பெண்கள் இன்று ஈடுபடுகிறார்கள் என்றால் அது தீவிர ஃபெமினிசத்தின் எதிர் விளைவுகள் ஆகும்.

அதைத் தடுத்து பெண்மையின் உண்மைச் சொருபம் வையகத்தை வாழ வைக்க வேண்டுமானால் நுண்கலைகளில் பாண்டித்தியம் பெறுவது பெண் களுக்கு அத்தியாவசியம் ஆகிறது. தொடர்ந்து அப் பாதையில் செல்வீர்களாக!


*(கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரி இலக்கிய மன்றம் வழங்கிய சங்கமத்தில் ஆற்றிய உரையில் இருந்து)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒரு சிறுவன் பார்வையில் சமய சமரசம்



கோயில்




தேவாலயம்


பல மதங்களும் இறைவனை அடைவதற்குரிய பல்வேறு மார்க்கங்களே. கல்கத்தாவில் காளிகாட் என்னும் இடத்தில் உள்ள அன்னை காளியின் கோவிலுக்குப் பல வழிகள் உள்ளன. அதே போன்று இறைவனை அடையப் பல வழிகள் உண்டு. ஒவ்வொரு சமயமும் ஒரு வழியாகும். *– பகவான் இராமகிருஷ்ணர்*



கிரிஷான் இராஜரட்ணம்
*ஆண்டு 2*
*சென் பீட்டர்ஸ் கல்லூரி*
*கொழும்பு 6*



விகாரை



மசூதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலர்த்தட்டு

மாஸ்டர் சிவலிங்கம்

## துறவி தந்த விளக்கம்

ஆலமரம் ஒன்றின் கீழே அமர்ந்து பக்திப் பாடல்கள் பாடிக் கொண்டிருந்தார் ஒரு துறவி, அவ்வழியால் வந்து கொண்டிருந்த நாஸ்திகன் ஒருவன் அத்துறவியிடம் சென்றான்.

"சாமியாரே! கடவுள்.... கடவுள் என்று பாடிக்கொண்டிருக் கிறீர்களே, உங்கள் கடவுள் எங்கே இருக்கிறார்...?" என்று ஏளனமாகக் கேட்டான் கடவுள் நம்பிக்கையற்ற அந்த நாஸ்திகன்.

"பூச்சியத்துக்கு உள்ளே இராச்சியத்தை ஆண்டு கொண்டு புரியாமலே இருப்பான் ஒருவன், அவனைப் புரிந்து கொண்டால் அவனே இறைவன்.

"கோழிக்குள்ளே முட்டை வைத்தான், முட்டைக் குள்ளே கோழி வைத்தான், வாழைக்குள்ளே கன்று வைத்தான் ஒருவன், அவனைப் புரிந்து கொண்டால் அவனே இறைவன்...." என்று விளக்கம் அளித்தார் அந்தத் துறவி.

துறவி கூறிய விளக்கத்தைப் புரிந்து கொள்ளும் நிலையில் அவன் இல்லை. சிறிது நேரம் மௌனம் சாதித்தான். பின்பு....!

"சாமியாரே....! உங்களுடைய கடவுளுக்கு எங்கே, எதை, எப்படிப் படைப்பதென்றே தெரியவில்லையே... இந்தப் பெரிய ஆல மரத்திலே சின்னஞ்சிறிய பழங் களைப் படைத்திருக்கிறார். ஆனால் சிறிய பூசனிக் கொடியிலே பென்னம் பெரிய காய்களைப் படைத்திருக் கிறாரே" என்றுஏளனமாகக் கேட்டான் அந்த நாஸ்திகன். அப்போது.....!

அவனுடைய தலையிலே ஆலம்பழம் ஒன்று 'படக்!' என்று விழுந்தது. அதைக் கவனித்த சாமியார் பேசத் தொடங்கினார்.

"தம்பி! பூசனிக்காய் போல ஆலம்பழத்தைக் கடவுள் படைத்திருந்தால் இப்போது உனது தலை உடைந்திருக்குமே....? ஆலமரத்தின் கீழே நிழலுக்காக மனிதர்கள் அமர்ந்திருப்பார்கள். தப்பித்தவறி அவர்களு டைய தலை மீது ஆலம்பழம் விழக்கூடும் என்பதை உணர்ந்தே சின்னஞ்சிறு ஆலம் பழங்களைக் கடவுள் படைத்தார். எங்கே, எதை, எப்படிப் படைக்க வேண்டும் என்பதை நன்கு உணர்ந்தே கடவுள் படைத் திருக்கிறார்." இப்படி அந்தத் துறவி விளக்கம் அளித்ததும் தலையைத் தொங்கப் போட்டபடி அங்கிருந்து சென்றான் அந்த நாஸ்திகன்.

### சிறார் கண்ட குருகுலம்




திருகோணமலை கலைமகள்
மொண்டசரி பாடசாலை சிறுவர் சிறுமியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரம்



தோன்றாத் துணையை என்றுந் துதிப்போம்
தூய திருப்பாதத்தைப் பதிப்போம்
ஈன்றாளையும் அப்பனையும் மதிப்போம்
எல்லாம் சிவன் செயல் என்றிருப்போம்


இலங்கையில் புகழ் பெற்ற ஈஸ்வரங்களில் ஒன்றாகிய திருக்கோணேஸ்வரம், இலங்கையின் கிழக்குக் கரையோரத்திலுள்ள திருகோணமலையின் சுவாமி மலைக் குன்றத்தில் அமைந்துள்ளது. நீண்ட குன்றம், சூழப் பரந்துள்ள நீலக் கடலும், நீலவானமும், இயற்கையாகவே நறுமணம் சுமந்து வரும் தென்றலும் எமது உள்ளத்தில் இறை யுணர்வை தட்டியெழுப்புகின்றது. பக்தி உணர்வு மேலிடுகின்றது. இத் திருத்தலத்திலே தான் கோணேஸ்வரப் பெருமான் மாதுமையாளுடன் நாடி வருகின்ற பக்தர்களுக்கு அருளுகின்றார்.



விஜயரட்ணம் பிரதீபா
ஆண்டு 8
சைவ மங்கையர் கழகம்
வெள்ளவத்தை

கோணேஸ்வரம் சோழ நாட்டரசனான வரராம தேவனால் அமைக்கப்பட்டது. அவனின் மகனான குளக்கோட்டனால் திருக்கேணி அமைக்கப்பட்டது. ஆயிரம் தூண் அணி செய்த கோவில் என்று புகழப்பட்ட திருத்தலமான கோணேஸ்வரத்தை சமய குரவரான சம்பந்தரும், அருணகிரி நாதரும் பாடித் துதித்துப் பணிந் துள்ளனர். பிற நாட்டவர்களின் வருகையினால் கோவில்கள் நிர்மூலமாக்கப்பட்ட காலத்தில் போர்த்துக்கேயரால் 1624 ஆம் ஆண்டு இத் திருத்தலம் தாக்கி அழிக்கப்பட்டது. ஆயினும் விக்கிரகங்கள் அகற்றப்பட்டு தம்பலகாமம் என்னும் ஊரில் மறைத்து வைக்கப்பட்டு பூஜிக்கப்பட்டு வந்தன. முன்னூறு ஆண்டுகளின் பின் சைவமெய்யன்பர்களுடைய முயற்சியாலும் இறைவன் திருவருள் கைகூடியதாலும் பழைய இடத்திலே மறுபடியும் ஆலயம் அமைத்து இறைவனையும் இறைவியையும் பிரதிட்டை செய்தனர். முன்னூறு வருடங்களின் பின் தரிசனம் தந்த கோணேசப் பெருமான் இங்கு வீற்றிருந்து அடியார்கள் துயர் தீர்த்து அருள்பாலித்து வருகின்றார்.

# சிவசுப்பிரமணியம் நினைவுப் பரிசில்



மாணவ, மாணவியரே!
கோயில் அற்புதங்கள், ஒழுக்கம் சமயம் சார்ந்த உங்கள் ஆக்கங்களை உங்கள் புகைப் படத்துடன் அனுப்பி வையுங்கள். தகுதி கண்டு மகிழ்வுடன் பிரசுரிப்போம்.
பிரசுரமாகும் உங்கள் படைப்புகளுக்கு நடுவர் குழுவின் சிபார்சுக்கமைய சிவசுப்பிரமணியம் நினைவுப் பரிசில்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| முதற் பரிசு : | ரூபா 300/= |
| இரண்டாம் பரிசு : | ரூபா 200/= |
| மூன்றாம் பரிசு : | ரூபா 100/= |

ஆக்கங்களுடன் பின்வரும் கூப்பனை இணையுங்கள்
- ஆசிரியர்

அனுப்பவேண்டிய முகவரி–
ஆசிரியர்
சந்நிதி
39, 36வது ஒழுங்கை, கொழும்பு 06.

**சந்நிதி** - சிவசுப்பிரமணியம் நினைவுப் பரிசில்

முழுப் பெயர்: ..............................
முகவரி: ..............................
..............................
வகுப்பு: ..............................
பாடசாலை: ..............................

இது எனது சொந்த ஆக்கம்

.............................. ..............................
பாடசாலை அதிபர் / ஆசிரியர் / பெற்றோர் கையொப்பம் — மாணவர் கையொப்பம்
திகதி: ..............................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதைத்த நெல்லும் சிவார்ப்பணம் ஆகியது!

## -இளையான் குடிமாற நாயனார்-

இளையான்குடி என்னும் ஊரிலே மாறனார் என்றொரு வேளாளர் இருந்தார். அவர் தனது வயல் புலங்களின் மூலம் சிவனடியார்களுக்கு அமுது செய்தார். வறுமை வந்த காலத்திலும் இதைத் தளராது செய்தார். இதை உலகத்தோருக்குக் காட்ட இறைவன் திருவுளங் கொண்டார்.



இளையான் குடிமாறர்

மாறனாருடைய செல்வம் வரவரச் சுருங்கியது. தம்தொண்டைக் கைவிடாது செய்தார். வயல்களை விற்றார். அயலவர்களிடம் கடன் வாங்கி சிவனடியாருக்கு அமுதூட்டினார். நாளடைவில் வறுமை அவரைச் சூழ்ந்தது.

இந் நிலையில் இறைவன் சிவனடியார் வேடம் பூண்டு ஒரு நள்ளிரவில் கொட்டும் மழையில் மாறனார் வீட்டுக்குச் சென்றார். உடனே மாறனார் சிவனாரின் திருமேனியை ஈரம் போக்கி ஆசனங் கொடுத்து அமரச் செய்தார்.

சிவனடியாருக்கு அமுதூட்ட நெல் இல்லையே எனக் கவலையுற்றார். அப்போது மாறனாரது மனைவி. வயலில் விதைத்த நெல் மழையில் மிதக்கும் அதை எடுத்து வாருங்கள். குத்தி அரிசியாக்கி விரைவில் சமைக்கிறேன் என்றார். மாறனாரும் அவ்வாறே செய்தார். நெருப்பு மூட்ட விறகில்லை எனவே கூரையைப் பிடுங்கி விறகாகக் கொடுத்தார். சோறு சமைத்து முடிந்தது, கறிகள் ஒன்றும் இல்லையே என்ன செய்யலாம் என யோசித்தார்கள்?


சிறிது நேரத்தில் மாறனார் புற்கடையிற் குழியில் முளை கொண்ட கீரைகளை அவசரமாகப் பிடுங்கி அவரது மனைவியிடம் கொடுத்தார் அவரது மனைவி கைப்பழக்கத்தால் பல்வேறு கறி சமைத்தார்.



இ. கஜாளினி
ஆண்டு 7
சைவ மங்கையர் கழகம், கொழும்பு 6

பின் துயில் கொண்டிருந்த சிவன் அடியாரை, திருஅமுதூட்ட வரும்படி வேண்டினார். உடனே சிவனடியார் ஒரு சோதி வடிவாய் தோன்றினார். அது கண்ட மாறனாரும் மனைவி யாரும் வியந்து கைகூப்பினர். சிவபெருமான் உமாதேவியாருடன் விண்ணிலே எழுந்தருளி நாயனாரை நோக்கி "அன்பனே! அடியார் பசிப்பிணி போக்கிய நீ மனைவியோடும் என்னுலகத்திற் சேர்ந்து பேரின்பப் பெருவாழ்வு எய்துவாயாக" என்று அருளினார்.


## சோதிடக் கணிப்பீடுகள்



உங்கள் ஜாதகங்களை கணனியில் (Computer) துல்லியமான கிரகஸ்புடங்களுடன் கணித்து இராசி, நவாம்ச, பாவ, சப்தவர்க்க, அஷ்டகவர்க்க, கிரக பலம், திசா, புத்தி, அந்தர விபரத்துடன் பெறலாம்.

வெளிநாட்டில் பிறந்தவர்களின் ஜாதகங்கள் அந்நாட்டு நேரத்தில் கணிக்கப்படுகின்றன.

உங்கள் ஜாதகங்களிற்குரிய விரிவான வருடப்பலனை எம்மிடம் அறிந்து கொள்ளலாம். Computer Floppy Diskல் பதிவு செய்தும் ஜாதகங்களைப் பெறமுடியும். ஜாதகம் கணிக்க நீங்கள் தர வேண்டிய விபரம் : பெயர், பிறந்த திகதி, நேரம், பிறந்த இடம் மட்டுமே.

**VIGNES**

**465 / 1 A, Havelock Road, Colombo 6, Sri Lanka.**

**Telephone : 074-513233** Foreign Callers Dial : **00 9474 513233**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமிநந்தி அடிகள்



நமிநந்தியடிகள்

சோழ நாட்டிலே நமிநந்தி என்னும் அந்தணர் வாழ்ந்து வந்தார். அவர் எந்நாளும் திருவாரூருக்குச் சென்று வன்மீக நாதரை வணங்கி வந்தார்.



இவர் ஒரு முறை வன்மீக நாதர் கோயிலுக்கு அருகிலுள்ள அறநெறிநாதர்


செல்வி ப. கோபிகா
ஆண்டு 7
இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு


கோயிலுக்குச் சென்று அறநெறிநாதரை வணங்கும் பொழுது இறைவனுக்கு விளக்குகள் ஏற்ற விருப்பங்கொண்டார். உடனே அருகிலுள்ள வீடு ஒன்றுக்குச் சென்று விளக்கேற்ற நெய் தரும்படி கேட்டார். அதற்கு சமணர்களான அவர்கள் "எரிகின்ற நெருப்பை கையில் ஏந்திய உங்கள் பரமசிவனுக்கு விளக்கு எதற்கு? வேண்டுமாயின் நீரை விட்டு விளக்கை எரியும்" என்று கூறினர். உடனே மனம் நொந்த நமிநந்தி அடிகளுக்கு ஓர் அசரீரி கேட்டது. "நமிநந்தியே கவலை வேண்டாம். குளத்தில் உள்ளநீரில் விளக்கேற்று" என்றது. உடனே நமிநந்தி அடிகள் நீரில் விளக்கு ஏற்றினார். அது விடியவிடிய எரிந்தது. நமிநந்தி மனம் மகிழ்ந்தார். இதிலிருந்து "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்பது புலனாகிறது. நம்மிடம் யாராவது உதவி கேட்டு வருபவருக்கு எம்மால் ஆன உதவியைச் செய்தல் வேண்டும். இதுவே இறைவனுக்கு விருப்பமானது.



# தோன்றாத் துணையாகிய சாயி!

ஸ்ரீ பகவானின் அவதாரமாக நம்பப்படும் சத்தியசாயி பாபா கார்த்திகை மாதம் 23ம் திகதி பூவுலகில் அவதரித்தார். சத்திய சாய்பாபா பல அற்புதங்களை மாந்தர் நன்மைக்கே செய்து தான் கடவுள் அவதாரம் என்பதை நிரூபித்திருக்கிறார். நம்மால் வானத்தை அளக்க முடியாது. வர்ணிக்க முடியாது. அந்த அற்புதங்களில் ஒன்றே இங்கு அரங்கேறுகிறது.

வர்ணிக்கவே முடியாத ஓர் ஏழைக்குடும்பம். குடும்பத்தைக் காப்பாற்றும் தலைவன் இறந்து விட்டான். தாய் தன் இரு குழந்தைகளையும் சிரமப்பட்டு வளர்த்து வந்தாள். அடுப்படியில் காளான் பூத்துக் குலுங்கியது. ஒரு நேரச் சாப்பாட்டிற்கே மிகவும் கஷ்டம். எவ்வளவு வறுமை என்றாலும் பரம் பொருளான இறைவனை அவர்கள் நம்பினார்கள். ஆம்! இவர்கள் பாபாவின் பக்தர்கள். ஒருநாள் இவர்களில் ஒரு மகன் விளையாடும் பொழுது மயங்கி விழுந்தான். சிரமப்பட்டு வைத்திய சாலைக்குத் தாய் அழைத்துச் சென்றாள். அங்கு அவளுக்காக ஒரு சோகச் செய்தி காத்திருந்தது.



வைத்தியச் செலவை கஷ்டப்பட்டுக் கட்டிய பின் வைத்தியர் மகனுக்கு மூளை வருத்தம் எனக் கூறினார். இம் மூளை நோயால் பெரும் பாதிப்பு எனவும் இதைக் குணப்படுத்தாவிட்டால் உயிருக்கே ஆபத்து என்றும் இதைக் குணப்படுத்த பத்தாயிரம் ரூபா செலவாகும் எனவும் கூறினார். என்ன செய்வது பத்து ரூபாய்கூட அவர்களிடம் இருக்கவில்லை. ஒன்றும் தெரியவில்லை. பாபாவிடம் (பாபாவின் படத்தின் முன்னே) விழுந்து அழுதாள். கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பது போல் பகவான் சாயி பாபா அவளில் கருணை காட்டினார். அவர் அருளால் மகன் நோய் தீர்ந்து குணமடைந்தான். இதைக் கண்ட வைத்தியர் ஆச்சரியமடைந்தார். அந்தத்தாய் தன் மகனுடன் பாபாவைத் தரிசித்து திரும்புகிறாள். வாழ்க பாபாவின் புகழ்.


ஆர். லவண்யா
ஆண்டு 8
இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனிதனுடைய பிரத்தியேக உயர்ந்த குணங்களாக விவேகம், பகுத்தறிவு ஆகியவற்றை மனிதனுக்கே உரிய அகங்காரமானது பயனற்றுப் போகச் செய்து விடுகிறது. இந்த அகங்காரத்தை ஒடுக்கி பகுத்தறிவோடு அடக்கத்தை ஒளிரச் செய்வதே தீபாவளித் திருநாளின் பயன்.**

மிருகங்களைவிட மனிதன் உயர்ந்தவனாகக் கருதப்படுகிறான். ஆனால் பல சமயங்களில் பார்க்கப் போனால் மனிதனை விட இதர உயிரினங் களே உயர்ந்தவையாகத் தோன்றுகின்றன.

தேனீயிடம் உள்ள சுறுசுறுப்பு நம்மிடம் இருக்கிறதா என்று யோசிக்க வேண்டும். தேனீ தன்னைப் பற்றிய நினைப்பைவிடத் தனது தேன் கூட்டின் வளத்தையே பெரிதாக எண்ணுகிறது. அவ்வாறு நாம் தேசப் பற்றுடன் நமது நாட்டின் வளம் பெருகப் பாடுபடுகிறோமா?

# தீபாவளித் திருநாளின் பயன்


விலங்கியல் நிபுணர்களைக் கேட்டால், நடப்பன, ஊர்வன, பறப்பன, நீரில் நீந்துவன ஆகிய பிரிவுகளில் உள்ள பல்லாயிரக்கணக்கான ஜீவராசிகளிடம் உள்ள பல உயர்ந்த குணங்களை வெகு சுவாரஸ்யமாக நமக்கு எடுத்துச் சொல்வார்கள்.

இந்த ஜீவராசிகள் எல்லாம் சுதந்திரமாகச் செயல்படுகின்றன. ஆனால் அதே நேரத்தில் தங்கள் தங்கள் சமுதாயத்தின் நலனை உத்தேசித்துப் பொறுப்புணர்வுடனும் நடந்து கொள்கின்றன.

மிருகங்களை விட மனிதன் உயர்ந்தவனே என்றாலும் எத்தனையோ பல அம்சங்களில் நாம் இதர ஜீவராசிகளிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டிய தேவை இன்றைக்கும், இத்தனை நாகரிக முன்னேற்றம் அடைந்த பிறகும் இருக்கிறது.

ஆனால் மனிதன் இதனை மறந்து விடுகிறான். காரணம் மனிதனுக்கு விவேகமும், பகுத்தறிவும் ஏற்பட்டு இதர ஜீவராசிகளை விட உயர்ந்தவனாகக் கருதப்பட்டபோது கூடவே அவனுக்குள் அகங்காரமும் புகுந்து விட்டதுதான். விவேகமும் பகுத்தறிவும் அடக்கத்தை உருவாக்க வேண்டும் என்பதை உணராமல் மனிதன் அகங்காரத்தை வளர்த்துக் கொண்டு விடுகிறான்.

மனிதனுக்கு விவேகமும், பகுத்தறிவும் இருப்பதால் இந்த உலகத்தை அவன் உன்னத நிலைக்கு உயர்த்த முடியும். அதே அறிவாற்றலைப் பயன்படுத்தி இந்த உலகை அழித்து விடவும் அவனால் முடியும். மனிதனிடம் எத்தனையோ அற்புதமான சக்திகள் இருந்தாலும் தான் பிறந்த பயனை மறந்து தன்னைக் காத்துக் கொள்ளவும் மறந்து தன்னால் தயாரிக்கப்பட்ட பொருள்களில் தானே மயங்கி அழிவுப் பாதையில் செல்கிறான்.



அ. அருள்ரஞ்சன்
ஆண்டு – 7
கொழும்பு இந்துக் கல்லூரி,
இரத்மலானை

மனிதனுடைய பிரத்தியேக உயர்ந்த குணங்களாக விவேகம், பகுத்தறிவு ஆகியவற்றை மனிதனுக்கே உரிய அகங்காரமானது பயனற்றுப் போகச் செய்து விடுகிறது. இந்த அகங்காரத்தை ஒடுக்கி பகுத்தறிவோடு அடக்கத்தை ஒளிரச் செய்வதே தீபாவளித் திருநாளின் பயன்.

நரகாசுரன் துவாபர யுகத்தில் தோன்றி தான் எனும் அகங்காரம் கொண்டு ஆத்திரம் அடைந்து உலக மக்களை அழவைத்துக் கொண் டிருந்தான். அவனை ஒழித்து உலக மக்களுக்குச் சாந்தியை அளித்தார். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா. அகங்காரத்தின் அழிவே தீபாவளியாகக் கொண்டாடப் படுகிறது.

இந்தப் புனிதத் திருநாளில், நாம் எதற்காகப் பிறந்தோம்? தற்போது என்ன செய்து கொண்டிக்கிறோம்? நாம் என்ன செய்ய வேண்டும்? என்பதையெல்லாம் சிந்தித்து நம்முடைய மனத்திலே நரகாசுரன் போன்ற தீய குணங்கள் இருந்தால் அவற்றை அழிக்கக் கண்ண பிரானைப் பிரார்த்தித்து மனிதன் தேவனாக மாற முடியாவிட்டாலும் மனி தனாகவாவது வாழ முயற்சி செய்து இறைவனுடைய அருளைப் பெறுவோமாக.

- ❑ நீங்கள் அமைதியாக உரையாடு வீர்களானால் மற்றவர்களும் உங்களை உணர்ச்சி வசப்பட்டு ஏச மாட்டார்கள்.
- ❑ கடவுளின் அருள் என்பது ஒரு காப்புறுதியைப் போன்றது. அது உங்களுக் குத் தேவையான தருணத்தில் அளவிறந்து உதவுகிறது.

–பகவான் சத்திய சாயி பாபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்யனுக்கும் அருளிய மெய்யடியார் மெய்ப்பொருள் நாயனார்

திருக்கோவிலூரைத் தலை நகராகக் கொண்ட சேது நாட்டை மலாட மரபில் வந்துதித்த மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்களது பரம்பரையே சிவபெருமானிடம் பேரன்பு கொண்டு சிவத்தொண்டு புரியும் சைவபரம்பரையாகும்.

மலாடர் குலம் செய்த மாதவத்தின் பயனாய் மெய்ப்பொருள் நாயனார் தோன்றினார். அவர் சிவபெருமானிடம் பேரன்பு கொண்டவர். சிவ பக்தர்களின் கருத்தறிந்து அன்புடன் தொண்டு செய்வார்.

ஆட்சித் திறமையிலும், அனைத்துப் பகைவர்களையும் வென்ற வீரத்திலும், நீதியும், சத்தியமும் நிலைத்திருக்கும் விதத்திலும் ஆட்சி செய்த அவர், சிவனடியார் திருக்கோலத்தையே மெய்ப்பொருளாகக் கருதி வந்ததால், அந் நாட்டு மக்கள் அவரை மெய்ப்பொருள் நாயனார் என்று அன்புடன் அழைத்துப் போற்றினர்.

அவர் உமையொரு பாகனான உமாமகேஸ்வரன் அருளும் திருக்கோயில்கள் எங்கிருந்தாலும் அங்கெல்லாம் நித்திய பூஜைகளும், வழிபாடுகளும் குறைவற நடைபெறச் செய்தார். அவர் சிவனடியார்களிடத்தே பேரன்பு கொண்டிருந்ததனால், தமது உடமைகளையெல்லாம் சிவனடி யார்களுக்கே உரித்தாக்கி, மகிழ்ச்சியுடன் அளித்து வந்தார்.

பகைவரும் போற்றும் பண்பாளரான மெய்ப்பொருள் நாயனார் மீதும் பகைமை கொண்டான் ஒரு பாதகன். மற்றொரு நாட்டின் அரசனான முத்தநாதன் என்பவன் அவரை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கொள்ள விரும்பினான்.

வளமான சேது நாட்டை தன் நாட்டுடன் சேர்த்துக்கொள்ள எண்ணி, பேராசையுடன் அதன் மீது படையெடுத்து வந்தான். போரில் தோல்வியையே பரிசாகப் பெற்றான்.



இனி தன் படை வலிமையினால் நேர்மையான வழியில் வெற்றி கொள்ள முடியாது என்று உணர்ந்து கொண்ட முத்தநாதன், சூழ்ச்சியால் மெய்ப்பொருள் நாயனாரை வெற்றி கொள்ள நினைத்தான். மெய்ப்பொருள் நாயனார் சிவனடியார்களின் திருக்கோலமே மெய்ப்பொருள் என்று எண்ணி அவர்களிடம் அன்பு செலுத்துவதை அறிந்த முத்தநாதன், தானும் அதே போல் சிவனடியாராக வேடமணிந்து சென்று தனிமையில் நாயனாரைக் கொன்றுவிட வேண்டும் என்று திட்டமிட்டான்.



அ.அருள்வதனா
ஆண்டு – 9ஏ
கொழும்பு இந்துக் கல்லூரி
இரத்மலானை.

திட்டமிட்டபடி திருக்கோயிலூர் வந்த முத்தநாதன் தன் நெற்றியிலும் உடம்பிலும் வெண்ணீறு பூசிக் கொண்டு, தலையில் உள்ள சடைகளைச் சுருட்டி ஒன்றாகக் கட்டிக் கொண்டு, சிவனடியார் போல் வேட மணிந்து கொண்டு, ஓலைச்சுவடியினுள் ஒரு குறுவாளையும் மறைந்து எடுத்துக் கொண்டு அரண்மனைக்குச் சென்றான்.

அரண்மனை சென்ற முத்தநாதனை, சிவனடியார் என்றே நினைத்த வாயிற் காவலர்கள் சற்று விலகியே இருந்து வணங்கி வழிவிட்டனர். அதே போல் அரண்மனையின் ஒவ்வொரு வாயிலிலும் இருந்த காவலர்கள் முத்தநாதனை சிவனடியார் என்றே எண்ணி வணங்கி வழிவிட, இறுதியாக நாயனாரின் பள்ளியறை வாயிலை அடைந்தான் முத்தநாதன்.

பள்ளியறை வாயிலை அடைந்த முத்தநாதனை சிவனடியார் என்று வணங்கிய மன்னரின் மெய்க்காவலன் தத்தன் "சுவாமி! மன்னர் உறங்கிக் கொண்டிருக்கிறார். எனவே சற்று, பொறுத்தருள வேண்டும்" என்றான்.

தத்தன் கூறியதைக் கேட்ட முத்தநாதன், "நான் உங்கள் மன்னனுக்கு வீடுபேறு அளிக்கக்கூடிய மறைபொருள் கூற வந்துள்ளேன். எனவே என்னைத் தடை செய்யாமல் தள்ளி நில்! என்று கூறி தத்தனை விலக்கிக் கொண்டு, மன்னரின் படுக்கையறைக்குள் நுழைந்து விட்டான். மன்னர் மெய்ப் பொருள் நாயனார் அழகான பஞ்சணைமீது படுத்துறங்கிக் கொண்டிருந்தார்.

பஞ்சணை அருகே யாரோ வரும் சத்தம் கேட்டு விழித்த மெய்ப்பொருள் நாயனார் தம் எதிரில் சிவனடி யார் நிற்பது கண்டு, கட்டிலை விட்டு, இறங்கி சிவனடியாரைப் பணிந்து வணங்கி, "சிவனருட் செல்வரே! தங்களது வருகை என்னைப் புனிதமாக்கியது. நான் தங்களுக்குச் செய்ய வேண்டிய பணி ஏதும் இருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறதா?" என்று பணிவுடன் கேட்டார். சிவனடியார் வேடத்தில் வந்த தீயோன் முத்தநாதன், "இறைவன் முன்பு இயற்றியருளிய ஆகம நூல்களுள் முதன்மையானதும், முக்தி தரவல்லதுமான ஒரு நூல் என்னிடம் உள்ளது. அதை உமக்குப் போதிப்பதற்காகவே நான் வந்துள்ளேன்" என்றான்.

அதைக்கேட்டு மனம் மகிழ்ச்சியில் திளைக்க "இதை விடச் சிறந்த பெரும் பேறு எனக்கில்லை. இறைவன் அருளிய அந்த ஆகமத்தை வாசித்தருளி என்னைக் கடைத்தேற்ற வேண்டும்" என்றார் மெய்ப்பொருள் நாயனார்.

உடனே முத்தநாதன் அந் நூலைத் தனிமையில்தான் உபதேசிக்க வேண்டும் என்று கூறி விடவே மன்னர் அரசியை வெளியில் அனுப்பிவிட்டார்.

கிடைத்த தனிமையைப் பயன் படுத்திக் கொண்டு கீழ்த்தரமான எண்ணம் கொண்டிருந்த முத்தநாதன் தான் கொண்டு வந்திருந்த புத்தகக் கட்டைப் பிரித்து, அதனுள் மறைத்து வைத்திருந்த குறுவாளை எடுத்து, கண்மூடி தியானத்தில் இருந்த மன்னரின் நெஞ்சில் குத்திவிட்டான்.

கொடியவனால் குத்துண்டு குற்றுயிராக இருந்த நேரத்திலும், மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் வடிவம் என்ற எண்ணம் கொண்ட மன்னர் அவனை வணங்கி வாழ்த்தியதுடன் தமது மெய்க்காவலனான தத்தன் என்பவனை அழைத்து, "இவரை எவ்வித இடையூறுமின்றி நம் நாட்டின் எல்லையில் விட்டு வா!" என்று கட்டளையிட்டார்.

மன்னரின் கட்டளையை மீற விரும்பாத தத்தன் அவர் சொன்னபடியே புண்ணிய வடிவம் ஏற்று வந்த புல்லுருவி முத்தநாதனை எவ்வித இடையூறும் இன்றி நாட்டின் எல்லையில் கொண்டுபோய் விட்டுவிட்டு, அச் செய்தியை மன்னர் மெய்ப்பொருள் நாயனாரிடம் தெரிவித்தான். அதுவரை தம் உயிரைக் கையில் பிடித்திருந்த மன்னர், சிவனடியார் வடிவில் வந்த முத்தநாதன் இடையூறின்றி சென்றுவிட்டான் என்ற தகவல் தெரிந்ததும். தம் மனைவி மக்களுக்கு அறிவுரை கூறிவிட்டு உயிர் நீத்தார். ஈசன் அருளால் பெரும் பேறு பெற்றார்.

# செருக்கினை ஒழித்து நின்ற சிவராத்திரி

செல்வச்செருக்குக்கும், கல்விச் செருக்குக்கும் எட்டாதது பரம்பொருள் என்பதை விளக்குவது, இலக்குமி நாயகனாகிய திருமாலும், சரஸ்வதி நாயகனாகிய பிரமாவும் இறைவனது அடிமுடி தேடிய கதை. பிரமாவும், விஷ்ணுவும் தங்களில் யார் பெரியவர் என்று வாதித்தனர். வாதம் முற்றிக் கைகலப்பு ஏற்பட்டது. அப்போது இலிங்க வடிவான ஓர் ஒளிப்பிழம்பு ஆகாயத்தையும், பூமியையும் அளாவியதாய் அவர்கள் முன் தோன்றிற்று.

அவர்கள் இருவரும் தங்கள் சண்டையை நிறுத்திவிட்டு 'அவ்வொளிப்பிழம்பின் அடியை அல்லது முடியை யார் காண்கிறார்களோ, அவர்களே பெரியவர்' என்று இருவரும் சங்கற்பஞ் செய்து கொண்டனர். காட்டுப்பன்றி வடிவிற் பூமியைப் பிளந்து கொண்டு விஷ்ணு கீழ் நோக்கிச் செல்ல, அன்னப் பறவை வடிவிற் பிரமா மேலே பறந்து சென்றார். இருவரினது முயற்சியும் பலிக்கவில்லை. "நாங்கள் தோற்றோம்" என்று அவர்கள் அகந்தையொழிந்தனர். இந்த இலிங்கோற்பவ மூர்த்தி வெளிப்பட்ட காலமே மகாசிவராத்திரியாகும்.



எஸ். நிரூஷா
ஆண்டு 10
சைவமங்கையர் கழகம், கொழும்பு 6

மகாசிவராத்திரி மாசி மாதத்திலே தேய்பிறை சதுர்த்தசி திதியிலே வரும் விரதமாகும். நாள் முழுவதும் உணவை விடுத்து, இரவு முழுவதும் கண்விழித்து முழு நேரத்தையும் சிவ சிந்தைனையிலும், சிவகதை கேட்பதிலுங் கழிப்பது புண்ணியமாகும்.

நள்ளிரவுக் காலம் இலிங்கோற்பவ காலமாகும். இக் காலத்திற் சிவதரிசனம் செய்வது மிகவும் விசேடமாகும். சைவ மக்களின் மிக முக்கிய விரதமாக இது விளங்குகிறது. நமது நாட்டுத் தலமாகிய திருக்கேதீச்சரத்திற் சிவராத்திரி வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அடியார்கள் பாலாவியில் நீராடி, ஈர உடையுடன் வெள்ளிக் குடத்தில் நீர் கொணர்ந்து மகாலிங்கப் பெருமானுக்கு அபிஷேகம் செய்யும் காட்சி மனதிற்கினியதொன்றாகும்.

## திருக்குறள்

திருக்குறள் ஓர் உலகப்பிரசித்திபெற்ற நூலாகும். இதனை திருவள்ளுவர்எழுதி இயற்றினார். இதில் பல நல்ல கருத்துக்கள் அடங்கி உள்ளன. திருக்குறைளை எந்த மதத்தவரும், எந்த மொழியவரும் கற்கலாம். இந் நூல் பல மொழிகளில் வெளிவந்துள்ளது.

திருக்குறளை முப்பானூல், பொய்யாமொழி, உத்தர வேதம், வாயுறை வாழ்த்து, தெய்வநூல், தமிழ்மறை, திருவள்ளுவர், பொதுமறை என்னும் எட்டுப் பெயர்களாலும், திருவள்ளுவரை நாயனார், தேவமுற்பாவலர், தெய்வப் புலவர், நான்முகனார், மாதானுபங்கி, பெருநாவலர், செந்நாப்போதார் என்னும் ஏழு பெயர்களாலும் உலகோர் அழைக்கின்றனர்.

திருக்குறளில் 133 அதிகாரமும் 1330 குறள்களும் அடங்கியுள்ளன. திருக்குறளின் அதிகாரங்களை மூன்றாகப் பிரித்துள்ளனர். முதலாவதாக அறத்துப்பால் அடங்கும். இதில் 1 தொடக்கம் 38 வரை உள்ள அதிகாரங்கள் அடங்கும். இரண்டாவதாக பொருட்பால் உள்ளது. இதில் 39 தொடக்கம் 108 வரையுள்ள அதிகாரங்கள் கொண்டது. இன்பத்துப்பால் அல்லது காமத்துப்பால் கடைசியாக அடங்கும். இப்பாலில் 108 தொடக்கம் 133 வரையுள்ள அதிகாரங்கள் அடங்கும்.

நாம் எந்த வேலையையும் ஆரம்பிக்கும் பொழுதும், நாம் இறைவனை வணங்கி விட்டேதான் தொடங்குவோம். அதேபோன்று திருவள்ளுவரும் தொடங்கியுள்ளார் என்பது அவருடைய முதல் அதிகாரமான கடவுள் வாழ்த்தில் இருந்தும் முதல் குறளான 'அகரமுதல எழுத்தெல்லாம்' என்பதிலிருந்தும் தெளிவாக விளங்குகின்றது.

ஆர். சுபாஷினி
ஆண்டு 7 ஏ
இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


குழந்தைகளே! நீங்கள் ஆமை வளர்க்கின்றீர்களா?

ஆமையை நாங்கள் வளர்க்கத் தேவையில்லை ஐயா! கிணற்றிலும், குளத்திலும், கட லிலும் அது தானே வளர்ந்து வருகின்றது.

நீங்கள் எல்லாருமே ஓர் ஆமையை உங்கள் உள்ளத்தில் வளர்த்து வருகின்றீர்கள்.

அது பொறாமை ஐயா!

அப்பர் சுவாமிகள் ஆமையைப் பற்றி ஒரு கதை சொல்கிறார்.




ஆத்மஜோதி நா.முத்தையா

கடலில் ஒரு ஆமை வசித்து வந்தது. அது தினமுங் கடற்கரைக்கு வந்து செல்லும் வழக்கத்தைக் கொண்டிருந்தது. எல்லா ஆமைகளுமே முட்டை இடுவதற்காகக் கடற்கரைக்கு வந்து செல்கின்றன என்பதை அறிந்திருப்பீர்கள்.

இந்த ஆமை ஒரு நாள் மணல் நிலத்தையும் தாண்டி கெட்டியான நிலத்திற்கு வந்து விட்டது. கெட்டியான நிலத்தில் நடக்கும் போது ஒரு சுகம் பேசியது. நீண்ட தூரம் நடந்து விட்டது. நேரமும் இருண்டு கொண்டு வந்தது. எங்கிருந்தோ நாய் குரைக்கிற சத்தமும் கேட்டது.

நாய் அருகே வந்தது. ஆமை ஐந்தையும் உள்ளே இழுத்துக் கொண்டது. நாய் சுற்றிச் சுற்றி மோந்து பார்த்தது. அதற்கு அதன் மணம் சகிக்கவில்லை. நாய் வந்த வழியே சென்று விட்டது. வெகு நேரத்தின் பின் ஆமை மெல்லத் தலையை நீட்டியது.

ஒரே இருட்டு. வந்த வழியையும் தவற விட்டுவிட்டது. வேகமாக நடக்கத் தொடங்கியது. வழியில் ஏதோ ஒன்று தென்பட்டது. தண்ணீர் போலத் தெரிந்தது. அதனுள் குதித்துவிட்டது.




அக் கிணற்றினுள்ளே ஒரு சிறிய ஆமையும் ஒரு தவளையும் வசித்து வந்தன. இந்தக் கடல் ஆமை திடீரென கிணற்றினுள்ளே விழுந்த சத்தம் அந்த இரண்டு பேருக்கும் அணுக்குண்டு விழுந்த சத்தம் மாதிரி இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்த கடல் ஆமையை, கிணற்றாமையும் தவளையும் சுற்றிச் சுற்றி வந்தன. "நீ எங்கிருந்து வருகிறாய்?" – எனக் கேட்டது கிணற்றாமை.

"நான் கடலில் இருந்து வருகிறேன்."

"கடல் எப்படி இருக்கும்?"

"கடலைப்பற்றி நான் எப்படிக் கூறுவேன்?" கடலுக்கு கரையே இல்லை. அவ்வளவு பெரியது.

"நீ ஒரு புழுகன். இந்தக் கிணற்றிலும் பார்க்க உலகில் எங்காவது பெரிதாக இருக்கிறதா? நீ உள்ளே போனால் உன்னை யாருக்கும் தெரியாதே. அவ்வளவு ஆழம்."

இதே நேரத்தில் தவளை ஒரு துள்ளுத் துள்ளிப் பாய்ந்தது. கடல் ஆமையைத் திரும்பிப் பார்த்தது. "நான் இப்போ பாய்ந்தளவு தூரம் உனது கடல் இருக்குமோ?" எனக் கேட்டது.

கடல் ஆமை தனக்குள்ளே சிரித்துக் கொண்டது. இவர்களுக்கு கடலைப்பற்றி விளங்க வைக்க முடியாது. அவர்களோடு ஒத்துப்போனால் தான் சமாதானமாக இருக்க முடியும். "ஓ! பாய்ந்தளவு தூரம் தான் இருக்கும்" – என்று சொன்னது. அந்த மறுமொழி அவ்விருவருக்கும் பெரிய மகிழ்ச்சியை அளித்தது.

இந்தக் கதையை அப்பர் சொன்னதற்கு ஒரு காரணம் உண்டு.

கிணற்றுத் தவளை போலவும் சில மனிதர்கள் இவ்வுலகில் வாழுகின்றார்கள். கிணற்று ஆமை, கடல் ஆமையைப் பார்த்து " இந்தக் கிணற்றுக்குச் சமமாக உனது கடல் இருக்குமா" என்று கேட்டதுபோல....

கடவுள் ஒருவர் இருக்கிறாரா? அப்படி இருந்தால் அவர் என்னிலும் பார்க்கப் பெரியவரோ? என்று கேட்கிறார்கள்.

கிணற்றாமை அறியாமையினால் கடலின் பெருமையை உணர முடியாமலிருந்தது போலும், இம் மனிதர்களும் தமது அறியாமையினால் சிவபெருமானின் பெருமையை அறிந்து கொள்ளுகின்றார்களில்லை.


இக் கதையை அப்பர் சுவாமிகள் ஒரு தேவாரத்தில் கூறுகின்றார். அத் தேவாரத்தைப் பார்ப்போம்.

"கூவல் ஆமை குரைகடல் ஆமையைக்
கூவல் ஒக்குமோ கடல் என்றல்போல்
பாவகாரிகள் பார்ப் பரிது என்பரால்
தேவ தேவன்சிவன் பெருந் தன்மையே."

கூவல் என்றால் கிணறு; குரைகடல் என்றால் ஒலிக்கின்ற கடல்; பாவகாரிகள் என்றால் பாவம் செய்தவர்கள் – என்பது பொருள்.


அப்பரும் ஒரு சிறு கதை எழுத்தாளர் என்பதை இப்போது ஒப்புக் கொள்ளுகின்றீர்களா?

அப்படி நீங்கள் ஒப்புக் கொள்ளாவிட்டால் நீங்களும் கிணற்றுத் தவளைகள் தான்! (நன்றி: அர்ச்சுனா)





கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற்ற பகவான் ஸ்ரீ சத்திய சாயி ஜயந்தி விழாவில் திரு. எஸ். சிவதாசன் சிறப்புரை ஆற்றுகிறார்.



அண்மையில் கொழும்புக்கு வருகை தந்த 'கலைக்குரிசில்' சிவாஜி கணேசன் மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தில் இந்து கலாசார மண்டபத்தைத் திறந்து வைத்து, ஆலய தர்மகர்த்தா பொன். வல்லிபுரம் அவர்களுடன் காணப்படுகிறார்.

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு விழாவை ஒட்டி கொழும்பு இராமகிருஷ்ண மிஷனில் நடைபெற்ற விழாவின் போது சுவாமி விவேகானந்தரை நினைவுறுத்தும் செல்வி சண்முகப்பிரியா அருமைநாயகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த இந்திய முன்னாள் அமைச்சர் K.P. கரண்சிங் கொழும்பு இராமகிருஷ்ண மிஷனின் ஏற்பாட்டின் கீழ் "சுவாமி விவேகானந்தர் 21ஆம் நூற்றாண்டுக்கு வழங்கிய செய்தி" என்னும் தலைப்பில் மிஷன் மண்டபத்தில் உரையாற்றினார். இந் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த இந்திய பதில் தூதுவர் B.S. பிரகாஷ் தலைமையுரை ஆற்றுவதையும் மேடையில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகணானந்தஜி, சிறப்பு விருந்தினர் K. P. கரண்சிங், நன்றியுரை நிகழ்த்திய யோகேந்திரா துரைசுவாமி ஆகியோரையும் காணலாம்.
(படம் : அ. இராமலிங்கம்)




சகோதரிகளான செல்வி அனோஜா நிர்த்திகா, செல்வி ராதிகா ஆகியோரின் வீணை அரங்கேற்றம் அண்மையில் லண்டனில் நடை பெற்றது. இவர்கள் திருமதி கமலினி மனோரஞ்சன் அவர்களின் மாணவியராவர். மகேந்திர ரவிராஜ் – மங்களா தம்பதியினரின் புதல்வியர். இவ்வைபவத்தில் மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதன், திருமதி அம்பிகா தாமோதரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர். கலைஞர்கள் முத்துக்குமாரசாமி சிவராஜப்பா, அருணாசலம் கணநாதன், கந்தையா சிதம்பரநாதன் ஆகியோர் பக்கவாத்தியம் இசைத்தனர். அரங்கேற்றத்தின் போது மாணவிகளுடன் குரு திருமதி கமலினி மனோரஞ்சனும் படத்தில் காணப்படுகிறார்.




லண்டன் கிங்ஸ்லி தமிழ் பாடசாலை தமிழ் விழாவில் "மாஸ்டர்" சிவலிங்கம் அவர்கள் மாணவர்களுக்கு கதை சொல்லி நடித்துக் காட்டுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Concept, Design & Printing : PRINTELL MEDIA, P.O.BOX : 37, DEHIWALA. Tel : 730746

Rs. விலை.
30/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org